

கல்கி

KALKI 25-2-79

75 காசு











ஈரான்

ஈரானில் நாளுக்குநாள் அரசியல் நிலைமை மாறி வருகிறது. கடைசிச் செய்தியின்படி பக்தியார் ராஜினாமா செய்ய கோமினியின் ஆதரவில் பஸர் கான் பிரதம மந்திரி பொறுப்பேற்றிருக்கிறார். பக்தியார் சிறையிலடைக்கப்பட்டிருக்கிறார். இதற்கு முன் நடந்தனவற்றை நேரில் கண்டவர் கூறுகிறார்:

*[திரு. பி. கோபாலகிருஷ்ணன் பெஸ்ட் அண்ட் கம்பெனியில் எலெக்ட்ரிகல் என்ஜினியராக வேலை பார்ப்பவர். டெஹ்ரானில் அமைக்கப்படும் **High Power Line** களுக்காகப் பொறுப்பேற்ற ஜப்பானிய கம்பெனியான சுமிடோமோ எலெக்ட்ரிக் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனிக்குத் தமது நிறுவனத்தால் அனுப்பப்பட்டு ஒன்றரை ஆண்டுகாலமாக டெஹ்ரானில் பணி புரிந்தவர். நெருக்கடியான அரசியல் சூழ்நிலை காரணமாக அண்மையில் டெஹ்ரானிலிருந்து சென்னை திரும்பினார். அவர் சொன்னது:]*



திரு கோபால கிருஷ்ணன்

ஈரான் மன்னர் சிகிச்சைக்காக விடுமுறையில் போவதாகக் காரணம் காட்டி நாட்டை விட்டு வெளியேறினார். போகு முன்னர், தமது ஆட்சிக்குப் பதிலாக மஜ்லிக்கள் சபையில் (நமது நாடாளுமன்றம் போன்றது) எதிர்க் கட்சித்தலைவர்களில் ஒருவரான பக்தியாரைப் பிரதம மந்திரியாகக் கொண்டு மந்திரிசபை அமைக்கச் செய்தார்.

இந்நிலையில் –

ஷாவால் 14 ஆண்டுகளுக்கு முன்பு நாடு கடத்தப்பட்ட இஸ்லாமிய மத போதகரான கோமினி பாரிசிலிருந்து ஈரான் திரும்பியுள்ளதால் அந்நாட்டு அரசியலில் புதிய சூழ்நிலை உருவாகியுள்ளது!

''ஷா இனி ஈரான் திரும்பவே மாட்டார்'' என்று பல வட்டாரங்களிலும் பேசப்பட்டாலும் ஈரானின் எதிர்கால அரசியலில் ஷாவுக்கு முக்கியமான பங்கு உண்டு என்றே நம்பலாம். ஈரானின் வளர்ச்சிக்கு ஷா எவ்வளவோ செய்துள்ளார். முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களில் பெரும்பாலோரும் கிராமப்புறங்களில் வசிப்பவர்களில் பெரும் பகுதியினரும் ஷாவை ஆதரிக்கின்றனர். ராணுவத்திலும் அவருக்குச் செல்வாக்கு இருக்கிறது.

''பக்தியாரின் ஆதரவாளர்களும், கோமினியின் ஆதரவாளர்களும் ஒன்று கூடி ஷாவை அரசாட்சியிலிருந்து இறக்க வேண்டும் என்று போராடினவர்கள்தாம்! ஆனாலும் ஷாவே பக்தியாரைத் தேர்ந்தெடுத்து அவரது தலைமையில் அரசாங்கத்தை அமைத்ததால் பக்தியாரை ஷாவின் கூலியாள் என்று கோமினியும் அவரது ஆதரவாளர்களும் கருதுகின்றனர்.

''பக்தியார் முற்போக்குச் சிந்தனையாளர். நிர்வாகத் திறமை உள்ளவர். கோமினி இஸ்லாமிய மதகுரு. அவரது நோக்கமான இஸ்லாமிய மதசார்பான அரசு முறைக்கு பக்தியார் ஒப்புக் கொள்ள மாட்டார். கோமினி பக்தியாரை எதிர்ப்பதற்கு இது முக்கிய காரணம்.

''பெண்கள் புகை பிடித்தல், மது அருந்துதல் நவநாகரீக உடைகளில் உல்லாசமாக ஸ்கூட்டர்களிலும், கார்களிலும் செல்வது போன்ற காட்சிகள் டெஹ்ரானில் சகஜமானவையாகும். கோமினியின் இஸ்லாமிய அரசு ஏற்படுமானால் மக்களின் வாழ்க்கை முறைகளில் ஏராளமான விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் புகுத்தப்படும். தற்போதைய ஈரான் நாட்டின் சூழ்நிலையில் இது

கிரிக்கெட் கற்கலாம்! 25

சொல்: கே. சந்திரசேகர்

படம்: ராஜ..

தயாரிப்பு: குன்றுமணி

லெக் ஸ்பின்னருக்கு கை கண்ட ஆயுதம் 'கூக்ளி'





இளம் பயிற்சியாளர்களுக்கு: வி.வி. குமார் 'கூக்ளி' வீசும் முறையைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஒத்து வராது. இதனை உணர்ந்தவர்களும், ஷாவின் முற்போக்கு விதிமுறைகளில் ஊறினவர்களும் கோமினியை எதிர்த்து பக்தியாருக்கு ஆதரவு காட்டுகின்றனர். ராணுவத்திலும் பக்தியாருக்குத்தான் ஆதரவு அதிகம் உள்ளது. முல்லாக்களும் பழைமையாளர்களும் கோமினிக்கு ஆதரவு அளிக்கின்றனர்.

''பக்தியாரின் அரசு இருக்கும் போதே டெஹரானின் தெற்குப்பகுதியைத் தளமாகக் கொண்டு கோமினி தனது இஸ்லாமிய மத அரசை அமைக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். கோமினியின் உருவத்தைக் கொண்ட கரன்ஸி நோட்டுகள் கூட வெளியிடப்பட்டிருப்பதாக ஈரான் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன.

''இம்மாதிரி பக்தியாருக்கும், கோமினிக்கும் நேரடியான மோதல் உண்டாகி, இரு அரசுகளும் டெஹ்ரானையே தளமாகக் கொண்டு செயல்படுவதால் நிலைமை சீர்கெட்டு எல்லா அந்நிய நாட்டினரும் ஈரானை விட்டு வெளியேறக் காரணமாகியுள்ளது. நாங்களும் வேலைகளை அரைகுறையாக விட்டு விட்டு வந்து விட்டோம்.

''நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவுக்குக் கேட்கவே வேண்டாம். வங்கிகளில் பணம் கிடையாது. 'டெபாஸிட்' வைத்திருப்பவர்களுக்கு 'காசோலை' மூலம் கேட்கப்படும் பணத்தில் மிகக் குறைவான பகுதியே அளிக்கப் படுகிறது. உணவுப் பொருள்கள் உட்பட எல்லாமே இறக்குமதி செய்யப்படுகின்றன. விலைவாசிகள் ஏகமாக ஏறிக் கிடக்கின்றன. கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் அரசியல் போராட்ட தளங்களாக மாறியுள்ளன. மாணவர்கள் வெடிகுண்டுகள் கூடத் தயார் செய்கின்றனர்.

''எந்த நிமிடமும் ரத்த ஆறு ஓடலாம். அரசியல் தலைவர்களின் உயிருக்கே கூட ஆபத்து என்று பலமாகப் பேசப்படுகிறது.''

பேட்டி: நாயகன்

நகைச்சுவை ஆராய்ச்சி!

டெல்அவிப் பல்கலைக் கழகத்து டாக்டர் அன்வர் ஸியு நகைச்சுவையைப் பற்றி இரண்டரை ஆண்டு காலம் ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

அவரது ஆராய்ச்சி முடிவில் சில பகுதிகள்:


சிரிப்பு, அறிவை வளர்க்கிறது. வகுப்பில் ஆசிரியர் நகைச்சுவையுடன் பாடம் சொல்லிக் கொடுத்தாரானால் அது சுலபமாக மாணவர் மனத்தில் பதியும்.

பெண்களைவிட ஆண்கள்தான் தமாஷ் பேர்வழிகள்.

தமாஷ் பேர்வழிகள், தங்கள் தாயை மிகவும் நேசிக்கிறார்கள்; தந்தையை வெறுக்கிறார்கள்.

—ஃபன்னி ஃபன்னி வேர்ல்டு.

- சங்கர்.



கல்கி

1979 பிப்ரவரி 25
காளயுக்தி மாசி 13

மலர்: 37 இதழ்: 30



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

பக்தவத்சலம்

பெரியவர் பக்தவத்சலம் திமுக திருச்சி மகாநாட்டிலும் அ. இ. அதிமுக கோவை மகாநாட்டிலும் நிறைவேறிய தீர்மானங்களைக் கிண்டல் செய்திருக்கிறார். 'தேசிய மொழிகள் பதினைந்தையும் மத்தியில் ஆட்சி மொழிகளாக ஏற்குமாறு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்கிறார்களே, இப்படிச் செய்தால் ஒரே குழப்பமல்லவா நிலவும்?' என்று கேட்டிருக்கிறார்.

திருச்சி தீர்மானம் பதினைந்து மொழிகளும் ஆட்சி மொழியாக வேண்டும் என்று மட்டும் சொல்லவில்லை, அப்படி ஆட்சி மொழியாகிற சூழ்நிலை ஏற்படும் வரை இன்றுள்ளது போல் ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்றும் சொல்கிறது. பெரியவர் பின்னதை விட்டு விட்டு முன்னதை மட்டும் பிடித்துக் கொண்டார்.

ஒரு பிராந்திய மொழியான ஹிந்திக்கு மட்டும் விசேஷ அந்தஸ்து கொடுத்து மேலாதிக்கம் செலுத்த அனுமதிப்பதால்தான் எல்லாத் தகராறும். 'ஹிந்திக்கு மத்திய ஆட்சி மொழி அந்தஸ்து தந்தால் தமிழுக்கும் ஏன் தரக் கூடாது? வங்க மொழிக்கும் ஏன் தரக் கூடாது?' என்ற கேள்விகள் எழுகின்றன. அந்தந்தப் பிராந்தியங்களில் பிரதேச மொழி ஆட்சிமொழியாக இருக்கும்; மாநிலங்களுக்கிடையிலும், மத்திய மாநிலத் தொடர்புக்கும் அனைவருக்கும் பொதுவான ஆங்கிலம் இந்நாள் வரை இருந்து வந்திருப்பது போல் இனியும் தொடர்ந்து என்றென்றும் நீடிக்கும் என்ற நியாயமான நிலை தோன்றுமானால் — இருமொழித் திட்டம் ஏற்கப்படுமானால் — பதினைந்து மொழித் திட்டத்தை யாரும் வற்புறுத்தப் போவதில்லை.

'ஹிந்தித் திணிப்பை எதிர்த்தவர்கள் ஆங்கிலத்தை எப்படித் திணிக்கப் பார்க்கலாம்?' என்கிறார் பக்தவத்சலம். ஆங்கிலத்தை இன்று யாரும் திணிக்கவில்லை. எத்தனையோ ஆண்டுகாலமாக இருந்துவரும் நிலை இனியும் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்கிறோம் அவ்வளவுதான்.

சர்வதேசத் தொடர்பு மொழியான ஆங்கிலத்தைக் கற்பது திணிப்பு அல்ல, புத்திசாலித்தனம். அதை அனைத்திந்தியத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்துவது திணிப்பு அல்ல, சமதர்மம்.

பக்தவத்சலம் எந்த இந்திரா காங்கிரஸோடு தமது காங்கிரஸ் இணைந்து விட வேண்டும் என்று துடிக்கிறாரோ அந்த இந்திரா காங்கிரஸின் தலைவர் இந்திரா அம்மையாரே ஜனதாவின் மொழிக் கொள்கை பற்றி ஐயப்பாடு தெரிவித்திருக்கையில் பக்தவத்ஸலமோ, 'ஹிந்தி திணிப்பு இல்லை, திமுகவும், அஇஅதிமுகவும் சும்மா பூச்சாண்டி காட்டுகின்றனர்' என்ற ரீதியில் பேசுகிறார். விந்தைதான்!

யாதவ்

உ. பி. முதலமைச்சர் யாதவ் குத்தப்பட்டது மிகவும் விசனிக்கத்தக்க, கண்டிக்கப்பட வேண்டிய விஷயம். அவர் உயிர் தப்பியதில் நிம்மதியும் மகிழ்ச்சியும்



இளம் வயதில் பிசாசு பிடித்த பாத்திரத்தில் நடிப்பதற்கென்றே லிண்டா பிளேர் பிறந்தவர் போலும்! அதனால்தான் எக்ஸார் ஸிஸ்ட் II லும் தான் முன் நடித்த ரீகன் பாத்திரத்திலேயே வருகிறார். இவரது சஞ்சலப்பட்ட இரவுக் கனவுகளும், அதன் விளைவாய்ப் பல மாடிக் கட்டிடத்தில், அவர் தடுமாறிச் செல்லும் கட்டமும், அதற்கான இசையும் நம்மைப் பயமுறுத்தும். சதா பறப்பது போன்ற மனநிலை உள்ள



இவருக்கு மனோதத்துவ முறையில் சிகிச்சை அளிக்கப் படுகிறது. படப்பிடிப்புக்கு மட்டுமல்லாமல் - உண்மையாகவே சிகிச்சை தரப்பட்டதாகச் சொல்கிறார்கள்! நீண்ட இடைவெளிக்குப் பின்னர் திரையில் தோன்றுகிறார் ரிச்சர்ட் பர்ட்டன். கதையின் பயங்கரத் தன்மையை அதிகரிக்க ஏராளமான வெட்டுக் கிளிகள் கும்பலாகச் செல்லும் கட்டம் படத்தின் உச்சகட்டமாக எடுக்கப் பட்டுள்ளது.

''த. மு. ரா.''

அடைகிறோம். கொலை முயற்சியில் இறங்கியவன் சட்டப்படி தண்டனைக்குள்ளாவான் என்பதில் ஐயமில்லை.

ஜனநாயக அரசியலில் வாதப் பிரதிவாதங்கள் மூலம் மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டுமேயொழிய வன்முறை எட்டிப்பார்ப்பதைக் கூட அனுமதிக்க முடியாது.

உ. பி. ஜனதா ஆட்சியில், ஜனசங்கப் பிரிவுக்கும் பி. எல். டி. பிரிவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமைகள் விகவரூபமெடுத்துவிட, முதலமைச்சர் யாதவ் ஜனசங்க ஆதரவு அமைப்பான ஆர். எஸ். எஸ்ஸைத் தடை செய்வேன் என்றார். இதனைப் 'பழிவாங்கும் முயற்சி' என்று ஜனதா கட்சித் தலைவர் சந்திரசேகருமே வன்மையாகக் கண்டித்தார். இரண்டு நாட்கள் கழித்து ஆர். எஸ். எஸ். அனுதாபி ஒருவர் வெறி கொண்டு யாதவ்வைத் தாக்கியுள்ளார். அதன் மூலம் ஆர். எஸ். எஸ்ஸுக்குத் தடை விதிக்க எண்ணிய உ. பி. அரசுக்கு எண்ணத்தைச் செயலாக்கப் பலமளித்து விட்டார். ஆர். எஸ். எஸ்ஸை முழுமையாகத் தடை செய்யாவிட்டாலும் அதன் அணிவகுப்புகளுக்குத் தடை விதித்துவிட்டது உ. பி. அரசு.


வாஜ்பாய்

சென்சீனாவுக்குப் பயணப்படுமுன்னர் வாஜ்பாய், 'நல்ல விளைவுகள் ஏற்படும் என்று நம்பிக் கொண்டு செல்கிறேன்' என்று கூறியுள்ளார்.

அவர் கிளம்பும்போது மாலை அணிவித்து வழி அனுப்பிய ஜனதாக் கட்சிக்காரர்கள் சிலர், 'அறுபத்திரண்டை மறவாதீர்கள்' என்றும் 'சீனத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள நிலப்பகுதிகளைத் திரும்பக் கொண்டு வாருங்கள்' என்றும் கூறியுள்ளனர்.

அது அவ்வளவு சுலபம் என்று நாம் நினைக்கவில்லை. வாஜ்பாயும் அவ்விதம் எண்ண மாட்டார். சீனத்தலைவர்கள் இவ்விஷயத்தில் விட்டுக் கொடுத்து விட்டால் அது உலக மகா அதிசயங்களைத் தூக்கியடிப்பதாக இருக்கும்.

எல்லைப் பிரச்னை ஒரு புறமிருப்பினும் இரு நாடுகளிடையேயும் வேறு சில துறைகளில் ஒத்துழைப்பும் நேசப்பான்மையும் வளர்த்துக் கொள்வதில் தவறில்லை. ஆனால் ஒத்துழைப்புக்குத் தேர்ந்தெடுக்கும் துறைகளில் எச்சரிக்கை தேவை. நேசப்பான்மை என்ற பெயரில் சீனம் நம்மை ஏமாற்றுவதற்கு இடமளித்துவிடக் கூடாது. ஒருமுறை ஒரு பிரதமர் செய்த இமாலயத் தவறு அடுத்து வருகிறவர்களுக்குப் பாடமாக அமைய வேண்டும்.


இந்தியா
பஞ்ச சீலம்
சீனா
நல்லுறவு
பஞ்ச சீலம்
எல்லைப் பிரச்னை
உ.பி.
ஹே.... எனக்கென்ன பத்திரமா நான் இருக்கேன்
பீஹார்
கர்பூரி தாகூர்
வருகிறது! பட்ஜெட் வண்ணத் திரைக் காவியம்!
வந்துவிட்டது! பட்ஜெட் எதிர்ப்பு வர்ணஜால திரை ஓவியம்!
வருகிறது! ட்ஜெட் ண்ணத் திரைக் காவியம்!

தாளிப்பு



சில நாட்களுக்கு முன்பு சூரத்திலிருந்து ஒரு செய்தி, பேப்பரில் வந்திருந்தது. விமானம் மோதிப் பெண்மணிக்குக் காயம்.

அந்தப் பெண்மணி வானத்து தேவதையாக இருந்து, பறந்து சென்று கொண்டிருந்த போது விமானம் அவர் மீது ஏறிவிட்டதா என்றால் இல்லை.

சூரத்துக்கு அருகில் உள்ள மகடல்லா விமான தளத்தின் ரன்–வேயில் அவள் தன் கைக்குழந்தையுடன் நடந்து சென்று கொண்டிருந்தாளாம். அப்போது ஒரு விமானம் அவர் மீது மோதிப் பலத்த காயம் ஏற்படுத்தியதாம்.



விமானத்தை 1911ம் ஆண்டு வாக்கில் எப்படிக் குறிப்பிட்டார்கள் தெரியுமா? 'மேல் பறக்கும் மோட்டார் கார்' என்ற தலைப்பில் கும்மிப்பாடல் இயற்றியுள்ளார்கள்.

'ஒற்றியூர் ஜனங்கள் கண்டாராம் திரு
மயிலாப்பூர் ஜெனமும் பார்த்தாராம்
மற்றுமுள்ள சென்னை ஜனங்களெல்லாம் வீட்டில்
மகிழ்ச்சியைக் கண்டு புகழ்ந்தாராம்!'

என்ற வரிகள் இந்த அதிசய மோட்டார் காரைக் கண்டு மக்களிடம் ஏற்பட்ட பரபரப்பைத் தெரியப்படுத்துகின்றன.

விமானம் என்றதும் ஒரு சுவையான துணுக்கு நினைவுக்கு வருகிறது.

1870'ம் ஆண்டு மில்டன் ரைட் என்ற பாதிரி, ஒரு கல்லூரி முதல்வருடன் பேசிக் கொண்டிருந்தார்.

''மனிதனால் கண்டுபிடிக்கக் கூடியவை எல்லாவற்றையும் கண்டு பிடித்தாகி விட்டது. இனிமேல் கண்டு பிடிக்கக்கூடிய விஷயங்களே இல்லை'' என்றார் பாதிரி.

அதற்குக் கல்லூரி முதல்வர், ''அப்படிச் சொல்லாதீர்கள். இன்னும் ஐம்பது வருஷங்களில் பறவைகளைப்போல் மனிதனும் ஆகாயத்தில் பறப்பான்'' என்றார்.

''என்ன சொன்னீர்கள்? தேவதைகள் மட்டும் செய்யக் கூடிய காரியமல்லவா, வானில் பறந்து செல்வது? தேவதைகளுக்குச் சமமாக மனிதன் ஆவானா? நடக்காத காரியம்'' என்றார் பாதிரி.

இந்தப் பாதிரியின் இரண்டு பிள்ளைகள்தான், ஆர்வில் ரைட், வில்பர் ரைட் (விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள்!)



ரயில்வே டைம் டேபிள் மாதிரி, உலக விமான சர்வீஸ் பற்றி 'ஏபிசி வொர்ல்ட் ஏர்வேஸ் கய்ட்' என்று ஒரு புத்தகம் மாதா மாதம் வெளியாகிறது. சென்னை நகர டெலிபோன் டைரக்டரி அளவு இருக்கும் இதைப் புரட்டினால் மலைப்புத் தட்டுகிறது. எத்தனை விமானக் கம்பெனிகள்? எத்தனை வித விமானங்கள். (150 வித விமானங்களுக்குமேல் இருக்கின்றன!)

1903'ம் ஆண்டு டிசம்பர் 17'ம் தேதி தான் முதன் முதலில் மனிதன் பறந்தான். ரைட் சகோதரர்களின் குட்டிவிமானம் ஆகாயத்தில் சரியாகப் பன்னிரண்டு செகண்டுகள் மிதந்து ஒரு புதிய சாதனையைத் துவக்கி வைத்தது.



மனிதனால் பறவை மாதிரி பறக்க முடியுமா? அப்படிப் பறக்கக்கூடிய திறமை ஒருவனுக்கு வந்து விட்டால் என்ன ஆகும்? இந்த அதிசய சக்தி மனிதனின் வாழ்க்கையில் என்னென்ன மாறுதல்களை ஏற்படுத்தும்? — இப்படிப் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, 'ஃப்ளையிங் யார்க்ஷைர்மேன்' என்ற தலைப்பில் ஒரு நாவலை ஒருவர் எழுதியிருக்கிறார்.

தமாஷான, சுவையான நாவல்.

அந்த ஆசாமி படும் அல்லல்களையும் குழப்பங்களையும் சிறந்த கற்பனையுடன் எழுதியிருந்தார் ஆசிரியர். கடைசியில் அவன் பறக்கும் சக்தியை இழந்து விடுகிறான். அப்போதுதான் அவனுக்கு நிம்மதி கிடைக்கிறது!

''என், பையன் தா, தைன்னு பறக்கிறான்.''

''ஏர்போர்ட் சினிமாவுக்குப் போகணுமாம்!''



'ஷாலிமார்' திரைப்படக் கதை, படம் வெளியாவதற்குப் பல மாதங்களுக்கு முன்பே ஆங்கிலம், ஹிந்தி, உருது ஆகிய மொழிகளில் மலிவு பதிப்பாகவும், லைப்ரரி பதிப்பாகவும் வெளியாயிற்று.

இப்போது 'ஷாலிமார் படம் எப்படி உருவாக்கப்பட்டது' என்ற ஒரு புத்தகத்தை வெளியிடப் போகிறார்களாம்.

'ஷாலிமார்' என்ன அப்படிப்பட்ட பிரமாதமான சாதனையா?



கடுகு என்று அலட்சியம் வேண்டாம்!



கடுகு ஒரு சிறந்த மருந்துப் பொருள். ஜீரணத்திற்கு உதவக் கூடியது மட்டுமல்ல. தோல் வியாதிகளையும் போக்கக் கூடியது.

பாரிச வாயுவிற்குக் கடுகு ஒரு நிகரற்ற மருந்து.

மட்டை நார், எல்லாம் உரிக்கப்பட்ட தேங்காயின் 'கண்' ஒன்றின் வழியாக ஏழெட்டு ஸ்பூன் கடுகைப் போட்டுக் கண்ணை அடைத்து விட வேண்டும். இதை அப்படியே வாழை இலையில் சுற்றி அடுப்பின் மேல் வைத்துக் காய்ச்ச வேண்டும். தேங்காய் ஓட்டில் சூடு காரணமாக விரிசல் ஏற்பட்டதும், அடுப்பிலிருந்து இறக்கி ஆற வைக்க வேண்டும். பிறகு காயை உடைத்து, உள்ளே இருக்கும் தேங்காய், கடுகு ஆகியவைகளைச் சுரண்டி எடுத்து அதே அளவு வெல்லத்துடன் சேர்த்து உரலில் போட்டு இடிக்க வேண்டும். எலுமிச்சம்பழம் அளவு உருண்டைகளாக உருட்டி வைத்துக் கொண்டு, தினமும் ஓர் உருண்டை சாப்பிட்டால், எப்பேர்ப்பட்ட பாரிச வாதமும் குணமாகும்.

ஆதாரம்: தி இண்டியன் ரிவ்யூ.

''கடுகு.''



இந்தியாவில் முழுக்க முழுக்க சினிமாச் செய்திகளை மட்டும் வெளியிடும் பத்திரிகைகள்: 630. இதில் 45 ஆங்கிலத்தில் வெளியாகின்றன—



— கடுகு

"வனிதா, சீக்கிரம் வந்து விடு. குறுக்குத் துறை சுப்ரமண்ய ஸ்வாமிக்குப் போய் அர்ச்சனை செய்து கொண்டு வா'' என்ற அம்மா, மகளின் நெற்றிக்குத் துளி விபூதியைக் கீற்றாக இட்டு விட்டாள்.

மகளின் அழகுக்குத் திருஷ்டி பட்டு விடுமாம்.

மாலை பஸ் பிடித்துக் குறுக்குத் துறைக்குப் போனாள். பஸ்ஸின் ஓட்டத்திலும், இறங்கும் பொழுதும், சுந்தரின் பார்வை தன்னைத் தழுவுவதைப் போல இருப்பதை அவள் உணர்ந்தாள். காலை ஸ்வீட் பேக்கெட்டை அவனிடம் நீட்டும்பொழுதே அவன் அந்தப் பார்வையால் அவளைத் தழுவி விட்டான்.

அவள் குறுக்குத் துறை சுப்பிரமண்யஸ்வாமியின் ஆலயத்தில் நுழையும்பொழுது, ஸந்தியா கால பூஜை நடந்து கொண்டிருந்தது. அர்ச்சனையை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள். இன்னும் இருள் பரவவில்லை.

மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. மாலையில் அலுவலகத்திலிருந்து வந்ததுமே அம்மா கடிதம் ஒன்றை நீட்டினாள். டெல்லியிலிருக்கும் அத்தை மகன் பிரஸன்னாதான் எழுதி இருந்தான்.

அவனைப் பார்த்துக் குறைந்தது எட்டு ஆண்டுகளாவது இருக்குமா? கலகலவென்று பேசிக் கலாட்டா செய்வான். அத்தை டெல்லியிலிருந்து வந்த பொழுது தன்னுடன் அழைத்து வந்திருந்தாள்.

அப்பொழுதே வீட்டில் அவர்களை இணைத்துப் பேசிச் சிரித்தார்கள். அதற்குப் பலமாக அவள் அப்பா இருந்தார். இப்பொழுது இல்லை. அதனால் அந்த உறவுக்குப் பலமில்லாமல் போய் விடுமோ என்ற பயம் அம்மாவின் நெஞ்சில் கனன்றதுண்டு. அத்தை அவளது அழகை — புத்திசாலித்தனத்தை மனத்தில் எடை போட்டுக் கொண்டது அவர்களுக்குத் தெரியாது.

அவனது வருகையால் ஏதாவது உறவு ஏற்பட வழி இருக்குமோ? இருக்கும் என்றுதான் அம்மா நினைத்தாள். வாய் விட்டுப் புலம்பினாள். இதனால் வனிதாவின் குழப்பம் தான் அதிகரித்தது. பிரஸன்னா சென்னை வரை ஏதோ வேலையாக வரப் போகிறான். வந்தவன் வெறும் உறவு ஞாபகம் வரவோ, இல்லை உறவு தொடரவோ திருநெல்வேலிக்கு வந்து நான்கு நாட்கள் தங்கப் போகிறான். ஆனால் நான்கு தினங்களுக்கு முன்பு அலுவலகத்தில் —

'அவசரம்' என்று குறிக்கப்பட்ட பைல் ஒன்று அவள் பார்வைக்கு வந்தது. பணியாள் தான் எப்பொழும் கொண்டு வைப்பான். ஆனால் அன்று மேலதிகாரி சுந்தரே அவள் மேஜையின் மீது வைத்து விட்டுப் போனான். ''வனித், சீக்கிரம். இன்னும் அரை மணியில் பார்த்து முடித்து நீயே என்னிடம் கொண்டு வந்து கொடு.''

கை வேலையை முடித்து விட்டுப் பைலைப் புரட்டினாள். பைலின் இரண்டு தாளைப் புரட்டியதுமே ஒரு கவர் பார்வையில் நிரடியது. கவரின் மேல் அவள் பெயர் கையால்—எழுதப்பட்ட 'வனிதா' என்ற பெயர்ப் பொறிப்பு. பைலில் ஏது கவர்? அவசரம் அவசரமாகப் பிரித்தாள். நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. சுந்தர்தான் சுருக்கமாக எழுதி இருந்தான்.

அன்புள்ள வனிதா,

ரொம்ப ரொம்ப யோசித்த பின்னர்தான் இந்தக்கடிதத்தை உனக்குத் துணிவாக எழுதுகிறேன். பல முறை என் உள்ளத்தை உன்னிடம் சொல்ல முயன்றேன். சொல்வதைக் காட்டிலும் எழுதுவது ரொம்பச் சுலபம் என்பதால் எழுதியே விட்டேன். உன் மனம் எப்படியோ?

வனித், இன்னுமா நீ புரிந்து கொள்ளவில்லை? நீ சம்மதித்த பிறகே, என் பெற்றோரிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன். என் அன்பே, விரைவில் பதிலைச் சொல்வாயா? என் அன்பு இதயம் உன்னிடம்,

உன் அன்பன்,
சுந்தர்.

நிஜவாலயம்

லட்சுமி ராஜரத்தினம்

'சுந்தர் உங்களுக்கா என்னிடம் இப்படி ஓர் இது?'

மீண்டும் பைலைப் புரட்டினாள். அதில் அவள் செய்வதற்கோ, பார்ப்பதற்கோ எதுவுமே இல்லை. இந்தக் கடிதத்தைத் தருவதற்குக் கையாண்டிருக்கும் தந்திரம் இது. என்ன பதிலை எழுதுவது? அந்தக் கடிதத்தைக் கைப்பையில் வைத்துக் கொண்டாள். பதில் எழுதுவதுதானே மரியாதை?

அதனால் சிறு கடிதம் ஒன்றை எழுதிக் கவரில் வைத்து மூடினாள்.

டியர் சுந்தர்,

இதைப் படித்தேன். நான் சிறிதும் இக்கடிதத்தை எதிர்பார்க்கவில்லை. ஆனால் சில மாதங்களாகவே தங்கள் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களைக் கவனித்தேன்.

ஒரு பதினைந்து தினங்களை யோசித்துப் பதில் சொல்லப் போதுமான நேரமாக எடுத்துக் கொள்கிறேன். மன்னிக்கவும்.

தங்களன்புள்ள,
வனிதா.

பைலை அவன் அறைக்குப் போய் மேஜைமீது வைத்த பொழுது, அவன் அவள் முகத்தையே பார்த்தான். வறண்ட நிலத்திற்கு மழை வராதா என்று பார்க்கும் பார்வை. 'வனிதா, என்ன சொல்லப் போகிறாய்?' என்று கண்கள் கேட்டன.

''ம்... பார்த்தேன்.'' என்றவள், விடுவிடென்று தன்னறைக்குள் வந்து விட்டாள்.

நீண்ட நேரம் நெஞ்சின் துடிப்பு ஓயவில்லை.

ஆனால் இன்று காலையில் அவன் ஸ்விட் கொடுத்துப் பேசிய பொழுது, அவளைப் போக விடவில்லை. அவளால்தான் அவன் முகத்தைப் பார்க்க முடியவில்லை. மேஜையின் மீது ஊர்ந்தன கண்கள்.

''வனிதா, என் நினைப்புக்கள், ஆசைகள் எல்லாம் தவறாக இருந்தால் நீ தாராளமாகச் கட்டிக் காட்டலாம். சில மாதங்களாக என் மனத்தில் உழன்று மறைத்து வைத்துக் கொண்டிருந்த எண்ணங்களைத் தான் உன்னிடம் சொன்னேன். உன் மீது நான் கொண்ட அன்பு சத்தியமானது. நீ உனக்குத் தேவையான நேரத்தை எடுத்துக் கொள். நீ போகலாம்.''

—இதைக் கேட்கும்பொழுது பிரஸன்னாவின் கடிதம் வந்திருக்கும் என்று தெரியாதே! அதனால் மனத்தில் குழப்பம் இல்லை. தன்னை ஒருவன் காதலிக்கிறான் என்ற பேரின்பம் மட்டும் இருந்தது. ''முடிவெடுக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள். திருமணம் என்பது நீண்ட காலத் தொடர்பு உடையது. பிறகு அதை மாற்ற முடியாது. அதனால்தான் கேட்கிறேன்.''

அவள் சொல்லி விட்டு வந்து விட்டாள். ஆனால் வீட்டுக்கு வந்ததும் பிரஸன்னாவின் வருகையைத் தாங்கிய கடிதம். பிரஸன்னா கடிதத்தைச் சென்னையிலிருந்தே எழுதியிருந்தான். அதனால் அவன் நாளையோ அதற்கு மறு நாளோ வந்து விடுவான்.

வாசலில் நுழைந்ததுமே நடையில் கனத்த பூட்ஸுகள் கிடந்தன. 'ஓ, பிரஸன்னா வந்துவிட்டானா?' அவளைக் கண்டதுமே அவனது கலகலப்பு கட்டவிழ்த்துக் கொண்டது. ''மாமி வனிதா வந்து விட்டாள். என்ன, வனிதா, கோவிலையே பேர்த்து எடுத்துக்



கொண்டு வந்து விட்டாயா? எவ்வளவு நேர மாகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.''

''ஓ... ஸாரி அத்தான்!''

அம்மா ஸ்வீட் நிறைந்த தட்டைக் கொடுத்து வைக்கச் சொன்னாள்.

''நான் வரப் போறேன்னு தெரியுமா? இனிப்பெல்லாம் அமர்க்களப்படுகிறதே?''

''இன்று என் பிறந்தநாள் அத்தான்!'' என்றாள் வனிதா, நாணத்துடன்.

''ஓஹோஹோ... இதை முன்னால் மாமி சொல்லி இருக்க வேண்டாமா? மாமி, இங்கே சமைக்க வேண்டாம். வனிதாவின் பிறந்த நாளை ஹோட்டலிலேயே 'செலபிரேட்' பண்ணப் போகிறேன். வனிதாவும், நானும் ஹோட்டலுக்குப் போகப் போகிறோம்.''

அவன் பேசும்பொழுது அவனையே கவனித்தாள் வனிதா. சுந்தரை விட அழகுதான். சுந்தரின் அமைதி இவனிடம் இல்லை. தற்கால இளைஞரிடம் குடி கொண்டிருக்கும் ஆரவாரமும், வேகமும் பிரஸன்னாவிடம் இருந்தன.

வனிதா சமையல் அறைக்குள் வந்தாள். ''அம்மா, எப்படியம்மா அத்தானுடன் தனியாப் போறது?'' என்று முணு முணுத்தாள்.

''போனால் என்னடி? உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிற உறவு உள்ளவன் தானேடீ? அத்தை ஒருவேளை நீ எப்படி நடந்துக்கறே, என்னன்னு பார்த்துக் கொண்டு வரச் சொல்லியிருப்பாள். நீ சகஜமா, புத்தி சாலியா நடந்துக்கோ. உன் கவலைதானே என்னை உருக்குகிறது''? என்று தழு தழுத்தாள்.

இருவரும் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக ஒரு பிரபல ஹோட்டலுக்குப் போனார்கள். அவளைத் திணறத் திணற வைக்கும் வகையில் உணவு வகைகள். வாயில் மீட்டா பீடா மணக்க மணக்க இருவரும் வெளியே வந்தார்கள்.

''வனித்! உன் பிறந்த நாளைக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டுமே?'' தாடையைத் தடவிக் கொண்டு சிந்தித்தவன், அதே வரிசையில் இருந்த கலைப்பொருள் காட்சிச்சாலைக்குள் நுழைந்தான். வனிதாவும் மௌனமாக அவனுடன் சென்றாள். பல பொருட்களை எடுக்கச் சொல்லிப் பார்த்துத் தள்ளி, கடைசியில் நாகப் பாம்பின் தோலால் ஆன அழகுப்பை ஒன்றை வாங்கினான்.

கவுண்டரில் அவன் பணத்தைக் கொடுக்கப் பர்ஸைத் திறந்தான். ஹிப் பாக்கெட்டிலிருந்து பர்ஸை ஸ்டைலாக உருவி நோட்டுக்களை உருவினான். அவள் மௌனமாக அவனைக் கவனித்தபொழுது, பார்வையில் பர்ஸின் ஓரத்தில் செருகிய பெண்ணின் புகைப்படம் மின்னலாக விழுந்து மறைந்தது. அந்த மின்னலில் – பார்வை சரியில் உருவம் சரியாகப் பதியவில்லை.

வெளியே வந்து வீட்டுக்குப் போகும் பொழுது அவள் அவனுடன் எதுவுமே பேசவில்லை. ''என்ன வனித், டல்லடிக்கிறாய்?''

அவளுக்குத் தொண்டையை அடைத்தது.

மறுநாள் அவன் திருச்செந்தூர் கிளம்பினான். அவளால் உடன் கிளம்ப முடியவில்லை. மனத்தில் எழுந்த கனம் சொல்லில் பொய்யைச் சொல்ல வைத்தது. ''எனக்கு அலுவலகத்தில் ஆடிட்டிங் சமயம். நான் லீவு போட முடியாது.''

அவள் தன்னுடன் வரப் போவதில்லை என்று புரிந்து கொண்ட பிரஸன்னா குளிக்கப் போனான்.

அவள் எட்டிப் பார்த்தாள். அம்மா சமையலறையில் வேலையாக இருந்தாள். அதனால் மெல்ல ஹிப் பாக்கெட் பர்ஸை எடுத்துப் பார்த்தாள். இரட்டைப் பின்னல் போட்டுக் கொண்டு கண்கள் சிரிக்கப் புருவம் நீண்டு, உதடுகள் புன்முறுவல் பூக்க நெஞ்சு வரை எடுக்கப்பட்ட புகைப்படம். சிறிது நேரத்துக்கு மேல் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதனால் வெளியே வந்து விட்டாள்.

'இவன் யாரையோ கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான். நான் ஏன் வருத்தப் பட வேண்டும்?' என்ற பாவத்துடன் இருந்தாள். ஆனால் அவன் காதலுக்காக உறவு முறையில் காத்துக் கொண்டிருக்கவில்லை என்ற கோபமா?


இடையில் அவன் வாழ்க்கையில் வேறு ஒருத்தி குறுக்கிட உரிமை இல்லையா?

நாலாவது நாள் அவன் கிளம்பி விட்டான்.

பிரஸன்னா கிளம்பிப் போனதிலிருந்து வனிதாவின் அம்மா தினமும் கடிதத்தை எதிர்பார்ப்பது வழக்கம். நாக்பூர் போனதுமே இலேசாக ஆரம்பித்த ஜுரம் பிரஸன்னா டெல்லி போன பொழுது அவனைப் படுக்கவே வைத்து விட்டது. அவனால் வந்து சேர்ந்த விஷயத்தைக் கூடத் தெரிவிக்க முடியவில்லை.

''அத்தானின் வருகை சாதாரணமானது தான். நீதான் ஏதேதோ கற்பித்துக் கொள்கிறாய். சும்மா அலட்டிக்காதே'' என்றாள் வனிதா.

ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை. வனிதா ரேடியோவில் பாட்டைக் கேட்டுக் கொண்டு 'வயர்பாக்' பின்னிக் கொண்டிருந்தாள். வாசலின் முன்பு வந்து நின்றது ஒரு கார்.



''அந்தக் கட்டிடத்துக்கு அஸ்தி வாரக்கல் நாட்டிய பிரமுகரே, அந்தக் கட்டிடத் திறப்பு விழாவையும் நடத்தி வைத்தார்.''

''அப்படியா? திறப்பு விழாவுக்கு வேறு யாரையாவது அழைத்திருக்கலாமே?''

''அவர் அஸ்திவாரக்கல் நாட்டி விட்டு, பேசிக் கொண்டிருந்த போதே, கட்டிடத்தைக் கட்டி முடித்து விட்டார்கள். அதனாலே, அவரையே திறந்து வைக்கச் சொல்லி விட்டார்கள்!''

- இரா. கந்தையா.



வந்திருப்பவர்கள் யாரோ விலாசம் தெரியாதவர்கள் என்று எண்ணினாள் வனிதாவின் அம்மா.

''உங்களுக்கு யார் வேண்டும்?'' தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டே கேட்டாள்.

''வனிதான்னு ஒரு பெண்...''

''இந்த வீடுதான்.'' இவர்கள் யார்? அவளால் அனுமானிக்க முடியவில்லை. வாசலில் கேட்ட சலசலப்பைப் புரிந்து கொண்டாள் வனிதா. வந்தவர்களை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். வனிதா அவர்களை அறிமுகப்படுத்தினாள். ''அம்மா! இவர் என் மேலதிகாரி'' என்று அவள் கூறியதும், ''இது என் அம்மா, அப்பா'' என்று சுந்தர் இந்த அறிமுகத்தை முடித்தான்.



அம்மாவைத் தொடர்ந்து உள்ளே போனாள். ''என்னமது? பிரஸன்னா கிட்டேயிருந்து கடிதம் வரும் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்று வெடித்தாள் அம்மா.

''நாம் எதிர்பார்ப்பது என்னதான் நடக்கும்? வீடு தேடிப் பெண் கேட்டு வந்திருக்கிறார்கள். என் மேலதிகாரி இவர். பிரஸன்னாவை விட இவரே தேவலாம் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றாள் வனிதா.

அம்மா மளமளவென்று இனிப்புத் தயாரிக்கத் தொடங்கினாள்.

திருமணம் முடிந்து விட்டது. திருமணத்தன்று காலை பிரஸன்னா வந்து விட்டான். ''ஐயாம் பிரஸன்னா'' என்று சுந்தரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான். சுந்தர் புன்முறுவல் தவழ வனிதாவைப் பார்த்தான். பிரஸன்னா பெண் வீட்டுக்காரன் என்ற முறையில் ஓடியாடி வேலைகளைக் கவனித்தான்.

சடங்குகள் முடிந்த பின்பு அலங்காரத்தைக் கலைத்து விட்டு ஓய்வாக அமர்ந்திருந்தாள் வனிதா. கையில் சிறு பார்ஸலுடன் உள்ளே நுழைந்தான் பிரஸன்னா. காலையில் அத்தை சீராகத் தங்க நகை ஒன்றை மாமியிடம் கொடுத்திருந்தான். மறுபடியும் எதற்கு ஒரு பரிசு? வேறு யாராவது வருகிறார்களா?

அவன் வந்ததுமே அறையில் இருந்த ஒன்றிரண்டு பெண்களும் அகன்றனர். வனிதா அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் கையில் உள்ள பார்ஸலைப் பிரித்துத் தாஜ்மகால் உருவம் ஒன்றை — கண்ணாடிப் பெட்டியில் வைத்தது எடுத்து வைத்தான்.

'தாஜ்மகால்' வனிதாவுக்குச் சீற்றம் பொங்கிக் கொண்டு வந்தது. ''இது என்னுடைய பரிசு.''

''அத்தான் வேறு பரிசு எதுவும் கிடைக்கவில்லையா உங்களுக்கு?''

''இதுதான் சரியான பரிசு வனித்! என் ஏமாற்றத்தைக் காட்ட வேறு வழி இல்லையே? ஆனால் இது ஏமாற்றத்தின் சின்னம் இல்லை. உலக மகா காவியம். உலகத்தின் அதிசயங்களில் ஒன்று.''

''உங்கள் காதலியின் படம்தான் பர்ஸில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே? அவள் உங்களை ஏமாற்றி விட்டாளா?''

அவன் கண்களில் நீர் திரண்டது. ''என் உள்ளத்தில் இருந்தது என் மாமாவின் மகள்தான். பர்ஸில் உள்ளது, நண்பன் நாடகத்தில் பெண் வேடம் போட்டு என் காதலியாக நடித்தவனின் படம். ஒரே வாரம் விஷஜுரத்தில் போய் விட்டான். அவனுடைய நினைவாக வைத்துக் கொண்டிருக்கிறேன்.''

நாக்கைக் கடித்துக் கொண்டாள் வனிதா.

''நீங்கள் என்னிடம் சொல்லவே இல்லையே?''

''உன்னைத் தமாஷாக அழவிட நினைத்தேன். இன்று நான் ஊமை கண்ட கனவாக அழுகிறேன். ஆனால் நான் என் உள்ளத்தைத் திறப்பதற்கு முன் உன் விஷயம் தெரிந்து விட்டது?''

''என் விஷயமா?''

''முதல் நாள் இருந்த 'மூட்' உனக்கு என்னிடம் பிறகு இல்லவே இல்லை. ஒருநாள் அவசரமாகக் கடிதம் எழுத வேண்டியிருந்தது. என் பேனாவை ரயிலில் தொலைத்து விட்டேன். உன் மேஜை மீது தேடினேன். டிராயரில் இருக்கும்னு மாமி சொன்னாள். அதிலிருந்த சுந்தரின் கடிதத்தைப் படித்து விட்டேன்.''

அவளால் பதில் பேச முடியவில்லை. ''அதைப் படித்த பிறகுதான் என்னால் ஒரு முடிவுக்கு வர முடிந்தது. இல்லாவிட்டால் நான் கல்யாணத் தேதியைக் குறித்துக் கொண்டுதான் போயிருப்பேன்.''

அவள் தாஜ்மகாலைக் கையில் தூக்கிப் பார்த்தாள். வெள்ளை வெளேரென்று டாலிக்கு மாளிகையாய்... யமுனையின் கரையில்... ''இது காதல் சின்னம். அன்பின் அடையாளம். இதைப் பரிசளித்தது என் ஏமாற்றத்துக்காக இல்லை. உன் அன்பு போகும் திசையைப் புரிந்து கொண்டதும், என் மனம் உன்னை வாழ்த்தும் தகுதியைப் பெற்று விட்டது.''

''உண்மைதான்; அதில் ஏமாற்றம் இல்லை. வெறுமை இல்லை. அப்படி இருந்தால் நீங்கள் இங்கு வந்திருக்க மாட்டீர்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்.''

பிரஸன்னா வெளியேறினான். வனிதாவுக்குத் தான் அவசரப்பட்டு விட்டோமோ என்ற தவிப்புத் தோன்றி வதைத்தது. அவன் பார்வையில் தாஜ்மகால் பட்டதும் மனமொத்த தம்பதியரின் வாழ்க்கை இன்று காவியமாகி விட்டதை உணர்ந்தாள். அந்தத் தவிப்பு மெல்ல அகன்றது.

பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

6 இக்கரை தாண்டினால் அக்கரை ...

மாணிக்கத்துக்கு இதுபோல் கோதை தோப்புக்கு வந்து எஜமானித்வம் கொண்டாடுவது உள்ளூற எரிச்சலாய் இருந்த போதிலும், அவள்தானே அந்த ஸ்தானத்துக்கு உரியவள் என்ற உண்மையை உணர்ந்து மௌனமாய்ப் பேரேட்டை அவளிடம் தந்து விட்டுப் போனான்.

''மாப்பிளே'' என்று போகிறவனைப் பிடித்திழுத்து நிறுத்துவது போல் கூப்பிட்டாள் கோதை. கணக்கில் ஏதாவது தப்புநேர்ந்து அதைக் கண்டு பிடித்து விட்டாளோ என்ற கலவரத்துடன் முன்பெல்லாம் மாமனாரிடம் நிற்பது போன்ற பணிவுடன் நின்றான் அந்த 'மாப்பிள்ளை மகாராஜன்!'

பேரேட்டின் தாள்களைப் புரட்டியவாறு குனிந்த தலையுடன் எல்லாரும் கேட்கட்டும் என்ற திடத்துடன் சொன்னாள் கோதை:

''மாப்பிளே, இதுவரைக்கும் நீங்க எல்லா வரவு செலவு கணக்குகளையும் ஒண்ணு எழுதிக்கிட்டு வந்திருக்கீங்க — அது சரிதான். இனிமேல்... சொத்தெல்லாம் பாகம் பிரிஞ்சதுக்கப்புறம் தனித்தனிக் கணக்கு எழுதணும்... இந்தத் தேங்காய்க் கிடங்கு கணக்கை நானே பாத்துக்குவேன்... என் பங்கு வீடு நிலமெல்லாம் நானும், சிங்காரம்-வைத்தி பாகத்துக்குப் பெரியவரே கார்டியனா இருக்கறதினாலே அவரும் பாத்துக்க வேண்டியதுதான் நியாயம். அவுருக்கு அதெல்லாம் முடியுமோ, என்னமோ? அதனாலே நீங்க உங்க மச்சினருக்கு உதவியா இருந்து அதையெல்லாம் கவனியுங்க... நான் இதைக் கவனிச்சிக்கறேன் — எனக்கு உதவிக்கு இதோ முருகேசன் இருக்குது... சாமியார் இருக்காரு...'' என்று அவள் சொல்



வதற்கெல்லாம் 'சரிசரி' யென்று தலையாட்டினான் மாணிக்கம்.

காந்திமதிக்கு இவள் பண்ணுகிற அதிகாரமும், அந்த மாப்பிள்ளை மகாராஜா வேலைக்காரன் மாதிரி நின்று தாளம் போடுவதையும் பார்க்க மனத்துள் மிகவும் எக்களிப்பாய் இருந்தது. அதேசமயம் 'இந்த விஷயத்தை இன்று பொழுதுக்குள், அவன் மனைவி மகாராணியையும் மற்ற தங்கைகளையும் வைத்து அப்படியே நாடகம் மாதிரி நடத்திக் காட்டினால் எப்படி அந்தப் பெண்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளலாம்' என்ற கற்பனையும் பெருகியது.

தூரத்தில் புழுதிப் படலம் மிதக்க, சாமியார் குழந்தைகளைப் பள்ளியில் விட்டபின் வில் வண்டியை விரட்டிக் கொண்டு வருவது தெரிந்தது. இனி, சாயங்காலம் குழந்தைகளைக் கூட்டி வர வண்டி கட்டிக் கொண்டு போகும்வரை சாமியார் தோப்பில்தான் இருப்பார். மத்தியானம் முருகேசன் குழந்தைகளுக்குச் சாப்பாடு கொண்டு போய்த் தந்து விட்டு வருவான்... இப்போது தோப்பில் செய்ய வேண்டிய வேலைகளைச் சாமியாரிடம் ஒப்படைத்து விட்டுத் தான் வீட்டுக்குப் போய்ச் சிங்காரத்துக்குச் சாப்பாடு ஒழுங்காகப் போகிறதா என்று பார்க்க வேண்டும் என்ற அவசரம் பிறந்தது கோதைக்கு.

பள்ளிக்கூடத்தில் இடைவேளை மணி அடித்தபோது பல குழந்தைகள் வெளியில் ஓடித் தின்பண்டங்கள் வாங்கின. சிங்காரம் அவர்கள் வாங்குகிற பொருள்களுக்கெல்லாம் காசு தந்து கொண்டிருந்தான். அவன் பையில் எப்போதும் நிறையச் சில்லறை குலுங்கிக் கொண்டிருந்தது...



அந்தப் பள்ளிக்கூடம் ஒரு கிறிஸ்துவ மிஷனரியினால் நடத்தப்பட்டது. அதில் தலைமையாசிரியராக இருந்த பாதிரியார் ஒரு பிரிட்டிஷ்காரர். நல்ல தமிழறிஞர். மருடேசன் பிள்ளையிடம் இந்தப் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகப் பொருளுதவி பெற்றவர். மருடேசன் பிள்ளை தமக்கு ஆங்கிலம் தெரியாத குறையால் மிகவும் தாழ்வுணர்ச்சி கொண்டிருந்ததை அறிந்து சிரித்திருக்கிறார் இந்த டேனியல் பாதிரியார். காலம் சென்ற நண்பர் மருடேசனின் மகன் தமது பள்ளியில் படிக்க வந்திருப்பதில் பாதிரியார் விசேஷமாகச் சந்தோஷம் அடைந்தார். சிங்காரத்துக்கு ஆங்கிலம் கற்பிக்க வேண்டுமென்று அவர் தனிச் சிரத்தை எடுத்துக் கொண்டார்...

பாதிரியார் டேனியல், மாடியிலிருந்து தலைமையாசிரியரின் தனியறைச் சன்னல் வழியாகக் கீழே பார்த்துக் கொண்டிருந்தார். குழந்தைகள் நாலு திசைகளிலும் சிதறி ஓடுவதையும், அவர்களின் நடுவே நின்று மடி நிறைய கொடுக்காப்புளிப் பழங்களை வைத்துக் கொண்டு அவர்களுக்கு வாரிவாரி இறைத்துக் கொண்டிருக்கும் சிங்காரத்தையும் பார்க்க அவருக்கு வியப்பாய் இருந்தது. ''இதென்ன இப்படியொரு விளையாட்டு! — அவன் தன் வாயில் ஒன்று கூடப்போட்டுக் கொள்ளவில்லை. காசு கொடுத்து வாங்குகிறான், மற்ற பையன்கள் எல்லாம் அவனிடம் ஓடி ஓடிக் கெஞ்சுகிறார்கள். அவர்களது போட்டியைச் சமாளிக்க முடியாமல் சிங்காரம் எல்லாவற்றையும் குதூகலத்துடன் கூவிச் சிரித்து வாரி இறைத்துக் கொண்டே ஓடுகிறான்.

பள்ளிக்கூடக் காம்பவுண்டு சுவருக்குப் பின்னால் படகுத் துறையும் உப்பங்கழியும், அதற்கும் அப்பால் சமுத்திரமும் தெரிகின்றன. குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்த சிங்காரம், தூரத்தில் இடுப்பில் கூடையுடன் அக்கரையில் உள்ள தன் குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் வெள்ளையம்மாளைப் பார்த்து விட்டான்.

''வெள்ளையம்மா... வெள்ளையம்மா'' என்று கூவும் சிங்காரத்தின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் வெள்ளையம்மாள்.

அரசுக்கு விமானங்கள்!

ஹரியாணா முதலமைச்சர் டெல்லிக்கு வரும்போது தனி விமானத்தில் வருகிறார். அது மட்டுமல்ல, டெல்லி விமான நிலையத்திருக்குத் தாம் வருவதற்கு முன்பு காத்திருக்கத் தம்முடைய பெரிய காரை அனுப்பி விடுகிறார். உ. பி. மாநில அரசுக்கு 9 விமானங்களும் பீஹார் மாநில அரசுக்கு 5 விமானங்களும் சொந்தமாக இருக்கின்றன.

நிம்மதி — பாலி.

இரும்பாலான கம்பி அழிகள் பொருத்திய பெரிய கதவின் மேலேறி இந்தப்பக்கம் இறங்கிக்கொண்டிருந்த சிங்காரத்தைப் பார்த்து, ''சிறுக்குக் கண்ணா...'' என்று விழிகள் மலர ஓடிவந்தாள் வெள்ளையம்மாள்.

'நீ எங்க வூட்டுக்கு வந்துடு. உனக்கு வகை வகையாக மீன் ஆக்கிப் போடறேன்... வரியா?' என்று அவள் ஒருநாள் அவனைக் கூப்பிட்டாளே, அதை நினைத்துக் கொண்டு,

''உங்க வூட்டுக்கு நான் வரட்டா?'' என்று அவளெதிரில் வந்து இடுப்பில் கைகளை ஊன்றி நின்றவாறு கேட்டான் சிங்காரம்.

''ஐயையோ... எங்க வூடு அக்கரையிலே இல்லே இருக்கு... தோணி ஏறிப் போவணுமே!'' என்று அவனைத் தடுத்தாள் வெள்ளையம்மாள்...

''வா... வா... நானும் அக்கரைக்கு வருவேன்'' என்று அவளைப் பிடித்திழுத்துக் கொண்டு தோணித் துரைக்கு வந்தான் சிங்காரம்.

உப்பளத்தில் ஒரு படகு செம்படவப் பெண்களையும் குழந்தைகளையும் ஏற்றிக் கொண்டு புறப்படத் தயாராயிருந்தது.

சிங்காரம் இதற்கு முன்னால் இந்த இடத்துக்கு வந்ததில்லை. பள்ளிக்கூடத்தின் உயர்ந்த காம்பவுண்ட் சுவர் இந்தத் தோணித் துறையை மறைத்திருந்தது. தலை

பிரெஞ்சு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம், கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவர் காரல் மார்க்ஸின் 'பிரெயில்' முறை புத்தகங்களைக் காட்டி, ''இவை கண் இல்லாதவர்களுக்கு?'' என்று பெருமை அடித்தார்.

உடனே அந்த பிரெஞ்சு செனட்டர், ''ஆமாம்! காரல் மார்க்ஸின் எல்லாப் புத்தகங்களுமே கண் இல்லாதவர்களுக்குத்தான்!'' என்று போட்டார் ஒரு போடு!

அப்புறம் அந்த கம்யூனிஸ்ட்காரர் ஏன் வாயைத் திறக்கிறார்?

ஆதாரம்: விஸ்டம்.

சம்பத்குமாரி.



மையாசிரியர் டானியல் பாதிரியாரின் தனியறை இருக்கும் மாடிப் பகுதியில் போய் நின்று பார்த்தால் இதெல்லாம் தெரியும். ஆனால் ஆசிரியர்களைத் தவிர மாணவர்களுக்கு மேலே போக அனுமதி கிடையாது. தோணித் துறையில் வந்து நின்று கொண்டு – தோணியில் ஏறி அக்கரைக்குப் போகுமுன் சிங்காரம் திரும்பி நின்று தனது பள்ளிக்கூடக் காம்பவுண்ட் சுவரையும், மாடிக் கட்டிடத்தையும் பார்த்தான். அங்கே டேனியல் பாதிரியார் நின்றிருந்தார். அதே சமயம் இடைவேளை முடிந்த மணியோசை கேட்டது.

பாதிரியார் ஆள் காட்டி விரலை மட்டும் மேல் நோக்கி நீட்டி அவனை மறுபடியும் பள்ளிக்குள் வந்து விடுமாறும், இதுமாதிரி பள்ளி நேரத்தில் இஷ்டப்படி வெளியில் போகக்கூடாது என்று கண்டிப்பவர் போலவும் கைகளை அசைத்து அழைத்தார்.

''இது எங்க வெள்ளையம்மா! நான் அவ வீட்டுக்குப் போயிட்டு வந்துடறேன்... இப்ப எனக்கு கிளாஸ் இல்லே... மத்தியானம் பர்ஸ்ட் பீரியட்தான் கணக்கு; நான் மத்தியானம் மணியடிக்கறதுக்குள்ளே வந்துடுவேன்...'' என்று இங்கிருந்தே மாடியில் நின்றிருக்கும் பாதிரியாரிடம் அனுமதி கேட்டுக் கூவினான் சிங்காரம்.

''வேணும் கண்ணு...! பள்ளிக் கூடத்திலேருந்து பாதியிலே எண்டி இழுத்துக்கிட்டுப் போனேன்னு என்னைக் கூடக் கோவிச்சுக்கு வாங்க'' என்று வெள்ளையம்மாள் அவனை 'இப்போது வேண்டாம்' என்று தடுத்த வார்த்தைகளை அவன் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

பாதிரியார், அவனை அணைத்துக் கொண்டு நிற்கும் வெள்ளையம்மாளைப் பார்த்து, சிங்காரம் வீட்டிலுள்ள பல வேலைக்காரர்களில் ஒருத்தி என்று நினைத்துக் கொண்டு, சிறுவன் தோணியில் ஏறி அக்கரைப் பயணம் போக ஆர்வத்துடன் துடிப்பதை ரசித்துச் சிரித்தார். சுவரில் தொங்கிய கடிகாரத்தில் மணி பார்த்தார். மணி பதினொன்றரை ஆகியிருந்தது. இன்னும் ஒரு மணி நேரம் ஆகும் மத்தியானச் சாப்பாட்டுக்கு மணியடிக்க – அதற்குள் அடுத்த தோணியில் இவன் வந்து விடலாம் என்று நினைத்துத் தலைக்குமேல் கையசைத்து அவனுக்குப் போய்விட்டுவர அனுமதி தந்தார் பாதிரியார்.

சிங்காரம் சந்தோஷத்துடிப்புடன் வெள்ளையம்மாளின் கையைப் பிடித்துக் கொண்டு பிரயாணிகளை ஏற்றிக்கொண்டிருந்த தோணியை நோக்கி மணலில் துள்ளி யோடினான். தோணியில் ஏறிக் கொண்டு அந்தப் பிரதேசம் முழுவதையும் இடுப்பில் கையூன்றிப் பார்த்தான். கடற்கரையோரத்தில் செம்படவர்கள் வாழும் அந்த அக்கரைப் பகுதி ஒரு சிற்றூர் போல் இந்தக் கரையிலிருந்து தோற்றம் காட்டியது. இடையில் நூறடி அகலத்துக்கு இந்த உப்பங்கழி ஓடுகிறது. தோணியிலிருந்து பார்க்கச் சற்றுத் தூரத்தில் கடலும் கழியும் கலக்கிற சங்கமம் முகத்துவாரத்தில் வெண்மை கொழித்துப் புரள்கிறது... ஈரம் பிசுபிசுத்த கடற்காற்று மீன் வாடையைச் சுமந்து வருகிறது. தோணியில் உட்கார்ந்

இருந்த மீன்காரிகள் உரத்த தொனியில் பேசிச் சிரித்த குரல்கள், அவர்களுடைய வெற்றிலைக் காவியேறிய உதடுகள், பற்கள், அவர்களது கம்பீரமான அதட்டல், சரமாரியான கெட்ட வார்த்தைப் பிரயோகங்கள், தோணிக்காரனைச் சீண்டி அவனைக் கேலி செய்து சிரித்த பொல்லாத்தனங்கள் எல்லாவற்றையும் — ஓர் அந்நியனின் பயத்தோடு ஆழ்ந்து கவனித்து உள்ளூறக் குதூகலமாய் ரசித்துக் கொண்டிருந்தான் சிங்காரம். தோணிக்காரன் தன் கையிலிருந்த மிகவும் நீளமான மூங்கில் கழியை முழுக்கவும் நீரில் நுழைத்துத் தரையில் பதித்து நெம்பிப் படகை முன்னுக்குத் தள்ளிக் கொண்டே போய்ச் சரசர வென நீர்மட்டத்துக்கு மேலே மூங்கிலை நீரிலிருந்து உயரமாக உருவி உயர்த்திய போது 'ஐயோடி! எவ்வளவு ஆழம்' என்று வாய்விட்டு ஆச்சரியத்தால் கூவினான் சிங்காரம்.

''ஆருடி இது வெள்ளையம்மா, புது மாப்பிள்ளை?'' என்று சிங்காரத்தைப் பார்த்துச் சிரித்தாள் தோணியில் உட்கார்ந்து புகையிலை திருகிக் கொண்டிருந்த ஒருத்தி. சிங்காரம் அவளையே பார்த்தான். அவளுக்கு முகம் ரொம்ப அகலமாய் இருந்ததும், அவள் கையில் குத்தியிருந்த பச்சைக் கோலங்களும், அவளது ஸ்தூல சரீரமும் சிங்காரத்துக்கு வசீகரமாயிருந்தது... சில இடங்களில் தோணியின் ஆட்டத்தால் பயந்து அவன் வெள்ளையம்மாளின் இடுப்பை இறுகக் கட்டிக் கொண்டான்.

''பயமா இருக்குதா, கண்ணு... ஒண்ணும் ஆவாது... உனக்குபழக்கமில்லே, இல்லே?'' என்று அவனை இன்னும் இறுக்கமாய்த் தானும் அணைத்துக் கொண்டாள் வெள்ளையம்மாள்.


''பாவம், தாயில்லாக் கொழந்தை'' என்று அந்த அகல முகக்காரியிடம் சிங்காரத்தை அறிமுகப் படுத்திச் சொன்னாள் வெள்ளையம்மாள்: ''அவங்க எல்லாரும் புள்ளை மாருங்க. சைவம்... மீனெல்லாம் இங்க மாட்டாங்க. இந்தப் புள்ளைக்கு எப்பவோ ருசி காட்டிட்டாங்க போல இருக்கு... இதுக்காகக் கொண்டு போயி நானே ஆக்கிப் போட்டுட்டு வாரது... மாதா கோயில் பள்ளிக் கூடத்திலே படிக்குது. மத்தியானம் மணியடிச்சவுடனே 'வெள்ளையம்மா'ன்னு என்னைப் பாத்துட்டுக் கத்திட்டு ஓடியாந்துட்டுது... என் பொண்ணும் அந்தக் கெய்வியும் என்னை ஆக்கி வெச்சிருக்காளுவளோ? நான் விருந்துக்கு இவரை இட்டாந்துட்டேன்...'' என்று அவளிடம் பேசிக் கொண்டு தானும் வெற்றிலை போட்டுக் கொண்டாள் வெள்ளையம்மாள்.

''எங்க ஊட்டுக்கு வரியா மாப்ளே, நல்லா விருந்து வெக்கிறேன்'' என்று செல்லமாகச் சிங்காரத்தின் கன்னத்தைக் கிள்ளித் தன் கைகளுக்கு முத்தமிட்டுக் கொண்டாள் அகல முகக்காரி. சிங்காரம் அனுமதி கேட்பவன் மாதிரி வெள்ளையம்மாளைப் பார்த்தான்.

''இங்கே நாங்க எல்லாருமே ஒரே குடும்பந்தான் — ஒரே ஊடு மாதிரிதான்... நாங்க எல்லாருமே சொந்தக்காரங்கதான்... புள்ளையை நானு எங்க ஊட்டுக்கு இட்டுக்கிட்டுப் போறேன்; நீ உங்க ஊட்டு 'விருந்தை'யெல்லாம் அங்கே கொண்டா'' என்று வெள்ளையம்மாள் அகல முகக்காரியை அதட்டி அடக்கினாள்: — ''புள்ளே... உன்னைத் தட்டிக்கிட்டுப் போயி அவ பொண்ணைக் கட்டி வெக்கலாம்னு பாக்கறா... நீ வந்து என் பொண்ணைப் பாரேன்...'' என்று அவனை வழக்கம்போல் பரிகாசம் செய்தாள் வெள்ளையம்மாள்.

தோணி அக்கரையை அடைந்தது.

(தொடரும்)



பரிவேட்டை ஆடுகிறார்!

புலிவேட்டை, நரிவேட்டை எல்லாம் தெரியும்! பரிவேட்டை கூடவா உண்டு? வேடந்தாங்கலுக்கு அருகே திருமலை வையாவூரில் ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசப் பெருமான் மலைமீது எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார். பல்லவர்கள் நிர்மாணித்த இக்கோயிலில் மொகலாயப் பேரரசர் அக்பரின் மந்திரிகளில் ஒருவரான தோடர்மால், சிலையும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். தோடர்மால் இவ்வாலய அபிவிருத்திக்கு உதவியிருக்கிறார். மலை ஏற முடியாதவர்களுக்காக இறைவன் மலை விட்டு இறங்கி, பரிவேட்டைத் திருவிழாவுக்காக உத்ஸவ மூர்த்தியாகப் பல கிராமங்களில் பவனி வருகிறார்.

பரி என்பதற்குக் குதிரை என்று மட்டும் அர்த்தமல்ல, மானை, வருத்தம் என்ற அர்த்தங்களும் உண்டு என்பதை நினைவுகூர்ந்தால் பரிவேட்டை ஆடும் இறைவனின் கருணை புரிந்து போகும்.

இக்கோயிலில் சமீபத்தில் வீர ஆஞ்சநேயர் ஆலயப்பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

பி. எஸ். எம்.



வட்ட மேஜை



● 11.2.79 இதழைப் பார்த்தேன். எந்த அம்சத்தைப் பாராட்டுவதெனத் தெரியவில்லை. எல்லா அம்சங்களுமே அவ்வளவு தூரம் மிகச் சிறப்பாக இருந்தன. அதில் இடம் பெற்று இருந்த நான்கு சிறுகதைகளுமே அருமை! உளமார்ந்த பாராட்டுதல்கள்!

திண்டுக்கல் எஸ். பெரியதம்பி தியாகராஜன்

● பி. எஸ். எம். அவர்கள் 'திரிசூலம்' படத்திற்கு எழுதியுள்ள விமர்சனம் பிரமாதம். இதைவிடப் பொருத்தமான ஒரு விமர்சனத்தை வேறு எந்த விமர்சகரும் எழுதிவிட முடியாது. இப்படத்தில் சிவாஜியின் நடிப்பைக் கூற வேண்டும் என்றால் இப்படித்தான் கூறலாம்: ''படித்த புத்தகத்தையே மீண்டும் படித்தது போல்தான் இருக்கிறது.'' விமர்சனத்தின் ஆரம்பத்தில் அடித்திருக்கும் ''ஜோக்'' ஜோர்! எதிர்பார்த்துப் போய் ஏமாந்து திரும்பிய ரசிகர்களில் நானும் ஒருவன்.

மதுரை—11 சக்திநாயனார்

● சிவாஜியின் 200வது படமான ''திரிசூலம்'' விமரிசனம் அருமையிலும் அருமை. என்னவிருந்தாலும் அவரைப் புகழ்ந்தாலும் படத்தைப் புகழ்ந்தது மாதிரிதான்.

செங்கோட்டை சீதா ராஜன்

● சிவாஜியின் 200வது பட விமரிசனமாம். வாழ்த்துகிறோம். விமரிசனத்தை அல்ல. ஆளை விடுங்கள்.

முதல்இரவு படவிமரிசனம் கண்டேன். தெளிவான, முதல் தரமான விமரிசனம்.

அயன்புரம் த. சத்திய நாராயணன்

● பாங்க் வாசலில் ஒரு படுகொலை என்ற கதையில் மக்களின் எண்ணங்களையும், உரிமைகளையும், தெளிவாக, நெய்வேலி திரிசங்கு அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

பாளையங்கோட்டை சேகர்

● கௌசிகன் அவர்கள் எழுதியுள்ள ''போனில் கேட்ட குரல்'' என்ற சிறுகதை பிரமாதமாக இருந்தது

புதுவை—5 பா. லீலா, மு. பாஸ்கரன்

● சென்னை நகரில் வைக்கப்பட்ட எத்தனையோ சிலைகளுக்கு, அதன் நாலா புறமும் பிரகாசமுள்ள விளக்குகளைப் போட்டு ஜொலிக்கச் செய்கின்றார்கள்.

சென்னை பாரிமுனையில், அரசாங்க சிறப்புகளோடு அமைக்கப்பட்ட மூதறிஞர் இராஜாஜி சிலை, இரவு நேரத்தில் சரிவரத் தெரியவே இல்லை.

சென்னை—81 ந. கி. ராமசாமி

● யார் இந்த செம்பியன்? வெளுத்து வாங்குகிறார். அமரர் கல்கியின் கட்டுரைகளைப் படிக்கும் போது ஏற்படும் நகைச்சுவை உணர்ச்சிகளுக்கிடையே பல அர்த்தங்களும் தெள்ளத் தெளிவாக விளங்கும். அது போன்றுதான் இந்த 'செம்பியனின்' கட்டுரைகளும் பொருள் பொதிந்த நகைச்சுவையுணர்ச்சிகளைத் தூண்டுகின்றன.

மேட்டுப்பாளையம் பீட்டர்.

● தொடர்கதைகள், சிறுகதைகள் மூலம் எங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட சிவசங்கரி பயணக்கட்டுரையின் முதல் இதழிலேயே தமக்கு நிகர் யாருமில்லை என்று நிரூபித்து விட்டார்.

நெல்லை—1 சரோஜா

● அத்தியாயத்தின் முடிவில் மஞ்சுளாதேவி திப்புவை 'அண்ணா' என்று அழைத்துத் திப்புவின் காலடியில் விழுந்தபோது திப்புவின் கண்களில் மட்டும் நீர் திரையிடவில்லை. படிப்போர் அனைவர் கண்களிலுமே நீர் திரையிட்டிருக்கும்.

வேலூர் குலசேகரன்.

● உலகமெங்கும் வாழ்கின்ற தமிழ் எழுத்தாளர்கள் பட்டியலைத் தொகுத்து வெளியிடச் சென்னை அடையாற்றில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

அடுத்த ஆண்டு மதுரையில் நடைபெறும் உலகத் தமிழ் மாநாட்டினை யொட்டி இத்தொகுப்பு வெளியிடப்படுகிறது.

இத்தொகுப்பில் இடம் பெறத் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை 600020 என்ற முகவரிக்குத் தொடர்புகொண்டு விரிவான விண்ணப்பத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.


சென்னை—20 ச. வே. சுப்பிரமணியன்.



அவன்: நம்ம முதலாளி சத்தம் போட்டுத் திட்டினாரே உன்னை... எதுக்கு...?

இவன்: சைலன்ஸ் ப்ளீஸ் போர்டை உடைச்சுட்டேன்... அதுக்குத் தான்!

உ. ராஜாஜி.



தாற்காலிகமும் சில 'நிரந்தர' முகங்களும்

பி.ரங்கநாயகி

நுரையில் விழும் பாதரசமாய்ச் சிதறும் எண்ணங்களைத் தன்னால் இயன்றவரை ஒழுங்குபடுத்த முயல்கிறான். அவனால் ஓரளவுதான் வெற்றி பெற முடிகிறது.

அன்றைய தினத்தோடு அவன் வேலையிலிருந்து நின்றுவிட வேண்டும். அதற்கான 'ஊஸ்டிங் ஆர்டரை' டைப் செய்து முன் தினமே கொடுத்து விட்டிருந்தனர்.

எட்டு மாத காலம் ஒருவித நிம்மதியுடன் அவன் கடத்தி விட்டான். அது தாற்காலிக நிம்மதிதான் என்று அவனுக்குப் புரிந்திருந்தது.

மாலா தனது இரண்டாவது பிரசவத்துக்காக மெடர்னிடி லீவில் நாலு மாசம் போயிருந்தபோது, அந்த வேகன்ஸியில்தான் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சின் மூலம் 10A (1) விதிப்படி தாற்காலிகமாக அவனுக்கு இந்த வேலை கிடைத்தது.

சம்பாத்தியத்துக்காக மாலா வேலைக்குப் போகவில்லை என்றும், பெரிய பணக்காரியான அவள் பொழுதுபோக்கிற்காக வேலைக்குப் போகிறாள் என்றும் அவன் மாமா சொன்னதும் இவனுக்குள் இவனையும் மீறிய ஓர் ஆக்ரோஷம்.

'என்ன சமுதாயம்... என்ன அரசாங்கம்... நமக்கு ஜனநாயகம் என்ன வேண்டிக் கிடக்கு... அடுத்த வேளைச் சோத்துக்கு வழி இல்லாமல், என் போன்று லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலையில்லாமே திண்டாடும் போது, பொழுது போக்குக்காக வேலைக்குப் போகும் பெண்களைப் பார்த்துண்டு எல்லாரும் சும்மா இருக்காளே... இதுக்கெல்லாம் வழியே பிறக்காதா?' என்று மாமாவிடம் இவன் பிரலாபித்தான்.

'நீ பாட்டுக்கு அவர்கள் வீட்டுக்குப் போய் இது மாதிரி 'கோணா மாணா'வென்று பேசி விடாதே. மாலா தன் ஆபீசரிடம் ரெகமெண்ட் பண்ணினால் அந்த வேகன்ஸிக்குத் தாற்காலிகமாக உன்னை எடுத்துக்கறதுக்கு



வாய்ப்பு இருக்கு' என்று மாமா இவனிடம் கடுகடுத்ததும் இவன் அடங்கிப் போனான்.

மாலா வீட்டுக்குப் போனான்.

அவளே 'அப்பாய்ண்டிங் அதாரிட்டி' மாதிரி 'டைப் தெரியுமா? ஷார்ட் ஹேண்ட் தெரியுமா? முன் அனுபவம் ஏதாவது இருக்கா?' போன்ற ஏதேதோ கேள்விகளை அவனை நிற்க வைத்தே கேட்டாள். அவமானத்தில் உடல் குறுக இவன் பதிலளித்தான்.

'நீ போ... நான் ஆபீசரிடம் சொல்கிறேன்...' என்று சொல்லிக் கடைசியில் இவனை அனுப்பி வைத்தாள் மாலா.

மாலா ஒரு வார்த்தை சொன்னதும் அந்த வேகன்ஸிக்கு இவனையே அந்த ஆபீசர் தேர்ந்தெடுத்தார்.

பரங்கிக்காய் மாதிரி சிவப்பும், அழகுமாய், ஸ்டேட் கவர்ன்மெண்ட் ஆபீசுக்குக் காரில் வரும் மாலா சிபாரிசு செய்ததால் தன்னைத் தேர்ந்தெடுத்ததைப் போல, அழகில்லாத சாதாரண ஸ்திதியில் உள்ள வேறொரு பெண் குமாஸ்தாவோ, அல்லது இன்னொரு ஆண் குமாஸ்தாவோ சிபாரிசு செய்திருந்தால் வேறு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இந்த வேலைக்குத் தன்னை அந்த ஆபீசர் தேர்ந்தெடுத்திருப்பாரோ என்று இவனுடைய உள் மனத்தில் ஒரு கேள்வி.

பஸ் சார்ஜுக்கு எட்டணாவும், கலர் போன 'இந்தோலியம்' டிபன்பாக்ஸில் மோர் சாதமும், உலர்ந்தின எலுமிச்சை ஊறுகாயுமாக எடுத்துக் கொண்டு இவன் தினமும் ஆபீஸ் வருவான்.

காலை பதினொரு மணிக்கு ஒரு தரமும், மாலை மூன்றரை மணிக்கு ஒரு தரமுமாக டிபார்ட்மெண்டே 'கோல்'லென்று டீ சாப்பிடப் போகும் சாக்கில் 'உல்லாசப் பயணம்' போகும்! திரும்ப முக்கால் மணி நேரத்துக்கு மேலேயாகும். இவன் எங்கேயும் வெளியே போகாமல் வேலையிலேயே ஆழ்ந்து கிடப்பான்.

'நாங்கள் பெர்மெனண்ட் ஹேண்ட்ஸ்... நாங்களே கவலைப் படலே... நீங்க ஏன் சார் இவ்வளவு அலட்டிக்கிறீங்க...? நீங்க நாள் முழுக்க சீட்லே உட்கார்ந்து வேலை செய்யறதுனாலே உங்களை என்னமோ பெர்மெனண்டா எடுத்துக்கப் போறதில்லே... தமாஷா போய் டீ குடிச்சுட்டு வாங்க...' என்று ஓரிரண்டு பேர் இவனைக் கலாட்டாவும் செய்வார்கள்.

'தெய்வமே... எனக்குன்னு பெர்மெனண்டா என்னிக்கி வேலை கெடைக்கப் போகிறது?' என்று உள்ளுக்குள் அழுவான்.

மாலாவுக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தியைப் பியூன் சிவானந்தம்தான் ஆபீசுக்குக் கொண்டு வந்தான்.

லீவு முடிந்து மாலா டியூட்டியில் சேரும் நாள் நெருங்க நெருங்க இவனுடைய உள்ளத்தில் வேதனை. அவள் டியூட்டியில் சேர்ந்து விட்டால் இவனை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள்.

'சீ... இது என்ன பிழைப்பு!' என்று இவனுள் ஓர் ஆத்ம வெறுப்பு.

இவனும் எஸ். எஸ். எல். சி பாஸ் செய்து விட்டு நான்கு வருடமாகிறது. நல்ல மார்க்குதான். மூன்று வருஷமாய் சர்வீஸ் கமிஷன் எழுதுகிறான். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் ரிஜிஸ்தர் செய்து நான்கு வருடமாய்ப் புதுப்பித்துக் கொண்டுதான் இருக்கிறான். சிபாரிசு மூலமாய் வந்த இதுதான் முதல் இண்டர்வ்யூ.

பேப்பரைப் பார்த்து, விளம்பரங்களின் அடிப்படையில் எத்தனையோ விண்ணப்பங்களைப் போட்டு விட்டான். பிரயோசனம் ஒன்றுமிலலை.

இவனுடைய தரித்திர ஜாதகத்தில் ஓரளவு அதிர்ஷ்டம் ஒரு மூலையில் இருந்திருக்க வேண்டும். மாலா டியூட்டியில் ஜாய்ன் பண்ணுவதற்கு முன் கமலா என்ற ஜூனியர் அஸிஸ்டெண்ட் திருமணம் செய்து கொள்வதற்காக ஒரு மாதம் லீவில் போனாள்.

கன்னங் கரேலென்று, ஒட்டகைச் சிவிங்கி போன்ற நீண்ட கழுத்துடன் மிகமிகச் சாதாரணமாய் இருக்கும் கமலாவிடம்கூடத் திருமணம் என்றதும் ஒருவித சோபை கூடியதை இவன் கவனித்தான். பட்டுப் புடைவை கட்டிக் கொண்டு தன் தோழி ஒருத்தியுடன் வந்து இவனுக்கும் கல்யாணப் பத்திரிகை கொடுத்தாள்.

அவள் லீவில் போனதால்தான் தனக்கு ஒரு மாத வேலை நீடிப்பு கிடைத்தது என்பதை மனத்தில் கொண்டு அதற்கு நன்றிக் கடனாக இவன் எங்கேயோ ஐந்து ரூபாய் கைமாற்றாக வாங்கி அவளுடைய கல்யாணத்தின்போது ஓதிவிட்டான்.


மாலா டியூட்டியில் 'ஜாய்ன்' பண்ணியதும் தன்னால்தான் இவனுக்கு இங்கே வேலை கிடைத்தது என்பதை வெளிக் காட்டிக் கொள்ளும் விதமாக நடந்து கொண்டாள். தன்னை 'நீ' 'வா' 'போ' என்று அவள் அழைப்பதை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதே சமயம் வெளிச் சொல்லவும் தைரியமில்லாமல் ஜீரணித்துக் கொண்டான். சின்னச் சின்ன வேலைகளை இவனிடம் ஏவினாள். இவனும் மனத்துள் மருகிக் கொண்டே செய்தான்.

கமலா லீவில் போய் இருபது நாட்கள் ஆகியிருந்தபோது, ஆறு மாதத்தில் ரிடையர் ஆக இருந்த ஒரு சூப்பிரண்டெண்ட் திடீரென 'ஹார்ட் அட்டாக்'கில் காலமானார்.

தமிழாசிரியர்: டேய், ராமு வாய்மை என்றால் என்ன?

ராமு: லிப்ஸ்டிக் ஸார்!

அன்புச் செல்வன்.



அவருடைய போஸ்டுக்கு ஒரு சீனியர் அசிஸ்டெண்டை 'பிரமோட்' செய்து விட்டு, சீனியர் அசிஸ்டெண்ட் போஸ்டுக்கு ஒரு ஜூனியர் அசிஸ்டெண்டை 'பிரமோட்' செய்து விட்டு அந்த வேகன்ஸிக்கு சர்வீஸ் கமிஷனில் ஆள் தரும் வரையில் இவனை நீடித்தனர்.

இதனால் கமலா லீவு முடிந்து வேலையில் சேர்ந்த பிறகும் இவனுக்கு வேலை நீடித்தது.

கமலாவை அவளுடைய கணவன் முக்கியமாக எதற்காகத் திருமணம் செய்து கொண்டான் என்று அவள் டியூட்டியில் ஜாய்ன் பண்ணிய பிறகு இவனுக்குப் புரிந்தது.

சம்பள தினத்தன்று பிற்பகல் மூனு மணியளவில் அந்த ஆபீசில் சம்பளம் கொடுப்பார்கள். வழக்கமாகத் தினமும் அவளை அழைத்துப் போக வராதவன் சம்பளத்தன்று மூன்று மணிக்குச் சரியாக ஸ்கூட்டரில் வந்து விட்டான். கமலாவிடம் கைச் செலவுக்கு ஏதாவது பணம் வாங்கிக் கொண்டு போகலாம் என்று வந்த கமலாவின் கிழத் தந்தைக்கு ஏமாற்றம். கமலாவின் கணவன் அவருக்கு முன்பே வந்து காத்திருப்பதைக் கண்டதும் அவருக்கு என்னவோ போல் ஆகித் திரும்பிவிட்டார்.

கமலாவின் சீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு அவளது சம்பளத்தைக் கணக்குப் பண்ணி வாங்கி ஜேபியில் பத்திரமாக வைத்துக் கொண்ட அவளுடைய கணவன், போனால் போகிறதென்றுதானோ என்னவோ பெர்மிஷன் வாங்கிக் கொள்ளச் சொல்லி அவளையும் தன் ஸ்கூட்டர் பின்னால் அழைத்துப் போனான்.

'சீ... பணத்துக்குத்தான் எத்தனை அசிங்கமான முகங்கள்' என்று இவனுக்குள் ஒரு கழிவிரக்கம்.

இம்மாதிரி இவனுக்கு மேலும் மூன்று மாதங்கள் வேலை நீடித்தது.

சர்வீஸ் கமிஷனில் ஒரு நபரை இவர்கள் டிபார்ட்மெண்டுக்கு ஒதுக்கி அவன் மறுநாள் டியூட்டியில் சேரப் போவதால் தான் இவனுக்கு 'ஊஸ்டிங்' ஆர்டர் கொடுத்து விட்டனர்.

'நாளை முதல் என்ன செய்வது?' என்ற கேள்விக் குறி அவனுள் வேதனை வெடிப்பை ஏற்படுத்த, அலைபாயும் எண்ணங்களுடன் உட்கார்ந்திருந்தான்.

வேலைக்குப் போவது நின்று விட்டால் செட்டியார் கடை கடன் மறுபடியும் ஏறும். டைப் ரைட்டிங் ஷார்ட் ஹேண்ட் வகுப்புக்களுக்குக்கூட 'ரெகுலராக'ப் பணம் கட்டிப் போக முடியாது!

மணி நாலடித்து முப்பத்தைந்து நிமிடங்கள் ஆகியிருந்தபோது பியூன் சிவானந்தம் இவனிடம் வந்து எஸ்டாப்ளிஷ்மெண்ட் செக்ஷன் சூப்பிரண்டெண்ட் இவனைக் கூப்பிடுவதாகச் சொன்னான்.

உடனே இவன் மாடியில் இருக்கும் எஸ்டாப்ளிஷ்மெண்ட் செக்ஷனுக்கு விரைந்து போனான்.

'' 'ஊஸ்டிங் ஆர்டர்' வாங்கிண்டுட்டியா?'' என்று அந்த செக்ஷன் சூப்பிரண்டெண்ட் கேட்டார்.

வாங்கிக் கொண்டதற்கு அடையாளமாக இவன் தலையாட்டினான்.

அட்டைப்படம்:



செடியருகில் குடியிடையான்

எழுத்தாளர்: ஜோஸலின்

வண்ணப்படம்

''நாளைலேந்து என்ன பண்ணப் போறே?'' மனுஷத் தன்மையுடன் அவர் கேட்டது இவனது மனத்திற்கு இதமாக இருந்தது.

''ஒண்ணுமில்லே சார்... வெறுமனே இருக்க வேண்டியதுதான்'' என்றான்.

'' 'கே' செக்ஷனில் வேலை செய்கிறாரே கலியபெருமாள் அவர் நாளைலேந்து ஏதோ முக்கியமான குடும்ப வேலைக்காகப் பதினைந்து நாள் லீவு போட்டாலும் போடுவாராம். லீவு அவசியமா இல்லையா என்று இன்று 'ஈவினிங் தான்' 'டிசைட்' ஆகுமாம். லீவு போடும்படி இருந்தால் திடீரெனப் போடுவதால் மெடிகல் லீவுதான் அப்ளை பண்ணப் போகிறாராம். என்னிடம் ரகசியமாகச் சொல்லி விட்டுப் போனார். அவர் லீவிலே போனால் அந்த வேகன்ஸியில் இன்னும் பதினைந்து நாள் உன்னை நீடிக்கச் செய்கிறேன். நாளைக்குக் காலை பத்து மணிக்கு எதற்கும் வந்து பார்த்து விட்டுப் போ...!'' என்றார்.

'தேங்க்ஸ்... சார்...!' என்று சொல்லி விட்டு இவன் சீட்டுக்குத் திரும்பினான்.

மறுநாளைப் பற்றிய வேதனையான கேள்விக் குறியினூடே நம்பிக்கையூட்டும் ஒரு கேள்விக் குறி.

'கலிய பெருமாள் லீவில் போனால் பதினைந்து நாட்களுக்குக் கவலை இல்லை யாது... பிறகும் எதிர்பாராத விதமாக ஏதேனும் நிகழ்ந்து... புதிய சூழ்நிலைகள் உருவாகிப் பதினைந்து நாட்களுக்கும் மேலாக வேலை நீடிக்க வழி பிறக்கலாம்...' என்று ஒரு நினைப்பு இவனை லயிக்கச் செய்த தருணத்தில், 'சே... பிற்பாடு நடப்பதைப் பற்றி இப்போது என்ன சிந்தனை. நாளை விஷயம் என்ன?' என்கிற நினைப்பு இவனைப் பிடித்திழுத்ததும், கலிய பெருமாள் லீவில் போனால் சந்துமுனைப் பிள்ளையாருக்குச் சூரைத் தேங்காய் உடைப்பதாக இவன் பிரார்த்தனை செய்து கொள்வதற்கும் கடிகாரம் ஐந்துமணி அடிப்பதற்கும் சரியாக இருந்தது.

'நல்ல சகுனம்' என்று இவனுள் ஓர் அற்ப சந்தோஷம் பிறந்தது.

மும்முனைகள்

அத்தியாயம் 17

நீண்ட நேரம் சிலையாக இருந்த வைத்தியலிங்கம், ''சுலோ, எழுந்திரு'' என்று மிருதுவான குரலில் கூறினார். ''சுலோ!'' என்று அவள் தோள்களைத் தட்டிக் கொடுத்தார்.

''நீங்க என்னை மன்னிச்சுட்டதாகச் சொன்னாத்தான் அப்பா எழுந்திருப்பேன்'' என்றாள் சுலோசனா.

''மன்னிக்க என்ன இருக்கு சுலோ? எழுந்திரு சொல்றேன்'' என்று அவளுடைய இரு தோள்களையும் பற்றி நிமிர்த்தினார் வைத்தியலிங்கம். ஏறிட்டுப் பார்த்த அவள் முகத்தை மேல் துண்டால் துடைத்து விட்டார்.

''இதோ பாரும்மா! ஆனந்த் உன்னைப் பற்றியும் ஏதோ ரகசியம் இருப்பதாகக் கூற ஆரம்பித்தபோது என்னமோ ஏதோ என்று நான் பயந்து போனேன். ஆனால் இப்போ கொஞ்சம் யோசித்துப் பார்த்த பிறகு உன் புத்திசாலித்தனத்துக்காக உன்னை கங்கிராஜுலேட் பண்ணணும்னுதான் தோணுது.''

''அப்பா!'' என்று தன் காதுகளையே நம்ப முடியாமல் அழுகையும் ஆனந்தமுமாகக் கூவினாள் சுலோசனா.

''நீ தீர்க்க சுமங்கலியா வாழணும், அம்மா!'' என்றார் அவர்.


''என்னங்க நாடகம் இதெல்லாம்? எனக்கொன்றும் புரியலையே'' என்றாள் தனபாக்கியம். ''அவ என்னமோ தீபக்கைத் தான் காதலிக்கிறதாகச் சொன்னா, நீங்க ஆசீர்வாதம் பண்ணறீங்க!''

''உனக்கு எப்படிப் புரியும்? முன்னே பின்னே காதலிச்சிருந்தாத்தானே ?'' என்று கேட்ட வைத்தியலிங்கம், எழுந்து சாப்பாட்டு அறைக்குப் போனார். சோபாவில் அவர் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த மகனை விட்டு அப்பால் போய் இருக்க விரும்பியது போலிருந்தது அவர் செய்கை. சாப்பாட்டு மேஜை எதிரே அமர்ந்து சுலோசனாவையும் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார். தனபாக்கியம் உணவு பரிமாற அவர் சொன்னார்: ''பாக்கியம்! அந்த நாளில் நான்தான் உன்னை எதிர் வீட்டு மாடியிலிருந்தபடி போறச்சேயும் வரச்சேயும் ஆசையோடு பார்த்துக்கிட்டிருப்பேனே தவிர, நீ குனிந்த தலை நிமிர மாட்டே! அதனாலே உனக்குக் காதலைப் பற்றிப் புரிஞ்சுக்கறது கஷ்டம் தான்!'' இலேசாகச் சிரித்தார் அவர்.

ஆனால் அவர் மனைவிக்குச் சிரிப்பு வரவில்லை. ''எனக்குப் பிடிக்கலேங்க. சத்தியமா இவ நடந்துக்கிற விதமும் அதை நீங்க பார்க்கிற விதமும் எனக்குப் பிடிக்கவேயில்லே!''

''உனக்கு இப்பப் பிடிக்காதுங்கிறது எனக்குத் தெரியும் பாக்கியம். இரண்டுபேரும் ரிஜிஸ்தர் கல்யாணம் பண்ணிக்கிட்டுப் பேரப் பயலே என்றைக்குப் பெற்றுத் தருகிறார்களோ, அந்தக் குழந்தையை எப்போ நீ மடியில் போட்டுக் கொண்டு கொஞ்சுகிறாயோ அப்போதான் பிடிக்கும்! அது வரை உன் மனக்கசப்பு மாறாது.''

'' அப்பா! தீபக் வேறு மதத்தைச் சேர்ந்தவர், அந்தஸ்தில் தாழ்ந்தவர் என்பதிலெல்லாம் உங்களுக்குக் கோபமே இல்லையா?'' என்று அதிசயத்தோடு கேட்டாள். சுலோசனா



கி. ராஜேந்திரன்



''அவனுடைய ரிஷிஜனுக்கு என்ன குறைச்சல்? புனிதமான ஏகவைத் தெய்வமா வழிபடறவங்க. எனக்கு என்ன அதிலே ஆட்சேபணை? அந்தஸ்து... அது பணத்தினலே வருவதாக நான் நினைக்கலே. திறமை, நேர்மை, ஒழுக்கம், உழைப்பு ஆகியவற்ருல்தான் ஒருவன் உயர்கிருன் அல்லது தாழ்கிருன் என்று நம்புகிறேன்!''

''அப்பா! ஏகவோ, முருகனே — எனக்கு அவங்களையெல்லாம் விட உங்களை வழிபட்டால் போதும்னு தோணறது!''

''டோண்ட் பி ஸ்டுபிட்! உனக்கு ஏற்படும் சந்தோஷத்தில் என்ன சொல்கிறோம்னு தெரியாமல் உளறக் கூடாது. நான் சாதாரண மனுஷன். மனிதர்களுக்கு உண்டான பல பலவீனங்களை உடையவன். இதை இத்தனை நாளா அவ்வளவா நினைச்சுப் பார்க்கலேதான். என்னை நானே ரொம்ப உயர்வா எண்ணிக் கர்வப்பட்டுக் கொண்டு கூட இருந்தேன். ஆனல் நான் சாதாரண மனுஷன் தான்; அதனல்தான் சத்யாவை நல்வழிப்படுத்தத் தவறிட்டேன் என்று இப்போ புரிஞ்சுக்கிட்டிருக்கேன்.''

''அப்பா! அண்ணன் குடிச்சுட்டு வந்து குறட்டை விடறதுக்கு நீங்க எப்படிப் பொறுப்பாக முடியும்? அவன் சிநேகிதங்க அவனைக் கெடுத்துட்டாங்க. உங்களை நீங்களே வதைச்சுக்காதீங்க.''

''அப்படிச் சொல்றதுக்கு இல்லே கவோ! நான் எங்கேயோ தப்பு செய்திருக்கேன். எனக்கே அது

இன்னும் சரியாப் புரியலே. ஆனா என் பேரில் தப்பே இல்லே என்று என்னை நானே ஏமாற்றிக் கொள்ள நான் தயாராயில்லே. அது போகட்டும், அதைப்பற்றி நான் சிந்திக்கிறேன். ஒரு பக்கம் நான் துக்கப்பட்டாலும் இன்னொரு பக்கம் உன்னை நினைத்து நான் சந்தோஷமா இருக்கேன். உனக்குத் தெரியுமா கலோ, இந்தக் கம்பெனி ஆரம்பித்த புதிதில் எனக்கு அருள்ராஜ் எவ்வளவோ உதவியிருக்கான்.''

''அதற்குப் பிரதியுபகாரமாக இப்போ உங்க மகளை அவர் மகனுக்குக் கட்டி வைக்கப் போறீங்களாக்கும்!'' என்று எரிச்சலுடன் கேட்டாள் தனபாக்கியம்.

''இல்லே பாக்கியம், இல்லவே இல்லே! நான் சொல்ல வந்ததே வேறே. ஏற்கனவே அருள்ராஜுக்கு நான் ரொம்ப நன்றிக் கடன் பட்டிருக்கேன். இப்போ அவன் மகன் தீபக் என் கலோசனாவை ஏற்றுக் கொண்டால் என் நன்றிக் கடன் அதிகமாயிடுன்னு சொல்ல நினைச்சேன். தீபக் அவ்வளவு உயர்ந்தவன்!''

''அப்பா! எனக்கு ஒரு சந்தேகம்!''

''என்ன கலோ?''

''நீங்க முன்னே ஒரு சமயம் மைண்ட் ரீடர்னு உங்களை வர்ணிச்சுக்கிட்டு என் மனசில் இருப்பதைச் சொல்லட்டுமா என்று கேட்டீங்களே... தீபக் கூடப் பயந்து போய் வேண்டாம் வேண்டாம் என்றாரே!...''

''ஆமாம் கலோ, அப்பவே நான் ஊகித்ததுதான். அதனால்தான் ஆனந்த் இந்த விஷயத்தைச் சொல்வதற்கு முன் என்னமோ ஏதோ என்று கவலைப்பட்டேனே ஒழிய, சொன்னபின் நான் ஷாக் அடையலே. அமைதியாகவும் மனநிறைவோடும் ஏற்றுக்கிட்டேன். ஆனால் அதற்கும் முன்பாக சத்யா கொடுத்த அதிர்ச்சியிலிருந்து தான் இன்னும் விடுபடல்லே.''

''அண்ணன் திருந்திடுவான் அப்பா! பெரிசா எடுத்துக்காதீங்க!'' என்றாள் கலோசனா சமாதானமாக.

''நானும் அதைத்தானே விரும்புகிறேன் கலோ! காலையில் பேசிப் பார்க்கிறேன் அவனுடன்!'' என்ற வைத்தியலிங்கம், ஒரு பெருமூச்சுடன் எழுந்தார். சரியாக அவர் சாப்பிடவில்லை என்று தாய்க்கும் மகளுக்கும் புரிந்தது. ஆனால் வற்புறுத்திப் பயனில்லை என்று உணர்ந்தனர். அவரை வற்புறுத்தும் நிலையில் அவர்களும் இருக்கவில்லை.

அத்தியாயம் 18

மறுநாள் காலையில் தமது ஏமாற்றத்தை மகனிடம் வெளியிட்டார் வைத்தியலிங்கம்: ''ஐ ஆம் டெரிபிளி டிஸ்ஸப்பாய்ண்டட் இன் யூ! உன்னைப் பற்றி என்னவெல்லாம் கோட்டை கட்டியிருந்தேன் தெரியுமா? எல்லாத்தையும் மண்மேடாக்கிட்டியேடா'' என்று நாத்தழுதழுக்கப் பேசினார்.

'குடிப்பதோ அப்பாவுக்குத் தெரிய வந்தாச்சு, இனி அவர் எதிரே சிகரெட் பிடித்தால் என்ன?' என்பதுபோல் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான் சத்யா.

அப்போதுதான் வைத்தியலிங்கத்துக்கும் கோபம் வந்தது. ''யூ மேனர்லெஸ் புருட்! உன் தகப்பனார் நான்! உன் பாஸும் நான் தான். அப்பாவுக்கு மரியாதை தராட்டாலும் எஜமானனுக்கு மரியாதை காட்டவாவது பழகிக்க'' என்று இரைந்தார்.

''சும்மா சத்தம் போடாதீங்க அப்பா!'' என்றான் சத்யா. ''உங்க உருட்டல் மிரட்டலெல்லாம் கேட்டுக் கேட்டு எனக்கு அலுத்துப் போச்சு. அருள்ராஜ் மாதிரி, தீபக் மாதிரி என்னால் வளைஞ்சு, நெளிஞ்சு, கூனிக் குறுகிப் பேசி உங்களைக் காக்காய் பிடிக்க முடியாது!''

மகன் இப்படிப் பேசி அதுவரை கேட்டே அறியாத வைத்தியலிங்கத்துக்கு அதிர்ச்சியாக இருந்தது. சற்றுநேரம் மௌனமாக இருந்து விட்டுச் சொன்னார்: ''டேய்! சத்தம் போடாமல் நயமாகவே கேட்கறேண்டா! கலோசனா தீபக்கைக் காதலிக்கிறாள் என்பதற்காக நீ குடிச்சுக் கெட்டுப் போவானேன்? அந்த ஆனந்த் சொன்னது வாஸ்தவம்தானா?''

''ஆனந்த் அப்படிச் சொன்னானா? அவன் தான் என்னை இங்கே ராத்திரி அழைச்சுண்டு வந்தானா? ஆனந்த்தான் என் உண்மையான நலனை எப்பவும் எண்ணிப் பார்க்கிறவன். அவன் சொன்னதில் தப்பில்லே. அப்பா, உங்களுக்கு என்னிடம் ஏமாற்றம் ஏற்பட்டதா சொன்னீங்க. ஆனால் அதற்கு அடிப்



படைக் காரணமான என் தங்கையிடம் உங்களுக்கு ஏமாற்றம் ஏற்படலே! என்ன நியாயம் அப்பா இது?''

''நீ பிரமீளாவைக் காதலித்ததை, அவளைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுவதை நான் ஆமோதிப்பதில் என்ன நியாயம் இருக்கிறதோ அதே நியாயம் தான்டா! காதல் என்கிறது அந்தஸ்து, சாதி, மதம், ஜோடி பொருத்தம் ஜாதகப் பொருத்தம் எல்லாம் பார்த்துக் கொண்டு மலருவதில்லே. முக்கியமா கவனிக்க வேண்டியது ஒரே ஒரு விஷயம்தான். அந்தக் காதல் மெய்யானதா, அசைக்க முடியாததா அல்லது கானல் நீர் போன்று நெருங்க நெருங்க மறைந்துவிடக் கூடியதா என்பது தான். இந்த விஷயத்தில் எச்சரிக்கை யாக இருக்கணும், அவசரப்படக் கூடாதுன்னு உன் தங்கைக்கு எடுத்துக் கூறியிருக்கேன்.''

''அதென்னவோ, ஐ ஹேட் தட் ஃபெல்லோ அருள்ராஜ்! அண்ட் ஐ ஹேட் ஹிஸ் ஸன்! ஐ ஹேட் திஸ் லவ் அஃபேர்! அவன் என் தங்கையைத் தன் வலையில் சிக்க வைக்கச் சூழ்ச்சி பண்ணியிருக்கான். நீங்க அப்பாவும் பொண்ணும் ஏமாந்துடப் போறீங்க!''

''எதற்காக நீ அருள்ராஜையும் அவன் மகனையும் வெறுக்கணும்?''

''ஏன் நான் வெறுக்கக் கூடாது? இந்த அருள்ராஜ் கீழே வேலே செய்யறதே எனக்குப் பிடிக்கலே! நான் குடிச்சுக் கெட்டுப் போறதுக்கு அதுவும் ஒரு காரணம்.''

''அப்போ விலகிப் போயிடேன். வேறு எங்கேயாவது போய் வேலே பார்க்கிறது தானே?''

''ஆமாம் அதுதான் சரி, என்னே விரட்டி அடிச்சுடுங்க. அப்புறம் அந்தத் தீபக்குக்கே கம்பெனியை எழுதி வைச்சு அவனே முதலாளியாக்கிடுங்க!''

''பேஷா நான் செய்வேன்டா! ஆனா அவன் உன்னே மாதிரியில்லே. மானஸ்தன்! நான் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டான்!''

''மானஸ்தனாவது மண்ணாங்கட்டி! சும்மா அப்படி வேஷம் போடுவான்! உண்மை என்னவென்றால் ஒரே ஒரு நாளைக்குக் கூட அவனால் நிர்வாகம் பண்ண முடியாது! தொழிலாளர் சக்தியையே நீங்க புரிஞ்சுக்கலே!''

வைத்தியலிங்கம் ஏளனமாகச் சிரித்தார். சிரிப்பொலியையும் அதற்கு முன்பாகவே உயர்ந்திருந்த அவர் குரலொலியையும் கேட்டுவிட்டுத் தனபாக்கியம் கூடத்துக்கு வந்தாள்.

''உங்களுக்குக் கேலியா இருக்கா அப்பா? நான் சொல்வதைக் கேட்டுக்குங்க!'' என்றான் சத்யா. ''எனக்குக் கம்பெனி சொந்தமில்லேன்னு சொல்லி வேறு யாருக்காவது நீங்க எழுதி வைச்சுடலாம். ஆனால் என்னைத் தக்க காரணமில்லாமல் வேலையை விட்டு உங்களால் அனுப்ப முடியாது. இன்று நானும் அங்கே ஒரு தொழிலாளி. தொழிற் சங்கத்தில் சேர்ந்திருக்கிறவன். என்னே டிஸ்மிஸ் செய்தீங்கன்னு போராட்டம் நடக்கும்.



சரோஜா: நான் 'ஜோக்' எழுதிச் சம்பாதிச்ச பணத்தில் தைத்துக் கொண்ட ஜாக்கெட் இது.

விஜி: அப்படியானால் இதை 'ஜாக்'கெட் என்று சொல்வதைவிட 'ஜோக்'கெட் என்று சொல்லலாமே!

- லலிதா செல்லப்பா.

கோரிக்கைகளைப் பட்டியல் போட்டுத் தருவோம்!''

''என்ன கோரிக்கைகள்?''

''அநியாயமாய் வேலேயிலிருந்து நீக்கப் பட்டவர்களை மறுபடியும் வேலேயில் நியமிக்க வேண்டும்...''

''அதாவது உன்னே! அப்புறம்?''

''இருபது வருஷமாகத் தொழில் நடப்பதாகப் பெருமைப்பட்டுக் கொள்றீங்களே, இருநூறு தொழிலாளர்களை வேலைக்கு வைச்சிருக்கீங்களே, அவர்கள் வசதிகளைக் கொஞ்சமாவது கவனிச்சீங்களா? ஒரு கான்டீன் கூடக் கிடையாது!''

வைத்தியலிங்கம் இடுக்கிட்டுத் தமது ஆசனத்தில் நிமிர்ந்து அமர்ந்தார்: ''ஆமாம்... எனக்கு அது தோணாமல் போச்சே'' என்றார்.

''எப்படிப்பா தோணும்? அந்தக் கோரிக்கையை உங்க வரைக்கும் அந்த அருள்ராஜ் கொண்டு வந்தால்தானே? அவன் அடிவருடியாகவே இருந்து உங்க கிட்ட நல்ல பேர் சம்பாதிச்சுட்டான். ஆனா அவன் காலம் முடிஞ்சு போச்சு. இப்போ யூனியன் தலைமை மாறிட்டது! தொழிலாளர் கோரிக்கைகளில் கான்டீன் முதல் அம்சம். கான்டீன் செலவுகளில் பெரும் பங்கை நிறுவனமே ஏற்று மலிவு விலேயில் காப்பி, டிபன், சாப்பாடு கிடைக்கச் செய்ய வேண்டும்!''

''அப்புறம்?''

''இருபது சதம் போனஸ், குடியிருப்பு வசதி அல்லது வீட்டு வாடகை அலவன்ஸ்!''

வைத்தியலிங்கம் கோபம் அடைந்தார்; எழுந்து நின்று, ''அப்புறம்?'' என்று குரலே உயர்த்திக் கேட்டார்.

''ஊதிய உயர்வு, ஊக்க போனஸ்!''

''பிறகு?'' என்று கர்ஜித்தார் வைத்தியலிங்கம்.

''இலவச மருத்துவ வசதி; உல்லாசப் பயண அலவன்சுடன் விடுமுறை!''

ஆத்திரமடைந்து ''முடிஞ்சுதா இன்னும் பாக்கி இருக்கா?'' என்றார் வைத்தியலிங்கம்.

''தாற்காலிக நியமனங்களை நிரந்தரமாக்குதல், கிடையராவதற்கு முன்னே உயிர் துறக்க நேர்ந்தால் இன்ஷ்யூரன்ஸ் திட்டம்.''

''இத்தனை கோரிக்கைகளையும் நாளைக்கே நிறைவேற்றி வைப்பதாக நான் வாக்குறுதி கொடுத்தால் நாளைக்கே உங்க யூனியன் தலைவர் மேலும் சில புதிய கோரிக்கைகளைக் கஷ்டப்பட்டுக் கற்பனை செய்து கொண்டு வருவார், இல்லையா?''

''வந்தாலென்ன? தொழிலாளர் நலனைக் கவனிக்க வேண்டியது அவர் கடமை. உங்க அருள்ராஜ் போல் தொழிற்சங்கத் தலைவராக இருந்து கொண்டே தொழிலாளருக்கு அவ ரால் துரோகம் இழைக்க முடியாது! அப்பா நான் சொல்றேன்னு வருத்தப்படாதீங்க. உங்களுக்கும் அந்த அருள்ராஜுக்கும் இருக் கிற கெட்ட பேரு கொஞ்ச நஞ்சமில்லே. தொழிலாளர்கள் பேசிக் கொள்வதைக் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை!''

''நீ ஏண்டா அதையெல்லாம் கேட்டுக் கொள்ளப்போறே?'' என்ருள் தனபாக்கியம், பொறுக்க முடியாதவளாக இடையில் புகுந்து.

''கேட்காமல் எப்படி அம்மா இருக் கிறது?'' என்று வினவினன் மகன். ''நானும் ஒரு தொழிலாளிதானே? அப்பாவோட கம் பெனியிலே வேலை பார்க்கிற, நூற்றிப் பதி ளுரு ரூபாய்ச் சம்பளம் வாங்குகிற சாதா ரணத் தொழிலாளிதானே நான்?''

''அதற்காக அவர்களோடு சேர்ந்துக்கிட்டு நீயும் அப்பாவுக்கெதிராகக் கொடி தூக்கி, ஒழிக கோஷம் போடப் போறியா?'' என்று சீறினள் தாய்.

''இதுவரை போடலே; நாளைக்கு அவசியம் நேர்ந்தால் அதையும்தான் நான் செய்ய ணும்'' என்ருன் சத்யா.

''நாளைவரை காத்திருப்பானேடா? இப் பவே, இங்கேயே கோஷம் போடேன், பார்ப்போம்!'' என்ருர் வைத்தியலிங்கம் சவாலாக.

''நீங்க விரும்பி ஆசைப்பட்டா அப்படியே செய்யறேன்'' என்ருன் மகன் சவாலை ஏற்று.

''என்னங்க இது, வேண்டாத விளையாட்டு? சும்மா இருங்க'' என்று பதறினள் தனபாக் கியம்.

''விளையாட்டு இல்லேம்மா! நாளைக்கு நிஜமாகவே நடக்கப் போவதுதான். இப்போ எங்க யூனியன் காரியதரிசி அசடு வழியும் அருள்ராஜ் இல்லே; போராட்ட வீரர் புகழேந்தி! தலைவரோ, கர்ஜிக்கும் கார மேகம்!''

''நாளைக்கு நடக்கிறது என்ன? இன்றைக்கே நடத்திப் பார்த்துடுவோம்! டேய் சத்யா! போடுடா கோஷம்!'' என்ற வைத்திய லிங்கம், ''முதலாளித்துவம்...'' என்று தாமே எடுத்துக் கொடுத்தார் முதல் கோஷத்தை.

''ஒழிக!'' என்ற சத்யா, பின்னர் தானு கவே தயக்கமின்றித் தொடர்ந்தான்:

''தொழிலாளர் நலன் வெல்க!

''கஞ்சன் வைத்தியலிங்கம் ஒழிக!''

தனபாக்கியம் காதுகளைப் பொத்திக் கொண்டாள். வைத்தியலிங்கம் தடுமாறி ஞர். சத்யா ஆவேச வெறியில் அதையெல் லாம் கவனிக்காதவனுக, ''தொழிலாளர் வயிற்றிலடிக்கும் வைத்தியலிங்கம் ஒழிக! வேஷதாரி வைத்தியலிங்கம் ஒழிக!'' என்று கோஷமிட்டான்.

தடுமாறிய வைத்தியலிங்கம் இடது நெஞ்சுக்கு மேலாகத் தோளைப் பிடித்துக் கொண்டு சோபாவில் சாய்ந்தார். வேதனைக் குறிகள் அவர் முகத்தை அலங்கோலமாக்கின.

''ஐயோ! என்னங்க? உங்களுக்கு என்ன?'' என்று பதறினள் தனபாக்கியம், அவர் கன் னங்களை இரு கரங்களாலும் ஏந்தியபடி.

''அப்பா! அப்பா!'' என்று கலங்கிய குரலில் அழைத்த சத்யா, ''உங்களுக்கு என்ன ஆச்சு அப்பா?'' என்று கண் கலங்கி மெய் நடுங்கத் துடித்துக் கேட்டான்.

''தெரியலையா முட்டாள்! ஐ ஆம் ஹேவிங் எ ஹார்ட் அட்டாக்!'' என்ற வைத் தியலிங்கம் அதன்பிறகு ''டாக்டர்...'' என்ற வார்த்தையை மட்டும் சொன்னுர். மேலே பேச முடியாமல் குப்பென்று வியர்த்து விட, சோபாவில் பின்னுக்குச் சாய்ந்தார்.

(தொடரும்)

இது ஜோக் அல்ல!

"படத்தின் தலைப்பு என்னங்க?"

"வீடு எண் 84 C, வேதபுரம் முதல் வீதி"

"சரி, கதையைச் சொல்லிட்டீங்க, தலைப்பு என்ன?"

"நீங்க ஒண்ணு. அதுதாங்க தலைப்பு"



இது ஜோக் அல்ல உண்மையிலேயே இந்தத் தலைப்பில் ஒரு தமிழ்ப்படம் தயாராகிறது. தயாரிப்பவர்: ஏ.எஸ். சீனிவாசனின் மகன். ஜெயபாரதி டைரக்ட் செய்கிறார்.

சரணாகதியும்



பாவமன்னிப்பும்

(1) ரெவரெண்ட் ஃபாதர் : : பிரான்சிஸ் கத்தோலிக்க கிறிஸ்துவப் பாதிரியார்.
(2) மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகள் ஹிந்து மத உபன்யாசகர்.

சாஸ்திரிகள்: நமஸ்காரம் ஃபாதர்... தெய்வீக வாழ்க்கையை மேற்கொண்டு அதற்காகவே வாழ்நாள் முழுதையும் அர்ப்பணித்துக் கொண்டுள்ள உங்களுடைய வாழ்க்கை மிகவும் புனிதமானது. நீங்களே தெய்வத்துக்குச் சமமானவர் தான்...

ஃபாதர்: அப்படியெல்லாம் ஒன்றுமில்லை... மக்களுக்கு அன்பு செய்ய வேண்டி இறைவன் ஒவ்வொரு மனிதருக்கும் அழைப்பு விடுக்கிறார். எல்லோரும் ஏற்றுக் கொள்வதில்லை... இறைவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு தெய்வீக உணர்வைப் பரப்பி மக்களுக்கு அன்பு காட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அவ்வளவுதான்... உங்களைப் பற்றி...

சாஸ்திரிகள்: நான் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக உபன்யாசங்கள் மூலம் இறையுணர்வை மக்களிடையே தழைத்தோங்கச் செய்யப் பாடுபடும் வாய்ப்புப் பெற்றவன். ...Christ என்றால் என்ன அர்த்தம்...? அது எந்த மொழி என்று விளக்கம் கொடுங்களேன்...

ஃபாதர்: Christ என்பது கிரேக்க மொழி. 'அபிஷேகம் செய்யப் பட்டவர் என்று அர்த்தம். மக்களைப் பாபங்களினின்று கரையேற்றுவதற்காக இறைவனால் அபிஷேகம் செய்யப்பட்டு இவ்வுலகுக்கு அனுப்பப் பட்டவர் இறைவனின் குமாரரான ஏசு கிறிஸ்து.

சாஸ்திரிகள்: ஏசு கிறிஸ்து கடவுளின் குமாரர் என்கிறீர்கள்... அப்படியானால் ஏசு கிறிஸ்துவே கடவுள் இல்லை என்று அர்த்தமா?

ஃபாதர்: ஏசு கிறிஸ்து கடவுளின் குமாரர் தான் என்றாலும் அவரே கடவுளின் அவதாரம்தான்... கிறிஸ்துவ மதப்படி ஒரே கடவுள்தான்... அவர் அரூபி... அதாவது வடிவம் இல்லாதவர்... எங்களுக்கு உருவ வழிபாடு கிடையாது...

சாஸ்திரிகள்: அன்னை மேரி... உருவம்... சிலுவை வழிபாடு... போன்றவற்றைக் காண்கிறோமே...?

ஃபாதர்: உருவங்களெல்லாம் மரியாதைக்கு உரியனவையே தவிர, வழிபாட்டிற்கும், ஆராதனைக்கும், உரியவர் இறைவன் மட்டுமே... உங்கள் மதத்தில் இறைவனைப் பல உருவங்களாக வழிபடுகிறார்களே... உங்களுடைய கோட்பாடு எப்படி?

சாஸ்திரிகள்: ஹிந்து மதப்படியும் கடவுள் ஒருவர்தான். அவரைப் பல உருவங்களில் வழிபடுகிறோம்...

ஃபாதர்: ஒவ்வொரு உருவத்தையும் ஒவ்வொரு இறைவனாக உங்கள் மதத்தினர் எடுத்துக் கொள்வதையும் காண்கிறோமே..

சாஸ்திரிகள்: ஹிந்து மதப்படி இறைவன் ஒருவர்தான்... அவர் ரூபம் இல்லாதவர் தான்... மக்களைப் பாபங்களினின்று கரையேற்றுவதற்காகப் பல அவதாரங்களை எடுத்து இவ்வுலகுக்கு வந்திருக்கிறார்... மக்களுடைய அபிலாட்சைகளின் அடிப்படையிலும், மனநோக்கின் அடிப்படையிலும், இறைவனைப் பல உருவங்களில் வழி பட்டாலும், இவ்வழிபாடுகள் உருவமற்ற ஓர் இறைவனைத்தான் போய்ச் சேருகின்றன.. ஏசு கிறிஸ்து பிறந்து 1979

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

நெஞ்சில் கோத்துக் கழுத்தில் போட்டுக் கொள்ளும் கடிகாரத்தில் 6 மேலாகவும் 12 தலைகீழாகவும் இருக்கும், அப்பொழுதுதான் அணிந்திருப்பவர் குனிந்தோ அல்லது கடிகாரத்தைக் கையில் எடுத்தோ மணியைச் சரியாகப் பார்க்க முடியும். கே. ஆர்.





ஒருசமயம் நெப்போலியன் படைகள் பின் வாங்கிக் கொண்டிருப்பதை அறிந்த தளபதி நேரே நெப்போலியனிடம் ஓடினார். அதுசமயம் நெப்போலியன் நன்கு தூங்கிக் கொண்டிருந்தார். தூக்கத்தில் தம்மை எவரும் எழுப்பக்கூடாது என நெப்போலியன் கட்டளையிட்டிருந்தார், தளபதிக்கு, அக்கட்டளை நினைவு வந்து விட்டபடியால் நெப்போலியனை எழுப்பத் துணிவு பிறக்கவில்லை. நெப்போலியனை எழுப்புவதா, வேண்டாமா என்ற குழப்பத்தில் ஆழ்ந்த தளபதி நெப்போலியன் அருகில் சென்றார். அவர் அருகில் ஒரு குறிப்பு எழுதி வைக்கப் பட்டிருப்பதைக் கண்டு அதைப் படித்தார் தளபதி. அக்குறிப்பில், நெப்போலியன், தம் படைகள் பின்வாங்க நேர்ந்தால் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை விவரமாக எழுதி வைத்திருந்தார். குறிப்பில் எழுதியிருந்தபடி, படைகளை நடத்தினார் தளபதி. பின்வாங்கிக் கொண்டிருந்த படைகள் முன்னேறிச் சென்றன.

தேவகோட்டை பி. நாராயணன்

ஆண்டுகள் ஆகின்றன. ... ஏக கிறிஸ்துவுக்குப் பிறகு தோன்றியதுதான் பைபிள் என்று நினைக்கிறேன்... அதற்கு முன்பு உங்கள் மதத்தின் நிலை என்ன?

ஃபாதர்: New Testament என்று சொல்லக் கூடிய பைபிளின் பிரிவு ஏக கிறிஸ்துவுக்குப் பின் தோன்றியதுதான்... Old Testament என்பது கிறிஸ்துவின் பிறப்புக்கு முந்தையது... அதில் மக்களின் பாபங்களைப் போக்குவதற்காகவும், மக்களைப் பாபங்களினின்று கரைத் தேற்றுவதற்காகவும் தேவ குமாரர் இவ்வுலகில் பிறப்பார் என்பது சூசகமாகச் சொல்லப் பட்டுள்ளது... 'ஹிந்து' என்பதன் அர்த்தம் என்ன? வேதங்கள் உபநிஷத்துக்கள் ஆகிய உங்களது மதநூல்களின் விசேஷங்களைக் கூறுங்கள்...

சாஸ்திரிகள்: 'ஹிந்து' என்றால் பிறருக்கு ஹிம்சை செய்யாதவன். பிறரை ஹிம்சைகளினின்று ரக்ஷிப்பவன். பிறரது துன்பங்களுக்கு மனமிரங்குபவன் என்று அர்த்தம். இறைவனது மூச்சுக் காற்றே எங்களது வேதம். வியாச மகரிஷி எங்களது வேதத்தை ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம் என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்து வழங்கியுள்ளார். ஒவ்வொரு ஹிந்துவும் கடைப் பிடிக்க வேண்டிய அனுஷ்டானங்களை வேதங்கள் கூறுகின்றன. இறைவனோடு நாம் ஐக்கியப் படவேண்டுமானால் ஒவ்வொருவரும் ஞானத்தைப் பெறவேண்டும். ஞானத்தைப் பெற தியானம் முக்கியமான ஒரு வழிமுறையாகும்... ஞானத்தைப் பெறுவதற்கான வழிமுறைகளை உபநிஷத்துக்கள் ஹிந்துக்களுக்குப் போதிக்கின்றன. ... ஆன்மா.... உடல்... மரணம்... மறுபிறவி... ஆகியவை பற்றி உங்கள் மத நம்பிக்கைகளை விளக்குங்களேன்...

ஃபாதர்: ஆன்மாவும் உடலும் வெவ்வேறானவை. ஆன்மா செய்யும் பாப புண்ணியங்களுக்கு உடலும் உதவியாக இருக்கிறது. ஒருவன் செய்யும் பாபங்களுக்கு இறைவனால் தண்டனை வழங்கப் பெறுவான். இந்தத் தண்டனையில் ஆன்மாவுக்கும், உடலுக்கும் பங்குண்டு. அதேமாதிரி புண்ணியம் செய்தால் அவனுக்கு மோக்ஷம் கிட்டும்... ஒவ்வொருவருக்கும் ஒரே பிறவி தான் உண்டு. ஒருவர் இறந்ததும், அவருடைய ஆன்மாவிற்கு இறைவன் தீர்ப்பு வழங்குவார். அவனது பாப புண்ணியங்களின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்படும்... இந்த உலகம் ஒரு நாள் முடிவுக்கு வரும்... பிறகு ஒவ்வொரு மனிதரும் மறுபடியும் உயிர்த்தெழுவர்... இதே ஆன்மா, இதே உடலுடன் இணைந்துதான் உயிர்த்தெழுவர்... அப்போது இறைவன் பொதுத் தீர்ப்பு வழங்குவார்... அவரவருடையபாப புண்யங்களின் அடிப்படையில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டும்... ஒருவன் நரகத்திலோ, மோக்ஷத்திலோ அனுபவிப்பதில் அவனுடைய உடலுக்கும் பங்கு உண்டு... உங்கள் மதக்கோட்பாடு எப்படி?

சாஸ்திரிகள்: ஹிந்து மதப்படியும் ஆன்மாவும் உடலும் வெவ்வேறானவைதான்... உடல் அழியக்கூடியது... ஆன்மா அழிவில்லாதது... ஒருவன் இறந்ததும் உடலுக்கு அழிவு வருகிறது... அது நிலம், நீர், காற்று, ஆகாயம், பூமி ஆகிய ஐந்து புலன்களுடன் இணைந்து விடுகிறது. ஆனால் ஆன்மா வேறு உடலில் புகுந்து கொண்டு மறுபிறவி எடுக்கிறது...

ஃபாதர்: இம்மாதிரி எத்தனை பிறவிகள் உண்டு?

சாஸ்திரிகள்: அவரவரது பாப புண்ணியங்களின் அடிப்படையில் அது அமைகிறது... ஒரு ஆன்மாவின் பிறவிகளின் எண்ணிக்கையும், பிறவிகளின் தன்மையும் அதனது 'கர்மா' வைப் பொறுத்தது... இந்த ஜன்மத்தில் அதிகம் பாபம் செய்திருந்தால் அவனது ஆன்மா அடுத்த ஜென்மத்தில் ஒரு ஈனப் பிறவியாகப் பிறக்கக்கூடும்...

ஃபாதர்: நீங்கள் சொல்வதுபடி ஒருவன் செய்யும் பாப புண்ணியங்களின் பலாபலன் ஆன்மாவுக்கு மட்டும்தான் உண்டு. உடலுக்குக் கிடையாது என்கிறீர்கள்... இல்லையா?...

சாஸ்திரிகள்: நமது சட்டைக்குள்ள மதிப்புத்தான் இந்த உடலுக்கு! ஆன்மாவுக்கு மட்டும்தான் எந்த வித பலாபலன்களும்.. பாவ மன்னிப்பு என்று உங்கள் மதத்தில் வழங்குகிறீர்களே... எந்தப் பாபம் செய்தாலும் அதற்கு மன்னிப்புக் கேட்டால் அப்பாபம் நிவர்த்தியாகி விடுமா?

ஃபாதர்: 'பாவ மன்னிப்பு' என்கிற வெறும் சடங்கால் மட்டுமே ஒருவன் தனது பாவத்தின் தண்டனையிலிருந்து தப்பிவிட முடியாது. இறைவன் அன்பு மயமானவர். ஒருவன் தான் செய்த பாபத்தை உண்மையாக உணர்ந்து கொண்டு, அதற்காக மனம் வருந்தி, ஆத்மபூர்வமான மன்னிப்பை இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும். அதோடு அந்தப் பாபத்திற்குப்

பிராயச்சித்தங்களைச் செய்ய முழு மனத்துடன் ஈடுபட வேண்டும்... அப்போது தான் அவனுக்குப் பாவ மன்னிப்பு இறைவன் சன்னிதானத்தில் கிடைக்கும். பாதிரி ஒரு சாதனம் தானேயொழிய பாவ மன்னிப்பை இறைவன்தான் வழங்குகிறார்.

சாஸ்திரிகள்: இதைத்தான் எங்கள் மதத்தில் சரணாகதி என்று சொல்கிறோம்!... 'Faith Healing' என்று வியாதிகளைக் குணப்படுத்த உங்கள் மதப்படி ஒரு வழிமுறை உள்ளதே அதைப்பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

ஃபாதர்: ஒருவன் ஆத்மபூர்வமாகத் தானாகவோ, அல்லது இன்னொருவர் மூலமாகவோ இறைவனைத் தியானித்தால் அதற்கு மனமிரங்கி இறைவன் அவனது வியாதியைக் குணமாக்கலாம்... குணமாக்காமலும் போகலாம்... மற்றபடி கத்தோலிக்க கிறிஸ்துவர்களுக்கு Faith Healing முறையில் ஈடுபாடு கிடையாது...

சாஸ்திரிகள்: திருமணம், விவாகரத்து மறுமணம் போன்றவை பற்றிய உங்கள் மதக் கோட்பாடுகள் வரையறுப்புக்கள் என்ன?

ஃபாதர்: இறைவன் சன்னிதானத்தில், 'வாழ்விலும், தாழ்விலும், இன்பத்திலும், துன்பத்திலும் சமபங்கு கொண்டு கணவன் மனைவியாக இறுதிவரை வாழ்வோம் என்று பிரமாணம் எடுத்துக் கொண்டு கணவன் மனைவியாகும் எந்த ஆணும் பெண்ணும் கடைசிவரை கணவன் மனைவி தான். விவாகரத்துக்கோ, மறுமணத்துக்கோ இதில் இடமே கிடையாது...

சாஸ்திரிகள்: இம்மாதிரி மணந்து கொண்டவர்கள் சட்டப்படி விவாகரத்து பெற்று வேறு மணம் புரிந்து கொண்டால்...

ஃபாதர்: அதை எங்கள் மதம் அங்கீகரிக்காது...

சாஸ்திரிகள்: மலட்டுத் தன்மை... போன்ற சில நியாய பூர்வமான காரணங்களின் அடிப்படையில் ஒரு கணவனும் மனைவியும் பிரிய விரும்பினால்...

ஃபாதர்: கணவனாகவோ, மனைவியாகவோ இருப்பதற்குத் தகுதியில்லை என்கிற அடிப்படையில் பிரிய விரும்பினால் அவர்கள் சர்ச்சிடம் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். இவர்களது மனுவை Church Court ஆராய்ந்து தனது பரிந்துரைகளுடன் ரோமில் உள்ள தலைமைப் பீடத்திற்கு அனுப்பி அவர்களும் அனுமதித்தால்தான் கணவன் மனைவி பிரிய முடியும்.

சாஸ்திரிகள்: இம்மாதிரியான ஓரிரு காரணங்களின் அடிப்படையில் கணவனுக்கு மறுமணம் அனுமதிக்கப்படுகிறது. தற்போது மக்களிடையே இறையுணர்வு எந்த அளவுக்கு இருக்கிறது என்று கருதுகிறீர்கள்?

ஃபாதர்: பொருள் வட்டத்திற்கு (Materialistic aspects) ஒரு சாராரிடையே அளிக்கப்படும் அதிக முக்கியத்துவத்தைக் காணும்போது மக்களிடையே இறையுணர்வு குறைந்து விட்டதோ என்கிற கவலை சில சமயம் என்னுள் தலைதூக்கினாலும் பெரும்பான்மையான மக்களின் மனநிலைகளை நோக்கும் போது இறை



◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

யுணர்வு அதிகரித்துள்ளது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. பொருள் வட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களும் ஒருநாள் அதில் வெறுப்புற்று இறைவனின் நினைப்பில் உண்மையான மகிழ்ச்சியைப் பெற வந்தாக வேண்டும்!

சாஸ்திரிகள்: என்னைப் பொறுத்த மட்டில் மக்களது மனத்தில் இறையுணர்வு சமீப காலத்தில் அதிகரித்து உள்ளது என்று தான் நினைக்கிறேன்... தற்போதைய சமுதாய நிலையில் துன்பங்களும் துயரங்களும் அதிகரிக்க அதிகரிக்க இறைவனிடம் பற்று அதிகமாவதாகக் காண்கிறேன்...

சாஸ்திரிகள்: இந்துமதச் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் ஆராய்ச்சி செய்ய 60 பேர்கள் அடங்கிய ஒரு குழு மலேயாவிலிருந்து சமீபத்தில் சென்னைக்கு வந்து, பண்டிகைகளைப் பற்றியும் மதச் சார்பான விசேஷங்களைப் பற்றியும் கேட்டார்கள்... இப்பண்டிகைகள் மூலம் சாதாரண நாளிலிருந்து மாறுபட்டு மக்களுடைய மனம் இறைவனது சிந்தனையில் அதிகம் ஈடுபட உதவும் என்று விளக்கம் கொடுத்தேன்... உங்கள் அபிப்பிராயம் என்ன?

ஃபாதர்: நீங்கள் சொல்வது சரிதான்... மக்கள் மனத்தில் இறையுணர்ச்சியை அதிகப்படுத்தவே மதசார்பான விழாக்கள் பெரும்பாலும் நடத்தப்படுகின்றன...

சாஸ்திரிகள்: உங்களுடன் இம்மாதிரி உரையாடல் நிகழ்த்த வாய்ப்புப் பெற்றதற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்...

ஃபாதர்: தேங்க் யூ...

உரையாடல் ஏற்பாடு: நாயகன்
போட்டோ: மன்னை மூர்த்தி



அந்தரத்தில்

மா. காசிதாசன்

“...ம்மா!... இன்னும் கொஞ்சுண்டு கஞ்சி ஊத்துமா!” — வட்டிலை நீட்டிய வண்ணம் பயந்தவாறே கேட்கிறாள் 'இரண்டாமவள்' மீனாட்சி!

“...எக்..க்...கு...ம்... ஓ..ஞ்...ச..ம்!!” — மழலையில் கெஞ்சியது 'கடைக்குட்டி' அம்மு! பாவம்! அம்மை வார்த்த உடம்பு ஆலாய்த் துடிக்கிறது.

போன வாரம்தான் தண்ணியெல்லாம் முடிந்திருந்தது. சிக்கேறிய தலைக்கு எண்ணெய் தேய்த்துவிடக்கூட வக்கில்லை!

மூத்தவன் மாரி கொஞ்சம் விசயம் புரிந்தவன். பாத்திரத்தின் அடியில் தேங்கியிருந்த சோற்றுப் பருக்கையினைச் சுட்டு விரலால் வழித்துச் சூப்பிக் கொண்டிருந்தான். அவனது கண்களோ, அம்மாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தன! பரிதாபம் — ஏக்கம் இரண்டுமே அந்தப்பார்வையில் பொதிந்திருந்தன!!

அஞ்சலை கலயத்தைப் பார்த்தாள்; அங்கே மீதமிருந்த சிறிதளவு கஞ்சி, அவளையும் சேர்த்து இன்னும் இரண்டு சீவன்களுக்கு 'உயிர்' ஊட்ட வேண்டியிருந்தது!

தன்னைப் பற்றிக் கூட அவள் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. ஆனால்?... அதோ —

'குப்பி விளக்கின்' மங்கலான வெளிச்சத்தில் ஆயுள் முடிந்துபோன கோணிப்பை ஒன்றின்மீது முழங்கால்களைக் கருட்டி முகத்தில் பதித்தபடி — வளர்ந்துவிட்ட தாடிக்குள் குழி விழுந்து போய்ச் சோர்வுற்ற கண்களை உருட்டிக் கொண்டு — நைந்து போன பழைய துப்பட்டியால் தன் உடலை மறைத்தவண்ணம் — இருமலைத் துணையாக்கிக் கொண்டு — மூலையில் முடங்கிக் கிடக்கிறானே... முத்தாரு... அவனுக்குக் 'கால் வயிற்று'க் கஞ்சியாவது கொடுத்து அவனைக் காப்பாற்ற வேண்டிய 'பொறுப்பு' அஞ்சலைக்கு நிச்சயமாக உண்டு!... காரணம்... அது அவளது 'கணவன்'!

பரிதாபமாகக் கெஞ்சிய குழந்தைகளுக்குப் பக்குவமாகச் சொல்லிவிட்டுக் கலயத்தில் இருந்த கஞ்சியைக் கிண்ணமொன்றில் ஊற்றிக் கணவனிடம் நீட்டினாள் அஞ்சலை. முத்தாரு அவளையே சிறிதுநேரம் உற்றுப் பார்த்தான்.

முத்தாரின் நெஞ்செல்லாம் கனத்தது; வார்த்தைகள் வெளிவர மிகவும் கஷ்டப்பட்டன!!

“...ஏம் புள்ளே!... கொளந்தைகளும் வயிறு நெறையாமெ... ஒன்னையும் பட்டினி போட்டுட்டு... நா மட்டும்... இந்த 'எளவைக்' குடிச்சி... பொளைச்சிருக்கணுமா? ... எனக்கு வேணும்மே!...”

அஞ்சலை அவனைச் சமாதானப்படுத்திக் கடைசியில் ஒருவழியாக அவன் அதை வாங்கிப் பருகுவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது!

கஞ்சிக் கலயத்தைத் தண்ணீர் விட்டுக் கழுவி அதையே அன்றைய தனது 'இரவு ஆகாரமாக' ஆக்கிக் கொண்ட அஞ்சலை குப்பி விளக்கை ஊதி அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டாள்!

ஆனால்—

'உறக்கம்' அந்தக் குடிசையின்மீது 'பகை' வைத்து அநேக நாளாயிற்றே!!

அவர்கள் 'ஓகோ' என்ற அளவில் நன்றாக வாழ்ந்து கெட்டவர்களுமல்ல; வறுமையிலே வாடியவர்களுமல்ல! காலமெல்லாம் கல் சுமந்தும், மண் சுமந்தும், கூலி பெற்று வந்தவர்கள்தாம். கல்யாணமாகி எட்டொன்பது வருடங்களாகிவிட்டன; முத்தாருக்குக்கல்லும் மண்ணும் சுமப்பது சர்வசாதாரண விஷயம். அவன் ஓடியாடிக் கூலி வேலை செய்து, கிடைத்த கூலியை ஒழுங்காகக் குடும்பத்துக்குச் செலவு செய்தவன்.

இரண்டு மாதங்களுக்கு முன்னால் திடீரென்று படுத்த முத்தாரு... பிறகு படுத்த படுக்கையே ஆகிவிட்டான். ஆம்!... ஒரு யந்திரம் பழுதடைந்துவிட்டது! அவனைக் கவனிப்பதே இப்போது அஞ்சலையின் முதல் கடமையாகி விட்டது!....அதனால் வருமானமும் நின்றது!!

ஏதோ அவர்களின் சக்திக்கு எட்டிய அளவில் மீதம் பிடித்து வைத்திருந்த சிறு தொகையை வைத்து எப்படியோ இந்த இரண்டு மாதங்களை — கால்வயிற்றுக் கஞ்சியுடன் ஓட்டி விட்டாள்! இனி இருப்பது... இன்னும் ஓரிரண்டு நாட்களுக்குத்தான் வரும்! பிறகு... பிறகு?...

அஞ்சலையின் நெஞ்சம் விம்மியது!

''...மச்சா!'' — இருளின் அமைதியில் அந்தக் குரல் மெதுவாக விரிந்தது. ''நா... காத்தாலைக்கி... அப்பாலே!... மேட்டுக்கரை வரைக்கும் போயிட்டு வாரேனே!?!...''

''...எதுக்கு?''

''...அந்தப் பக்கமா... எங்களூச்சும் வீடுகிடு கட்டறுங்களான்னு பார்த்து... வேலை பாக்கத்தா...!!''

அஞ்சலை சொன்ன வார்த்தைகள் முத்தாரின் உள்ளத்தில் 'பளீ'ரென்று அறைந்தன!

''... அஞ்சலே!... இம்புட்டு நாளா... நீ.. என்னோட... தொணையில்லாமெ... தனியா. ... வேலைக்குப் போனதில்லே!... ஆ னு... இப்போ... நா... ஒருத்தன்... உசிரோட இருந்துகிட்டே... தனியா... நீ... வேலைக்குப் போறமாதிரி காலம் வந்துடிச்சி!... நீ... போகாமெ இருந்தாலும் முடியாது!...

...நா... வேண்டான்னு தடுக்கவும் முடியாது... நாஇப்போ ஒண்ணுக்கும் உதவாத சீக்காளி!'' முத்தாரு கலங்கிப்போயிருந்தான்.

''...ஐயோ!... அப்படியெல்லாம் சொல்லாதெ மச்சா!... நா... எங்கேயும் போவலே!... நாம... எல்லாரும் வேணுமின்னா.. ஒண்ணாவே பட்டினியா கெடந்து ஒண்ணாவே செத்துப்புடுவோம்!!''

''...அஞ்சலே!... ஏழைன்னு தெரிஞ்சா தெரு நாய்கூட கொரைக்கும்!... ஆண்டவன் ஒனக்கு அழகான ஒடம்பை வேறே கொடுத்துட்டான்!!... ஒன்னெ இப்ப... பாத்தா... யாரும் மூணு புள்ளைங்க பெத்தவன்னு சொல்லவே மாட்டாங்க!... அதுலேயும்... ஆம்புளெ தொணையில்லேன்னு தெரிஞ்சா... சோமாறிப் பசங்க... இன்னு வேணுமின்னாலும் செய்யிவானுக!...''

''... ம...ச்...சா...!''

அவனது மார்பைத் தடவிக் கொடுத்த அஞ்சலை விரக்தியுடன் சிரித்துக் கொண்டாள்! இந்த நிலையிலும் தன் வீட்டுக்காரனுக்கு அவள்மீது இருந்த 'பாசப்பிணைப்பை'யும், அவனது அந்தரங்கத்தில் எழுகின்ற உணர்ச்சிப் போராட்டங்களையும் எண்ணிப் பார்த்தாள்!...

சூரியனும் 'பசி'க் கொடுமைக்கு ஆளானவன் போலத் தன் 'தீ' நாக்குகளை நீட்டிய வண்ணம் விரைந்து கொண்டிருந்தான்...

அஞ்சலை அடுப்பில் கஞ்சியைப் போட்டுக் கொண்டிருந்தாள்...

எப்போதோ அணைத்து, பத்திரமாக வைத்திருந்த பழைய துண்டுப்பீடியைப் பற்ற வைத்து... புகை இழுத்து... அதில் தன் சஞ்சலத்துக்குச் சமாதானம் தேடிக்கொண்டிருந்தான் முத்தாரு!...

''... அஞ்சலெ!... அய்யங்கோயில் பக்கமா... புதுசா... வூடு கட்டறுங்களாம்!... வேலை இருக்குதுன்னு... மேத்திரி சொல்லிட்டுப் பூச்சு!... வாரியா?...''—என்று கேட்ட வண்ணம் வாசலில் வந்து நின்ற எதிர்மேட்டு வீட்டைச் சேர்ந்த காளியம்மாவை ஆர்வத்தோடு திரும்பிப் பார்த்த அஞ்சலை, அடுத்த கணம் தன் ஆர்வத்தை அடக்கியவளாய்...

''...இல்லெ ஆத்தா!... அம்முவுக்கு ஒடம்பு



நெருப்பாக் கொதிக்கிது!... நா... வல்லெ!'' —எனப் பொய்யுரைத்தாள்.

பழைய துண்டுப் பீடியை அதிகம் இழுத்துப் புகைத்ததன் காரணமாக 'இருமலை' விலைக்கு வாங்கிக் கொண்ட முத்தாரு, தன் இருமலைக் கஷ்டத்துடன் கட்டுப் படுத்திக் கொண்டு, அஞ்சலையை அழைத்து அவள் வேலைக்குப் போகத்தான் வேண்டும் என்று விடாமல் பிடிவாதம் செய்தான்!

அஞ்சலையும் அரைமனசு சமாதானத்துடன் வேலைக்குப் புறப்பட்டு விட்டாள்!

அங்கே—

அவள் வேலையைத் துவங்கிய அரைமணி நேரத்துக்குள்ளாக, தன் கணவன் இரவு சொன்ன வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவை என்பதனைக் கண்டு விட்டாள்!...

எப்படியோ பொழுது ஓடியது...

சாயங்காலம் கூலியைப் பெற்றுக்கொண்டு நேராகக் கடைக்குச் சென்றவள் — அந்தப் பணத்தில் ஏதோ கிடைத்ததை வாங்கிக் கொண்டாள்!... அப்படியும் அவள் வாங்கிய 'தரித்திர'ச் செலவுகளுக்கிடையே 'பதினைந்து காசு' மீதியாகிக் கையில் கிடந்தது!...

''...பாவம் மச்சான்!... நல்லபடியா... பீடி வாங்கிப் பிடிச்சி எம்மா நாளாச்சி?... இதுக்குப் பீடியே வாங்கிக்குவோம்!...'' அவளது கையில் பீடிகள் இடம் பெற்றன!

வீட்டினுள் நுழைந்தவள் ஆசையோடு தன் கையிலிருந்து பீடிகளை நீட்டினாள்.

அவன்... பேசவேயில்லே!...

அவனருகில் சென்று முழங்காலிட்டு உட்கார்ந்தாள்!... அவன்...

திறந்த கண்கள் திறந்தபடி... திறந்த வாய் திறந்தபடி... தன் கதைக்கு 'மங்களம்' பாடியிருந்தான்!

''... அய்யய்யோ மச்சா!... என்னெ.. வுட்டுட்டு... போயிட்டியே!... இதுக்காகவா. என்னெ வேலைக்குப் போகச் சொன்னே?... அய்...யோ!... இத்தனெ... நாளா... பாவி வூட்டுலேயே இருந்தேனே!... இன்னிக்கி பாத்து... போயிட்டேனே!...''

அஞ்சலையின் துயரம் வெடித்தது!... அழுதாள்!... அழுதாள்!... அதைவிட அவளால் வேறென்ன செய்ய முடியும் பாவம்?

வாரம் ஒன்று எப்படியோ முடிந்தது. அஞ்சலையின் சோகம் நெஞ்சிலிருந்து நீங்குவதற்கு எந்த வகையிலும் வழியில்லே!...

எப்படியோ வறுமையிலும் சிறுமையிலும் அவளுக்குத் 'துணை'யென்று இருந்த ஒரே ஜீவன் இன்று இல்லை!...

கணவனோடு சேர்ந்து தானும் போய்விடலாம் என்று எண்ணினாள்...! ஆனால்... குழந்தைகளின் கதி?...

ஆம்! குழந்தைகளுக்காகவேனும் அவள் வாழ்ந்துதான் ஆகவேண்டும். ஆகவே— மீண்டும் வேலைக்குப் போனாள் அஞ்சலை.

எப்படியோ இரண்டு மூன்று வாரங்கள் அரை வயிற்றுக் கஞ்சியாவது குழந்தைகளுக்கு அளிக்க முடிந்தது!... ஆனால் மேஸ்திரியின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்தன!... இருந்தாலும் 'அஞ்சலை' என்ற நெருப்புக்கு அருகில் நெருங்க அவனால் முடியவில்லை!

மறுபடியும் சோதனை!...

இரண்டு நாட்கள் தொடர்ந்து பச்சைத் தண்ணீரையே குழந்தைகளுக்கு ஆகாரமாக அளிக்க வேண்டிய பரிதாபகரமான நிலைக்கு அவள் ஆளான போது...

அவளது நெஞ்சமெல்லாம் தீப்பற்றி எரிந்தது!... துடிக்கின்ற இளம்பிஞ்சுகளைக் காணக்காணத் 'தாய்மை' நிலை கொள்ளாமல் தவித்தது!...

பொறுக்க மாட்டாத வேதனையின் விளிம்பில் நின்ற அவளுக்கு முன்னே... 'சிறு ஒளி'... ஒன்று...

ஒரே ஒரு நாளுக்கு மட்டும் இருக்கின்ற கட்டட வேலையொன்று... சற்றே மகிழ்ச்சியளித்தது!

இரண்டு நாட்களாக வாட்டியெடுத்த பட்டினியைக்கூட அவள் மறந்து விட்டாள்! ... பசியே தெரியாமல் பகல் முழுவதும் கல் சுமந்தாள்!... இந்தப் பொறுமைக்குப் பெயர்தான் 'பெண்'மையோ?... இந்தத் தியாகத்தின் பெயர்தான் 'தாய்'மையோ?...

சேலைத் தலைப்பில் கட்டியிருந்த அரிசி முடிச்சுடன் குடிசை நோக்கி விரைந்த அஞ்சலையின் நெஞ்சத்தில் "...இனி... நாளைக்கு... என்ன செய்யப்போகிறோம்...?" — என்ற கேள்வியே எழுந்தது!...

வயலுக்கு மருந்து தெளித்து விட்டு மீதியிருந்த 'மருந்து' டப்பாவை வரப்பின்மீது வைத்த வடிவேலு கைகழுவக் கால்வாய்ப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தான்.

வரப்பின்மீது கிடந்த அந்த 'பூச்சிக் கொல்லி' மருந்து அஞ்சலையின் கண்களில் அதிவேகமாகப் பட்டது! அந்தக் கணமே அவளது உள்ளத்தில் ஆவேசமானதோர் உணர்வும் தோன்றியது!...

அடுத்த அரைமணி நேரத்தில் 'அருமையான' கஞ்சி தயாராகி விட்டது! 'அதை'யும் போட்டு நன்றாகக் கலக்கி விட்டாள்?...

"மாரி எங்கே...?" — என்றபடி அவள் வெளியே பார்க்கவும் — அப்போதுதான் மாரி வீட்டுக்குள் நுழையவும் சரியாக இருந்தது!

"அப்புச்சி எங்கே போயிருந்தே?"

"... ஸ்கோலு பக்கமா... அல்லாரும் மீட்டிங்கு பேசிக்கிட்டிருந்தாங்க!... அங்கே தான் போயிருந்தேன்!"

ஆளுக்கொரு தம்ளர் கஞ்சி ஊற்றியாகி விட்டது!... குழந்தைகள் ஒவ்வொருவராகக் குடித்தபின்... மீதியைத் தானும் குடித்து விட்டு ஒரேயடியாகப் படுத்துக் கொள்ள வேண்டியது அஞ்சலையின் திட்டம்!...

திட்டத்தின்படியே செயலாற்றவும் முனைந்து விட்டாள்! ஆனால்?...

மாரி மட்டும் அம்மா கொடுத்த கஞ்சியைக் குடிக்காமல்... மெதுவாக அதை அம்மாவுக்குத் தெரியாமல் தங்கை மீனாட்சியின் காலியான தம்ளருக்கு இரண்டாம் முறையாக ஊற்றிவிட்டு... பேருக்குக் கஞ்சி குடித்தது போல உதட்டில் சிறிது தடவி— அதைத் துடைத்துவிட்டுப் பாவனை செய்தவன் அப்படியே படுத்தும் விட்டான்! காரணம் அவன் சாயங்காலம் பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில் நடந்த பொதுக் கூட்டத்திற்குச் சென்றிருந்தபோது... அங்கு யாரோ பெரிய அரசியல் தலைவரின் 'பிறந்தநாள்' என்று சொல்லி ஆயிரம் பேருக்கு அன்னதானம் போட்டார்கள்!... அங்கே பந்தியில் உட்கார்ந்து மூக்குப் பிடிக்க உண்டுவிட்ட காரணத்தினால் இப்போது இந்தக் கஞ்சியின் மீது அவனுக்கு விருப்பமில்லாமல் இருந்தது! அதை அம்மாவிடம் சொல்லவும் பயம்!... அதனால் தங்கை மீனாட்சியின்மீது இரக்கப் பட்டுத் தன்பங்கை அம்மாவுக்குத் தெரியாமல் அவளுக்கே ஊற்றிவிட்டான்!

மாரிக்குத் தூக்கம் வரவில்லை! புரண்டு படுத்தான். பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டதை அம்மாவிடம் சொல்லாமல் மறைத்தது பாவம் என்று அவனது உள்மனம் உறுத்தியது. இப்பொழுதேனும் அதை சொல்லிவிடத் தீர்மானித்து அம்மாவை அழைத்தபோது...

மிகவும் பிரகாசமாக ஒருமுறை இறுதியாக எரிந்து விட்டு அப்படியே அணைந்து விட்டது குப்பிவிளக்கு!... குடிசைக்குள் ஒரே இருட்டு... வெளியே இலேசாக வீசிய காற்றுவேறு இப்போது இரைச்சலோடு ஓலமிட்டது...

மாரிக்கு பயம் கவ்விக் கொண்டது...

பலமுறை கூப்பிட்டுப் பார்த்தும் அம்மாவின் பதில் காணாத காரணத்தினால்... அவளை உலுக்கிப் பார்த்தான்... அப்போதும் அஞ்சலையிடமிருந்து பதிலேதும் வரவில்லை!...

இறுதியாக என்ன செய்வதென்றே அறியாத நிலையில் 'ஓ'வென "அம்மா! அம்மா!" என்று அழத் தொடங்கி விட்டான்.

"அம்மா! அம்மா!"... என அழைக்கும் அருமை மாரிக்கு 'அந்தரத்தில்' நிற்கும் அஞ்சலையின் ஆவி திரும்பி வந்து ஆறுதல் அளிக்குமா?...



எழுத்தாளர்: என்னுடைய படைப்புக்களின் அருமை தெரிந்த ஒரே நபர்...


அவர்: யார் அது... உங்க மனைவியா...?"

எழுத்தாளர்: ஊஹூம்! பழைய பேப்பர் பரமசிவம்!

உ.. ராஜாஜி.

அருள்வாக்கு

கண்ணனும் முக்கண்ணனும்



ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

இப்போது குழந்தைப் பிராயத்திலிருந்தே டிரஸ், விளையாட்டு, பேச்சு எல்லாம் இங்கிலீஷ் ஃபாஷனில் இருக்கிறது. ஆனால் 'தேசியம் தேசியம்' என்று கூறுகிறோம். அந்தத் தேசியத்துக்குள்ளேயும் தமிழ்ப் பண்பு, தெலுங்குப் பண்பு, கேரள கலாசாரம் என்ற வார்த்தைகள் இப்போதுதான் ஒரே கோஷமாயிருக்கிறது. இந்தப் பேச்செல்லாம் இல்லாமல், நமக்கென்று உள்ள கலாசாரப்படி நிஜமாகவே வாழ்ந்த காலத்தில் குழந்தைகள் விளையாட்டு வேறு தினுசாய் இருந்தது. விளையாட்டும்கூட ஈச்வரபரமாகக் கொண்டு சேர்க்கும்படி இருந்தது. நான் சொல்லப் போகிறது, நாற்பது, ஐம்பது வயசுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்குத் தெரிந்திருக்காது.

அதற்கு முந்தி சிவராத்ரியன்று ஸாயங்காலம் குழந்தைகளெல்லாம் ஸந்தோஷமாக ஒன்று சேர்ந்து, வீடு வீடாய், தெருத் தெருவாய்ப் போய் ஒவ்வொரு வீட்டு வாசலிலும், ''சேந்தி அம்பாரம்; சிவராத்ரி அம்பாரம்'' என்று உத்ஸாஹமாகக் கத்துவது வழக்கம். உடனே வீட்டுக்காரர்கள் அந்தக் குழந்தைகள் கொண்டு வருகிற பாத்திரத்தில் ஒரு கரண்டி எண்ணெய் விடுவார்கள். இப்படி வீடு வீடாக எண்ணெய் சேகரித்துக் கொண்டு குழந்தைகள் ஈச்வரன் கோவிலுக்குப் போய் தீபத்துக்குக் கொடுப்பார்கள். விடிய விடிய தீபங்கள் அணையாமலிருப்பதற்காகத்தான் இப்படி வீட்டுக்கு வீடு எண்ணெய் சேகரித்தது. சின்ன வயசுக் குழந்தைகள் முதற்கொண்டு நாலு ஜாமமும் சிவராத்ரிக்குக் கண் விழித்து, தீபம் அணையாமல் அவ்வப்போது எண்ணெய் போட்டுக் கொண்டும், பூஜையைப் பார்த்துக் கொண்டும் பஜனை பண்ணிக் கொண்டும் விரதாநுஷ்டானம் பண்ணினார்கள். அவர்களுக்கே சொந்தமாக இதில் ஈடுபாடு வரும்படியாகத்தான் ஆலயத்துக்கு எண்ணெய் வாங்குவதை அவர்கள் பொறுப்பில் விளையாட்டாகப் பண்ணிக் கொடுத்து, உத்ஸாஹப் படுத்துவதற்கு Slogan ஆக (கோஷ வாசகமாக) ''சேந்தி அம்பாரம்; சிவராத்ரி அம்பாரம்'' என்றும் பெரியவர்கள் சொல்லிக் கொடுத்தார்கள்.

'சேந்தி' என்றால் 'ஸ்ரீஜயந்தி.' 'அம்பாரம்' என்றால் ஸம்ருத்தி, செழிப்பு என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம். 'அம்பாரமாகக் குவிந்திருக்கிறது' என்கிறோமல்லவா? அல்லது, 'என்பாராம்' என்பதே திரிந்து 'அம்பாரம்' ஆகி விட்டது என்றும் சொல்லலாம்.. 'ஸ்ரீஜயந்தி என்பாராம்; சிவராத்ரி என்பாராம்' என்பதே மருவி 'சேந்தி அம்பாரம், சிவராத்ரி அம்பாரம்' என்றாகிவிட்டது.

சரி, ஸ்ரீ ஜயந்திக்கும் சிவராத்ரிக்கும் என்ன ஸம்பந்தம்? 'கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் என்ன ஸம்பந்தம்?' என்று வேடிக்கையாகக் கேட்பதுண்டு; கோகுலாஷ்டமி, ஸ்ரீஜயந்தி இரண்டும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் ஜனன மஹோத்ஸவத்துக்குப் பெயர்கள் தான். சைவமான சிவராத்ரியன்று, முதலில் வைஷ்ணவமான ஸ்ரீஜயந்தியை ஏன் சொல்ல வேண்டும்?

இதைப் பார்க்கிற போது, ஆதிகாலத்தில் சின்னக் குழந்தைகளுக்கும் கூட சிவ—விஷ்ணு பேத புத்தியில்லை; அப்படி இல்லாமலிருக்கும் படியாகவே பெரியவர்கள் வளர்த்தார்கள் என்று தெரிகிறது. 'அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயிலே மண்ணு' என்பதும் குழந்தைகள் வாக்குதானே? ('அரி—யாதவன் வாயிலே மண்ணு' என்றும் சொல்லலாம். ஈச்வரனும் விஷ்ணுவும் ஒன்றுதான். ஆனால் யோகம், ஸமாதி, ஞானம் என்றில்லாமல் 'லோக விவகாரம், லோக நிர்வாகம், பரிபாலனம் என்றெல்லாம் இந்த உலகை — மண்ணை — பற்றிய காரியம் வந்து விட்டால் அது மஹாவிஷ்ணுவைச் சேர்ந்ததுதான். இதைக் காட்டத்தான் அவருடைய பூர்ணாவதாரமான கிருஷ்ணன், யாதவ குலத்தில் பிறந்த ஹரி (அரி — யாதவன்) மண்ணைத் தின்று தன் வாயிலேயே யசோதைக்கு லோகம் பூராவையும் காட்டினான். இதனால் 'அரி—யாதவன் வாயிலே மண்ணு' என்றும் சொல்லலாம்.

ஸ்ரீஜயந்தியையும் சிவராத்ரியையும் சேர்த்துச் சொல்வதில் ரொம்பவும் பொருத்தமுண்டு. பகவான் (ஸ்ரீ கிருஷ்ணன்) கீதையில் தன்னைக் குறிப்பாக 'மஹாவிஷ்ணுவின் அவதாரம் மாத்திரமே என்று சொல்லிக் கொள்ளவில்லை. ''ஆதித்யர்களுக்குள் நான் விஷ்ணுவாயிருக்கிறேன்'' என்று சொன்னவர் ''ருத்ரர்களுக்குள் நான் சங்கரனாயிருக்கி

றேன்'' என்றும் சொல்கிறார். அர்ஜுனனுக்குக் காட்டிய விச்வரூபத்தில் அவர் விஷ்ணுவுக்குரிய பரிபாலனத்தைக் காட்டாமல், ருத்ர ஸ்வரூபமாக ஸம்ஹாரம் பண்ணுவதையே காட்டி அவனை நடுநடுங்க வைத்திருக்கிறார். அப்புறம் அவன், ஒரேயடியாக அழுது, 'கிரீடம், கதை, சக்ரம் எல்லாம் வைத்துக் கொண்டு சதுர்புஜ ரூபத்தில் தரிசனம் கொடப்பா' என்று வேண்டிக் கொண்ட பிறகுதான் அப்படிப்பட்ட மஹாவிஷ்ணு ஸ்வரூபத்தைக் காட்டினார்.

இதெல்லாவற்றையும் விட ஒரு பெரிய ஸம்பந்தம் ஸ்ரீஜயந்திக்கும் சிவராத்ரிக்கும் இருக்கிறது. பஞ்சாங்கத்தை எடுத்து நாள் கணக்கு பண்ணிப் பார்த்தீர்களானால் இது தெரியும். அதாவது, ஸ்ரீஜயந்திக்கும் சிவராத்ரிக்கும் சரியாக அரைவருஷம் – 180 நாட்களுக்கு ரொம்பவும் கிட்டத்தட்டவே – இடைவெளியிருக்கும்! ரூபத்தைப் பாதி பாதியாக்கி சங்கர – நாராயண மூர்த்தியில் வலது பாதி ஈச்வரன், இடது பாதி பெருமாள் என்கிற மாதிரி, காலத்தைப் பாதி பாதியாக்கினால் தக்ஷிணாயனத்தில் கிருஷ்ண ஜயந்தி; உத்தராயணத்தில் சிவராத்ரி. கார்மேக வண்ணனான பெருமாள் இருட்டு ஜாஸ்தியான தக்ஷிணாயனத்தில் கிருஷ்ணனாக ஜனித்தார்; வெள்ளை வெளேரென்று சுத்த ஸ்படிக ஸங்காசமாயிருக்கும் பரமேச்வரன் வெளிச்சம் அதிகமுள்ள உத்தராயணத்தில் சிவலிங்கமாக உத்பவித்தார். ஆனாலும், 'அரியும் சிவனும் ஒன்றானாலும் லோகத்தைத் தள்ளின நிலைக்கே சிவன் முக்யமாக இருக்கிறார். லோகம் என்று வந்து விட்டால் மஹாவிஷ்ணு தான் முக்யம்' என்ற நியாயப்படி, வாக்கு, மனஸ், த்ருஷ்டி எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட அரூபமான சிவஸ்வரூபம் லோக ஜனங்கள் கண்ணால் பார்த்து, வாக்கால் துதித்து, மனஸில் தியானம் பண்ணும்படியான லிங்கமாக வந்தது என்பதால் சிவராத்ரி வெளுப்பான சுக்ல பக்ஷத்தில் இல்லாமல், இருட்டான க்ருஷ்ணபக்ஷ சதுர்தசியாகவே இருக்கிறது. இருந்தபோதிலும் க்ருஷ்ண பக்ஷத்தின் நட்டநடுவான அஷ்டமியில் வருகிற க்ருஷ்ண ஜயந்தி மாதிரியன்றி, சிவராத்ரியானது க்ருஷ்ண பக்ஷத்தின் கோடியில் சுக்ல பக்ஷத்துக்குக் கிட்டத்தில் வருகிறது.

பிரித்துச் சொன்னாலும் சிவ–விஷ்ணு பேதமேயில்லை என்று காட்டத்தான் ஸ்ரீ ஜயந்தியன்று க்ருஷ்ண பரமாத்மாவின் ஜனனம், சிவராத்ரியன்று லிங்க உத்பவம் இரண்டும் ஒரேபோல நட்டநடு நிசியில், ராத்திரி பன்னிரண்டு மணிக்கு, சரியாக அரை வருஷ இடைவெளியில் ஏற்பட்டிருக்கிறது. கனத்தகாரத்தில் ஜ்யோதிர்லிங்கம் தோன்றியதாலேயே அதற்கு அதிகப் பெருமை தெரிகிறது.

குழந்தை வாக்கு தெய்வ வாக்கு. 'சீசந்தி அம்பாரம், சிவராத்திரி அம்பாரம்' என்று அவர்கள் சொல்கிற அபேத தத்துவத்தை நாம் எல்லாரும் உணர்ந்து, சிவராத்திரியன்று உபவாஸமிருந்து ஈச்வராநுக்ரஹம் பெறுவோம்!

கடவுள் வந்திருந்தார்

வாசகர்களுக்கு அதிர்ச்சி தருவதுபோல் ''ஷாக்கிங்''காகக் கதை எழுதுவதில் சுஜாதா வல்லவர். இந்த நாடகக் கதையிலோ ''ஷாக்'' தருகிற எதிர்கால மனிதனையே முக்கிய கதாபாத்திரமாக்கியுள்ளார். பசி யெடுத்தால் அவன் உண்பதே மின்சாரம் தான் எனில் அவனைத் தொட்டால் ''ஷாக்'' அடிக்காமலா இருக்கும்?



'இப்படியும் ஒரு மனிதன் எதிர்காலத்தில் இருப்பானா? அவன் பூவுலகுக்கு வருவானா? நடக்கிற காரியமா?' என்றெல்லாம் வாதம் பண்ணிக் கொண்டிருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதனை நகைச்சுவை நாடகமாக்கி விட்டார் ஆசிரியர். அது பூர்ணம் விசுவநாதனுக்கு ரொம்ப வசதியாகப் போயிற்று. அவர் கண்ணுக்கு மட்டுமே புலப்படுகிற எதிர்கால மனிதனிடம் மாட்டிக் கொண்டு அவர் படுகிற அவஸ்தை, சிரித்துச் சிரித்து நாம் படுகிற அவஸ்தையை விட அதிகமல்ல!

பூர்ணத்துக்கு இயக்குனர் கே. எஸ். நாகராஜனும் மற்ற நடிகர்களும் பூரண ஒத்துழைப்புத் தந்திருக்கிறார்கள். ஷோபா, விஜயப்ரியா, சந்துரு, மாஸ்டர் ஸ்ரீராம், கூத்தபிரான் ஆகிய கலாநிலயக் குழுவினரின் நடிப்பாற்றல் ரசிகர்கள் அறிந்ததுதான்.

காரைக் கிளப்பிவிட்டு நிறுத்தத் தெரியாமல் தவிப்பது போன்ற திரைப்படக் காட்சிகள் பார்த்திருக்கிறோம். நாடகத்தின் பின்பகுதி, கதையை ஆரம்பித்து விட்டு முடிக்கத் தெரியாமல் தவிப்பது போன்ற எண்ணத்தை உருவாக்குகிறது. எங்கோ ஆரம்பித்து எப்படியோ முடிகிறது என்றாலும் முடிவில் பெறப்படுகிற தத்துவம் ஏற்புடையதுதான்.

கடவுள் வந்திருந்தார் — சிரிப்பு வரம் தந்தருளினார்!

—குட்டிகிருஷ்ணன்.



கோவி. மணிசேகரன்

25. பாரா உஷார்...

பேடனூர் என்றும் மூங்கில் நகர் என்றும் காலம் மாறுபாட்டுக்கேற்பவும் காவலர் வேறுபாட்டுக்கேற்பவும் அழைக்கப்பட்ட அழகு வாய்ந்த ஹைதர்நகர், ஒரு சரித்திரப் பெருமை வாய்ந்ததேயாகும். இல்லையென்றால், ஒரு காலத்தில் ஹைதர் அலி, இந்நகரையே தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்த விழைந்திருப்பாரா? அதற்கான காரணங்கள் வேறு! கதையே வேறு.

சுருங்கச் சொன்னால் ஹைதர் அலியின் சுதந்திர சாம்ராஜ்யக் கனவுக்கே அழுத்தமாக ஓர் அஸ்திரவாரமிட்டது இந்தப் பேடனூர் வெற்றிதான்! ஓர் இருபதாண்டு கால இடைவெளியில் மலர்ந்த ஜயபுஷ்பம்தான் இந்த ஹைதர் நகர். பேடனூரை நாயக்க வமிசம் மூங்கில் நகராக்கியது. இஸ்லாமிய வமிசம் ஹைதர் நகராக்கியது. இந்த ஜயக் கொடியின்கீழ் குவிந்த செல்வமான ஒன்றரைக் கோடி பொன்தான் ஹைதர்அலியை மிகுந்த துணிச்சலுடன் தலைநிமிரச் செய்தது.

வலி மிகுந்த கோட்டை பலம்; வனப்பு மிகுந்த அரண்மனை; வாயைப் பிளக்க வைக்கும் வெடிமருந்துச் சாலை;வாழ்வைச் சொர்க்கமாக்கும் நாணயத் தம்பட்டசாலை போன்ற இன்னும் பல எத்தனையோ சிறப்புக்களைக் கொண்ட அந்தப் பகுதி, வீரமிக்க மலைஜாதி மக்களால் வேட்டுவர்களால், சூழப்பட்டது. இப்பேர்ப்பட்ட இயற்கை எழில் மிக்க மலரை, தமது தலைப்பாகையின் முன்பகுதியில் செருகிக் கொள்ள ஹைதர் விழைந்ததில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்?

ஆயினும் ஸ்ரீரங்கப் பட்டினத்தையே தலைநகராகக் கொண்டார். ஏன்? மைசூர் உடையார் வமிசம் எந்த விநாடியிலும் தலைதூக்கலாம். மஹாராஜ தந்திரியான திருமலை ராவிடம் இருந்த பயம், ஹைதரை ஸ்ரீரங்கப்பட்டினத்திலேயே தங்க வைத்தது. ஹைதர் நகர் பிற்காலத்தில் ஓய்வுகொள்ள உதவும் என்று மேலும் அழகுபடுத்தியதோடல்லாது தனிப்பட்ட இரகசியங்களைப் பாதுகாக்கவும் அந்த நகரைத் தமது நேரடிப் பார்வையில் பராமரித்து வந்தார்.

ஹைதர் நகரின் பெயர் போன சிறைக் கூடத்தின் ஒவ்வொரு வரிசையும் மிகவும் ரகசியமானவை. ஹைதர் அலியைத் தவிர்த்து வேறு எவருமே நுழைந்து துணிச்சலுடன் ரகசியங்களை ஆராய முடியாது. சின்ன வயதில் திப்புகூடத்தான் இந்நகருக்கு வந்திருக்கிறான். அதுவும் எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டிப் பெரிய கல்தானுபேகம் பக்ருன்னிஸாவையும் திப்பு கல்தானையும் இங்கே அனுப்பி வைக்க நேர்ந்தபோது! அப்போது திப்பு சிறுவன். அதன்பிறகு ஹைதரே இரண்டொரு முறைதான் வருகை தந்திருக்கிறார்.

பேடனூரைச் சார்ந்த சுற்றுவட்டத்திலுள்ள கோட்டைகள் யாவும் ஹைதர் அலிபால் மண்டியிட்டுச் சரணடைந்தவையே! அத்தனைக்கும் தனிப்பெரும் ஆளுநராக நேமிக்கப் பட்டிருந்தான் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஷேக் அயாஸ்கான். அவனது வலிமை மிக்க கரங்களின் பத்துவிரல்களுக்

குள்ளே பத்துக் கோட்டைகள் பொம்மலாட்டம் ஆடிக் கொண்டிருந்தன.

அந்தி சாயும் நேரத்தில் ஆளுநர் அயாஸ்கான், சிறைக் கூடத்தைப் பார்வையிடப் புறப்பட்டான். பசவராஜ், ரங்கநாயகியின் வருகைக்குப் பிறகே இந்தச் சிறைக்கூடத்துக்கு அயாஸ்கானே நேரில் வந்து கவனிக்கிற பெருமை ஏற்பட்டது. அவனது அக்கறையில் ஹைதரின் சிம்ம சொப்பனம் கர்ஜித்துக் கொண்டிருந்தது.

பணியாளர்கள் விரைந்து விளக்குகளை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் புறப்பட்டு விட்டார் என்கிற செய்தி அவர்களுக்கு எட்டி விட்டது. இதற்கு முன்னே சோம்பேறிகளாய் இருந்து விட்டவர்கள். அந்தச் சிறைக் கூடத்தின் துர்நாற்றமும், இரவு வந்ததும் கரிய இருட்பயமும்...

ஆ! எத்தனை கைதிகள் தைரியமற்றும், முடைநாற்றம் தாங்க முடியாமலும் நெஞ்சு வெடித்தும் தற்கொலை செய்து கொண்டும் இறந்திருக்கிறார்கள்...

இப்போது அந்த இரண்டும் -- துர்நாற்றமும் இருட்பயமும் அங்கே இல்லாமை கண்டு கைதிகள், ஓரளவு மகிழ்ந்தனர். வருகை தந்திருந்த பசவராஜையும் ரங்கநாயகியையும் வாழ்த்திக் கொண்டனர். இவர்கள் காலம் முழுதும் இங்கே இருந்துவிட மாட்டார்களா என்றும் ஏங்கினர். இவர்களால் தாமே ஆளுநரே இங்கு வந்து நேரடிப் பார்வையில் கவனிக்கிற வாய்ப்பு ஏற்பட்டது; வசதிகள் கண் விழிக்கலாயின...

சிறைக்கோட்டத்தில் தீப்பந்தங்கள் ஒளி உமிழ்ந்து கொண்டிருந்தன.

தனது முக்கிய அலுவலாளர்களுடன் புறப்பட்டு வந்த அயாஸ்கான், ஓரிடத்துக்கு வந்ததும் அலுவலாளர்களைத் தங்கச் செய்து, தனித்துப் புறப்பட்டு நடந்தான். அவனது கால்கள் பசவராஜ், ரங்கநாயகி அடைபட்டிருந்த சிறையறையின் அருகே சென்று நின்றன.

சிறைப் பறவைகளாய் ஒரே கூண்டில் — சிறையில் அடைபட்டிருந்த பசவராஜும் ரங்கநாயகியும், அயாஸ்கான் வருகைக்காகக் கொஞ்சமும் மதியாது எப்போதும் போலவே தனித்தனியாக அமர்ந்து காணப்பட்டனர்.

அந்தச் சுவரோரத்தில் அவனும், இந்தச் சுவரோரத்தில் அவளுமாக அமர்ந்து, ஏதோ பைத்தியமான நிலைக்குத் தங்களை உட்படுத்தி ஆட்கொண்டவர்களே போலக் காணப் படுவதைக் கவனிக்கிறான் அயாஸ்கான்...

சிறையில் அடைபட்ட நாள் முதற்கொண்டே அயாஸ்கான், இவர்கள் மீது ஒரு தனியான அக்கறை செலுத்தியதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு



பசவராஜ் பற்றிய வீரப் பிரதாபங்களை அயாஸ்கான் நிறையவே கேள்விப் பட்டிருக்கிறான். திப்புவின் அத்யந்த நண்பனான இவனால் பின்னாளில் தனது கீர்த்திக்கு ஏதும் அபகீர்த்தி நிகழ்ந்து விடக்கூடாது என்பது ஒருபுறமானாலும், தனது அப்போதைய வஞ்சக நோக்குக்கு இவனைத் தன்வயப்படுத்த முடியுமா என்றும் எதிர்பார்த்துச் சௌகரியங்களைத் தனது நேர்ப்பார்வையில் கவனித்தான்.



ரங்கநாயகியின் அபரிமிதமான பேரழகு ஓர் உருதுக் கவிதையைப் போல மயக்கியது. அவன் கேரள வாசியானாலும் அங்கும் இம் மாதிரி திங்கள் முகத்தைத் தரிசித்தானில்லை. ஓ... பாரசீகத்து ரோஜா மாதிரி மலர்ந்து மணக்கிறாளே!... திப்புவின் மயக்கமும் அவனது தந்தையின் தயக்கமும் இப்போதல்லவா புரிபடுகிறது!

சற்று நேரம் வரை நின்று கவனித்து யோசித்த அயாஸ்கான், ''உங்களுக்கு ஏதேனும் சௌகரியக் குறைவுகள் இருக்கின்றனவா?'' என்றான்.

குத்தங்காலிட்டு, அதன் மீது கைகளை மடித்துப் போட்டுத் தலையையூன்றி எங்கோ கவனித்துக் கொண்டிருந்த பசவராஜ், மெல்லத் தலையைத் தூக்கி, ''சிறையில் இருக்கிறோமே என்கிறதைத் தவிர வேறெந்த அசௌகரியமும் இல்லை. சிறையிலடைத்த ஹைதர் அலியைவிட, சௌகரியங்களைக் கவனிக்கும் நீங்கள் ரொம்ப நல்லவராகத் தெரிகிறீர்கள்...'' என்று கூறி, அர்த்தங்களடங்கிய உதட்டுப் பிதுக்கத்துடன் கண்களைச் சிமிட்டி ஒரு வெறுமையான பாவனையைக் காட்டினான்.

''ஒரு மாவீரனை ஹைதர் இப்படிச் சிறையில் அடைத்திருக்கக் கூடாது'' என்றான் அயாஸ்கான். அவன் மகாகல்தானை வெறும் ஹைதர் என்று குறிப்பிடுகிற போதே, சிறையில் இங்கு மங்குமாக அடிபட்ட செய்திகளைக் கூட்டிக் கழித்து ஊர்ஜிதப் படுத்திப் பார்க்கிறான் பசவராஜ்: ''அப்படியென்றால் திப்புவின் காதலியைச் சிறையிலடைத்தது சரியென்று நீங்கள் கருதுகிறீர்களா?''

''அதுவும் சரியில்லை: ஏதோ ஒரு ராஜதந்திரம் இதில் அடங்கியிருக்க வேண்டும்.''

ரங்கநாயகி இப்போது அயாஸ்கானைக் கூர்ந்து பரிசீலிக்கிறான்.

''ராஜ தந்திரமாவது? தமக்குப் பிடிக்காத எதையும் வேரோடு கெல்லி எறிவது மகாகல்தான் ஹைதருடைய மூர்க்கமான முடிவு. இன்று நீங்கள் ஆளுநராக உயர்ந்தது அவரால்தான்; நாளை மீண்டும் அதே அடிமையாக்கிச் சிறையிலடைத்தாலும் வியப்பதற்கில்லையல்லவா? மகாகல்தான் போக்கை இளைய கல்தானாலேயே அறிய முடியவில்லை.''

பசவராஜ் பல பொருள்கள் அடங்கிய பாவனை நிரம்பிய சொற்களை மிகவும் சமத்காரமாகப் பொழிந்து, அயாஸ்கானை உற்றுக் கவனிக்கிறான்...

ஒருகணம் அதிர்ந்து போனான் அயாஸ்கான்.

எதையோ மனத்தில் தீர்மானித்து இவ்விதமாகப் பசவராஜ் கொக்கியைப் போடப் போய், அதுவே அயாஸ்கானுடைய நெஞ்சில் விகற்பமான வித்தினை ஊன்றி விட்டது.

'இதே ஹைதர் அலி தன்னையும் சிறையில் தள்ள எத்தனை நேரம் பிடிக்கும்? தனது ரகசிய உடன்படிக்கைகளின் சிறு பொறி பசவராஜின் காதுகளில் மோதியிருக்குமோ?'

தன்னுள் எண்ணிப் பார்க்கிறான் அயாஸ்கான். அவனது பேராசைகள் விசுவரூபம் எடுக்கின்றன.

''பசவராஜ்! உன்னை என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் நீ அந்தரங்கமாகக் குறிப்பிட்ட வார்த்தைகளின் உள்ளடக்கமும் ஒருவாறு புரிகிறது. நான் இதுகுறித்து யோசித்துப் பார்க்கிறேன். எனக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று நீ நினைக்கிறாயா?''

அயாஸ்கான் கண்களை மிகவும் கூர்தீட்டி, அந்த அரைகுறை வெளிச்சத்தில் பசவராஜைப் பரிசீலிக்கிறான்.

பசவராஜ், தன்னுள், தானூன்றிய விதை, சரியான — சாதகமான இடத்தில்தான் பதிந்திருக்கிறது என்று நினைத்து எந்தவிதச் சலனமின்றித் தோற்றம் தருகிறான்.

'ஓ... பசவராஜ் என்கிற மாவீரத் துணைவன் மட்டும் கிடைத்து விட்டால்...' — அயாஸ்கான் ஒருகணம் கனவு காண்கிறான்... 'ஸ்ரீரங்கப் பட்டினத்தையே ஒரே விழுங்கில் ஜீரணித்து விடலாமே!'...

''உதவி, எது குறித்து என்பதை விளக்கலாமே!''

பசவராஜ், மெதுவாகக் கேட்டான்.

சில கணங்கள் வரை சிந்தித்த அயாஸ்கான், ''இதுபற்றி யோசிக்க எனக்கு அவகாசம் கொடு பசவராஜ்!'' என்றான்.

''நன்றாக யோசியுங்கள்! திப்புவின் அத்யந்த நண்பனான இவனை நம்புவதா? நம்பாமல் விடுவதா? என்று தீர்க்கமாக யோசியுங்கள்.''

பசவராஜ் இவ்விதம் கூறியதும், புறப்பட நினைத்த அயாஸ்கான், ஒரு விநாடி ரங்கநாயகியை நோக்குகிறான்...

போதை தரவல்ல அவளது அழகு அயாஸ்கானின் கண்களைக் கிறங்கச் செய்கிறது...



பேடனூரைத் தனது வசப்படுத்திவிட்ட பிறகு இங்குள்ள அனைத்துமே தனது சொத்துரிமைக்குரியதுதானே என்று மதியீனமாக நினைத்து, ''பசவராஜ்! நானும் ஒருத்தியைக் காதலிக்கிறேன்!'' என்றான். இவ்வாறு சொல்ல வேண்டியதில்லை. இதில் ஏதோ ஒரு சோதனையிருப்பதாக நினைத்து அயாஸ்கான் தனது கருத்தை விளையாட்டாக வெளியிட்டான்.

பசவராஜும், ''இந்த வயதிலா ஹுஜுர்?'' என்றான்.

அதுவரை சாம்பிச் 'சங்கடத்துள்ளாழ்ந்திருந்த ரங்கநாயகியும்கூட, பசவராஜின் பதிலைக் கேட்டுத் தன்னை மறந்து 'களுக்' கென்று சிரித்து விட்டாள்.

அயாஸ்கான் இதனைப் பெரிது படுத்திக் கொள்ளவில்லை, பொருட்படுத்தவுமில்லை.

''காதலுக்கு வயசில்லை. ஆத்மாவுக்குச் சலிப்புமில்லை. நீங்கள் சின்னப் பிள்ளைகள்'' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான் அயாஸ்கான்.

சிறைக் கோட்டத்தின் தலைவாயிலை அடைந்த அயாஸ்கான், கோட்டை அதிகாரி அப்துல் ரஹ்மானை அழைத்து, ''நான் குறிப்பிட்ட நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்தாயா?'' என்று நிரம்பவும் மெல்லிதான குரலில் வினவினான்.

''ஹுஜுர்! பல தடவை, பல இரவுகளில் பல சந்தர்ப்பங்களில் நான் அவர்களை நோட்டம் விட்டுப் பார்த்தேன். பார்க்கும்படியாகப் பலரை நேமித்துமிருந்தேன். ரங்கநாயகிக்கும் பசவராஜுக்கும் அப்படி ஒரு கள்ளத் தொடர்பு இருக்கிற மாதிரி தெரியவில்லை. அந்தப் பெண்ணை அவன், தன் கூடப்பிறந்த சகோதரியினும் மேலாகப் பாவிக்கிறான். சகோதரத்துவம் தொட்டுப் பழக இடம் தருமே! பசவராஜ், அந்தப் பெண்ணை ஒரு தெய்வ நிலையிலிருந்து கடமைகளைச் செய்கிறான்!''

அப்துல் ரஹ்மானின் இந்த விளக்கத்தால் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனான் அயாஸ்கான். இப்படியும் ஒரு நட்பா?

''அச்சா!'' என்று கூறிய அயாஸ்கான், அதற்குமேல் அங்கு நிற்காமல், தனது குதிரையில் ஆரோகணித்து அரண்மனையை நோக்கி விரைந்தான். உடன் வந்தவர்கள் அவனைப் பின் தொடர்ந்தனர்.

வழக்கம் போல வந்த சைவ உணவைப் பசவராஜும், ரங்கநாயகியும் சிறைச் சாளரத்து வழியாகப் பெற்றுக் கொண்டு உண்டனர். அவர்களுக்கு அது மாதிரியான விஷயங்களில் எந்த விதச் சௌகரியக் குறைவையும் தமது மேலுத்தரவு வருகிறவரைக்கும் வைக்கக் கூடாது என்று கண்டிப்பாக ஆணைக் கடிதம் அனுப்பி இருந்தார் ஹைதர்அலி.

இரவில் அவர்கள் வேலையோடு என்றைக்கு உறங்கியிருக்கிறார்கள்? மனத்தில் வேதனையாய் அரிக்கும் துன்பங்களையும் மீறி இமைகள் தழுவுகிறபோது ஏதோ நித்திரை என்கிற பெயரால் சில கனவுகளைக் காண்பர்.

இப்புகல்தான் அவனுக்கும், மஞ்களா தேவி அவனுக்குமாகக் கண்முன் நின்று கவலை

களுக்குத் திரூட்டுவர். விடிகிறபோது மீண்டும் அதே கவலைகள் இருளாய்ச் சூழ்ந்துவிடும்...

ரங்கநாயகி எதையோ நினைத்து மீண்டும் முறுவலித்துக் கொள்கிறாள்...

இத்தனை நாட்களுக்குப் பிறகு அவளது முகத்தில் இரண்டாவது தடவையாக முறுவல் பூக்க அவன் காணுகிறான்...

''என்ன ரங்கநாயகி? ஏன் சிரிக்கிறாய்?''

பசவராஜை நோக்கிய ரங்கநாயகி, ''ஒன்றுமில்லை. இந்த அயாஸ்கான் காதலை நினைத்து!'' என்றாள்.

''அதுவா? அதிலுள்ள அர்த்தம் உனக்குப் புரியாது. புரியவும் வேண்டாம். போகட்டும்; இன்றாவது வேளையோடு தூங்கு! துக்கத்தாலும் தூக்கமின்மையாலும் உடல் பாதியாய் இளைத்து விட்டாய். நான் ரங்கநாயகியை ஓர் எலும்புக் கூடாய் எனது நண்பனிடம் ஒப்படைக்க விரும்பவில்லை.''

''ஒப்படைக்க முடியும் என்று எதிர்பார்க்கிறீர்களா?''

''நிச்சயமாக ஒப்படைப்பேன்! அதற்கான வழிமுறைகளைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்!''

பசவராஜின் இந்த உறுதிமிக்க வாசகம் ரங்கநாயகியின் உடலில் ஒரு புதுத் தெம்பினை ஏற்றியது. ''அதுசரி! இந்தக் கோட்டைத் தலைவன் அயாஸ்கான் ஒரு மலையாளியா?''

''ஆமாம்! *சேரக்கல் பகுதியைச் சார்ந்த நாயர் வகுப்பைச் சார்ந்தவன் இவன். பதினேழு ஆண்டுகளுக்குமுன் மலபாரில் நடந்த யுத்தத்தின்போது, கைதுசெய்து அனுப்பப்பட்ட அடிமைகளுள் இவனும் ஒருவன். அறிவுத்திறம்மிக்க மாவீரன்! பின்னால் இவனது வீரத்தைக் கண்டு மகாசுல்தான் ஹைதர்அலி இவனுக்குப் பதவி வழங்கினார். இன்னும் மகாசுல்தானின் அன்பைக்கவர இஸ்லாமிய மதத்தில் சேர்ந்து தனது பெயரை அயாஸ்கான் என்று வைத்துக் கொண்டான். பிறகு அஸாத்– இ – இலாஹி' என்ற வீரர் குழுவில் இடம் பெற்றான். பதின்மூன்று ஆண்டு சேவைக்குப் பிறகு இந்தப் பேடனூர் பகுதிக்குத் தலைவனாக நேமிக்கப்பட்டுள்ளான். சொல்லப் போனால் இவனுக்கு இருக்கிற அதிகாரம், மகாசுல்தான் ஹைதர் அலியின் தத்துப்பிள்ளை போன்ற அதிகாரம். அவ்வளவுக்குச் செல்வாக்கு மிக்கவன்.''

''ஓகோ! இவன் பேச்சு ஏதோ மாதிரியாக இருக்கிறதே!''

''நானும்தான் கவனித்தேன். இந்தப் பேடனூரையும், இதைச் சார்ந்த கோட்டைகளையும் சுவீகாரம் செய்து கொள்ளக்கொஞ்ச நாட்களாகவே முனைந்து வருகிறான். அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தித் தப்பிக்க முடியுமா என்றுதான் நானும் ஒரு திறு சாகப்பேசி வித்தான்றி இருக்கிறேன். பயப்படாதே ரங்கநாயகி! எப்படியும் தப்பிக்கச் சாமுண்டீஸ்வரி அருள்பாலிப்பாள்!''

''ஸ்ரீரங்கநாதா...!''

ரங்கநாயகி கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்...

அந்தச் சமயத்தில் யாரோ சுவரோரமாகப் பதுங்கி வருகிற நிழலோட்டம் தெரிகிறது...

பசவராஜ் மிகவும் உஷாராக எழுந்து நின்று கவனிக்கிறான்...



காவலாளி: யோவ்! எட்ட நின்னு பாரு. சிங்கம் உன்னைப் பார்த்துப் பயப்படுது!

கே. எஸ். எஸ்.

வந்தவன் சிறைக் கம்பிகளின் பக்கத்தே ஒட்டிக் கொண்டாற்போல நின்றுகொண்டு, ''பசவராஜ் சாகேப்! பயப்படாதீர்கள். உங்களைப் பேரம்பாக்கத்திலிருந்து கடத்திவந்தபோது உடன் வந்த வீரர்களுள் நானும் ஒருவன். உடன்வந்த எல்லா வீரர்களையுமே இங்கே திறந்த வெளிச் சிறை மதிலுள் அடைத்து விட்டார்கள். இரகசியம் தெரிந்து விடக்கூடாது என்று அந்தச் சைத்தான் ராஜாக்கான் எல்லாரையும் பழிவாங்கி விட்டான். நாங்கள் அனைவருமே உங்களிருவரையும் விடுவிக்க நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்!'' என்று கூறினான். அவனது பேச்சு, முக பாவனையிலிருந்து அவன் ஒரு பரிசுத்தமான முசல்மான் என்பது தெரிய வந்தது.

பசவராஜ், சில விநாடிகள் வரை யோசித்து விட்டு, ''நீங்கள் எங்களைக் காப்பாற்ற முயல்வதைவிட, உங்களில் யாராவது ஒருவர் எப்படியாவது தப்பிச் சென்று நமது யுவராஜா திப்புசுல்தானுக்கு விவரம் தெரிவித்தால், இந்தத் தேசத்துக்கு நீங்கள் செய்கிற பெரிய உபகாரம்'' என்றான். ''இன்னொன்றும் எதிர்பார்க்கிறேன். எப்படியாவது ஒரு வாளை முயன்று கொண்டுவந்து எனக்குத் தரமுடியுமா?''

''முயற்சிசெய்கிறேன் பசவராஜ் சாகேப்!''

''சரி, சரி! யாராவது கவனித்துவிடப் போகிறார்கள்.! நீபோ!'' என்று விரட்டினான் பசவராஜ். இவையனைத்தையும் கேட்கக் கேட்க ரங்கநாயகிக்கு ஒரு புதிய நம்பிக்கை உதயம் கண்டு உள்ளுக்குள் பிரகாசம் தெரிந்தது.

சிறைக் கோட்டத்துக்கு வெளியே 'பாரா உஷார்' என்கிற காவலர்களின் காட்டுக் கூச்சல், மெல்லிதாகக் கேட்கிறது.

வந்தவன் மெல்லப் பதுங்கி அந்தஇடத்தை விட்டு அகன்று சென்று கொண்டிருந்தான்.

(தொடரும்)

* Nishan-1 Haider R.A.S.B.M.S. No. 200 and Notes From Wilks.

என் தொழிற்சாலை வேளச்சேரி மெயின் ரோட்டில் உள்ளது. பெயர் தான் மெயின் ரோடு. மிக முக்கியமான சாலை என்பதாலோ என்னவோ, சாலையின் இருபுறமும் குழாய் போட என வெட்டிப்போட்டு நாலுமாத மாகிறது. பத்து நாட்களாகவிடாமல் பெய்யும் மழையில், வெட்டிப் போட்டிருந்த மண் குவியல்கள் 'கொச கொச' எனக் கரைந்து தெருவில் பாதியை ஆக்ரமித்துக் கொண் டிருந்தன.


வீட்டிலிருந்து கிளம்பினால் தொழிலகத்தை அடைவதற்குள் போதும் போதும் என்றாகி விடுகிறது.

நான் ஹாரனில் வைத்த கையை எடுக் காமல், கண்ணைத் தெருவில் பதித்து ஆபீசை அடையும் 'டென்ஷன்' இருக்கிறதே... அப் பப்பா... கொஞ்ச நாட்களுக்குப் பெட்ரோல் விலையையும் மறந்துவிட்டு, ரேஸ்கோர்ஸைப் பிரதட்சணம் செய்து கொண்டு பயமில்லாமல் போகலாம் என்று முயற்சி செய்தேன், நாலு மாதங்களாகத் தோண்டிப் போட்டுள்ள ரோட்டுக்கே குழாய் ஆர்டர் கொடுக்கு முன், அடுத்த தெருவையும் வெட்ட ஆரம்பித் தார்கள்.

மதியம் 'லஞ்சுக்கு' வரும்போது காட்சியே மாறிவிடும். வேளச்சேரி ரோட்டை அமைதி யில் பார்க்கும் ஆனந்தமா, இல்லை, மீனுவுடன் வம்பு செய்து கொண்டு, சாப்பிடும் 'மஜாவோ' தெரியவில்லை. நான் தவறாமல் சாப்பாட் டுக்கு வீட்டுக்கு வந்துவிடுவேன். இன்று மீனு ஒரு புது திறுகப் புலவும், குர்மாவும் செய் திருந்தாள். வடஇந்திய உணவு சமைப்பதில் அவள் எக்ஸ்பர்ட். மட்டனும், மசாலாவும் நாவில் இறங்கியதுமே 'ப்ளேபாய்' ஜோக் குகள் தாராளமாக வெளிவந்தன. மீனு சிணுங்கினாள். இரவு வரை ஞாபகம் வைத் திருக்க மாட்டாள் என்ற தைரியத்தில் இந்த நாற்பத்தைந்து வயது இளமையிலும் சாதனைக் கணக்குகள் சொல்லிவிட்டுக் காரை ஸ்டார்ட் செய்தேன்.

ராஜ்பவன் ரோடு அமைதியில் ஆழ்ந்திருந் தது. சர்தார் படேல் ரோட்டில் திரும்பிச் சீட்டியடித்தவாறே வேளச்சேரி ரோட்டில் காரை ஓடித்தேன். ஐய்யோ... சரேலெனப் பிரேக்கைப் பிடித்தேன்... நடுத்தெருவில் ஒரு நாய், ரத்த வெள்ளத்தில் மிதந்தவாறு, வயிற்றிலிருந்து சதை பிழிந்து, குடல் வெளித் தள்ளி, வாயை 'ஆ'வென்று பிளந்தபடி கிடந்தது... சே! எந்த லாரிக் காரனோ சவு இரக்கமில்லாமல் அரைத்துத் தள்ளியிருக் கிறான். டயர் வீணாகாமல், நாயைச் சட்னி செய்யாமல், காரை லாகவமாக இடது பக்கம் ஒடித்து, மணல்மேட்டின் ஒரு பகுதியைச் சமப்பிரதேசம் செய்து முன்னேறினேன்.

ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட என் தனி அறையை அடைந்து நாற்காலியில் அமர்ந்த



வுடன் திரும்ப நாய் ஞாபகம் வந்தது. போனைச் சுழற்றினேன். ஆபரேட்டரின் ''யெஸ் ஸார்,'' கேட்டது. ''ரெஸிடன்ஸ் ப்ளீஸ்.''

மீனு எடுத்தாள். ''என்ன டார்லிங்?''

''மீனு, இங்கே ஆபீசுக்கு வரவழியிலேயே நாய் ஒண்ணு லாரி ஏறிச் செத்துக் கெடக்குது. அதுவும் நடு ரோட்டில்...டிராபிக் ஹஸார்ட். ஏதாவது செய்யறியா?''

''அப்கோர்ஸ். எக்ஸாக்ட் லொகேஷன் சொல்றீங்களா?'' சொன்னேன்.

மீனு எம். ஏ. பாலிடிக்ஸ். வேலைக்குப் போவதில் ஆர்வமில்லை, அவசியமும் இல்லை. வீட்டோடு இருந்தாலும் அவள் ஓர் உண்மையான குடிமகள். எந்தச் சேரிக்குழாயில் தண்ணீர் வரவில்லை என்றாலும் ஹிந்துவில் கடிதம் எழுதி விடுவாள். தெருவிளக்கு எரியாவிட்டால் கார்ப்பரேஷன் ஆபீசுக்குப் பத்து தடவையாவது 'போன்' செய்து விடுவாள். (போன், கம்பெனி செலவானதால், நானும் கவலைப்படுவதில்லை) கொசுத் தொல்லை அதிகம் இருந்தால், அக்கம்பக்கத்தாரிடம் கையெழுத்து வாங்கி, ராஜ்பவன் அருகில் இருப்பதால் கவர்னரிடமே பெடிஷன் கொடுத்து விடுவாள். சாதாரணமாக, நாம் சோம்பலின் காரணமாகக் கைவிடும் பொது விஷயங்களை அலுக்காமல் எல்லாம் ஏற்றுக் கொண்டு மன்றாடுவாள்.

மீனுவுக்குச் சொன்னவுடன், நாய்க்கவலை விட்டது. ஓவராலை அணிந்து கொண்டு தொழிற்சாலைக்குள் சென்றேன். அவசரமாக எண்ணூருக்குப் போக வேண்டி இருந்தது. காரில் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்து தொழிற்சாலையை விட்டு வெளியே வந்தேன்.

ஓ...! திரும்ப வேளச்சேரி ரோட்டா... மறுபடியும் அந்தக் குடல் பிதுங்கிய நாயின் தரிசனமா?... மீனு போன் செய்திருப்பாளா? நல்லவேளை... தூரத்திலேயே வெள்ளையில் நீலக்கரையிட்ட வேன் தெரிந்தது. இரண்டு பேர் நாயை நாசூக்காகத் தூக்கி 'வானில்' போட்டுக் கொண்டிருந்தார்கள். ஏதோ எடுத்துத் தெருவில் 'ஸ்ப்ரே' செய்தார்கள். நான் கடந்து விட்டேன்.

மீனு இஸ் ரியலி ஸ்மார்ட்... இந்தப் பிராணி நலச் சங்கத்தாரும் என்ன எபிஷியண்ட்... ஒரே மணியில் அத்தனை ஏற்பாடும் முடிந்துவிட்டது.

எண்ணூரிலிருந்து திரும்பி வரும்போது ஆபீஸ் நேரம் முடிந்துவிட்டது. வீட்டுக்குக் கிளம்பினேன். எண்ணூர் வரை சென்று வந்தது பெட்ரோல் 'ரிஸர்வை'க் காட்டியது. பங்கிலிருந்த சின்னப்பையன் கம்பெனி பெட்ரோல் அக்கவுண்ட் புத்தகத்தை எடுத்து வந்தான். கையெழுத்திட்டேன்.



எதிர்ப்புறமிருந்த பிச்சைக்காரர்கள் இருவரும் காரைப் பார்த்துவிட்டார்கள். ரோடை வேகவேகமாகக் கடந்து வந்தார்கள், ஒருவன் கம்பை ஊன்றியபடி நொண்டி வந்தான். அவசரம், அவசரமாக டிரைவிங் சீட் அருகிலிருந்த கண்ணாடியை மேலேற்றிக் கொண்டேன். பர்சைத் திறந்து ஒரு ரூபாய்ப் பணத்தை எடுத்தேன். நேர்ப் பார்வை பார்த்துக் கொண்டே, க்வார்டர் க்ளாஸைக் கொஞ்சமாகத் திறந்து நுனி விரலால் நோட்டை நீட்டினேன். அது பாத்திரத்தில் விழுவதற்குப் பதில் காற்றில் பறந்தது. இருவரும் அதைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள். பெட்ரோல்பங்க் உதவிப்பையன் நோட்டைப் பற்றி எடுத்து ''அந்தப் பக்கம் போயிடணும்'' என்ற ஆணையுடன் குவளையில் இட்டான். பிச்சைக்காரர்கள் இருவரும் என்னை நன்றியுடன் பார்த்தார்கள். எப்போதோ ஒருநாள் நான் தருகிறேன் என்றாலும், முழு நோட்டு என்றால் சும்மாவா?

இந்த இரண்டு பிச்சைக்காரர்களையும் நானும் ஆறு மாதங்களாகத் தவறாமல் பார்க்கிறேன். பார்க்கிறேனாவது, பார்க்காம

பெண் ஊழியர்களுக்கு சலுகை நீக்கம்

ஒசாகா: ஆண் ஊழியர்களுடன் ஒப்பிடும்போது பெண் ஊழியர்களுக்குச் சில விசேஷ சலுகைகள் அளிக்கப்படுகின்றன அல்லவா? இவ்விதம் பெண்களுக்காகச் சில பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதை ஜப்பான் இனி நீக்கிவிடலாம்.



வேலை வாய்ப்பு, வேலையில் இருந்து ஓய்வு பெறுதல், சம்பளம் போன்றவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமத்துவம் வழங்கும் போது, பெண்கள் இரவு வேலை செய்யக் கூடாது என்பதோ, ஒவ்வொரு மாதமும் பெண்களுக்குச் சில நாட்கள் சம்பளத்துடன் 'லீவு' கொடுப்பதோ இனி மேல் தேவையில்லை என்று அரசு ஆலோசனைக் குழு சிபாரிசு செய்துள்ளது.

குளோபல்.

விருக்கத்தான் முயற்சி செய்கிறேன். வியாதி முற்றிய நிலையில், சுயரூபங்கள் மறைந்து, இரண்டு மாமிசப் பிண்டங்கள்...சே...சே...

ஒரு வாரம் சென்றிருக்கும். மாலை வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். பெட்ரோல் பங்குக்கு நூறடி முன்பே பிச்சைக்காரர்களில் ஒருவன் நடு ரோட்டில் நின்று, தடியை ஆட்டியபடி காரை நிறுத்தச் சொல்லிக் கத்தினான். முதலில் 'சைடில் ஒடித்துச் சென்றுவிடலாம் என்றுதான் எண்ணினேன். இதுகளைப் பற்றி எதுவும் சொல்ல முடியாது. தடியால் காரில் தட்டி விட்டாலும் என்ன செய்ய முடியும்? காரின் வேகத்தைக் குறைத்தேன். மூடிய கண்ணாடிக்கு வெளியே நொண்டிப் பிச்சைக்காரன் ஏதோ கத்திக் கொண்டிருந்தான். கண்ணாடியை இறக்காமலே, அருகில் வராதே என்று சைகை காட்டினேன். அவன் ஓரடி நகர்ந்து கொண்டான். சாலையின் மறுபுறம் சுட்டிக் காட்டினான்.

நொண்டிப் பிச்சைக்காரன் செத்துவிட்டானா? தெருவின் மறுபுறம் படுத்திருப்பவனைச் சுற்றிச் சற்றுத் தூரம் தள்ளியே ஒரு கும்பல் நின்றிருந்தது. அவனைச் சுற்றி நோட்டும், சில்லறையுமாக இருந்தது. துன்பப்படும் ஒரு ஜீவனுக்கு விடுதலை கிடைத்து விட்டதே என்ற திருப்தியுடன் நண்பனின் இறப்புக்காக அழுதழுது முகத்தை இன்னும் கோரமாக்கிக் கொண்டிருந்தவனிடம் ஐந்து ரூபாய் நோட்டொன்றை நீட்டினேன்.

மறு நாள் காலை ஆபீஸுக்குப் போகும் போது பார்த்தேன். பிணத்தைப் போட்டுக் கொண்டு பிச்சைக்காரன் இன்னும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அறிவு கெட்ட ஜனங்கள்.... வியாதிப் பிணங்களை மன, மனவென்று எரிக்க ஏற்பாடு செய்ய வேண்டாமோ?


சாப்பிடப் போகும்போதும் அதே காட்சி. சோறே இறங்கவில்லை. மீனுவிடம் சொன்னேன். "காலையிலேயே போன் செய்திருக்க மாட்டீங்க.... லெப்பர் என்றால் எடுக்க, தூக்க ஆள் யாரும் வந்திருக்க மாட்டாங்க... நீங்க ஆபீசுக்குப் போங்க. நான் பார்த்துக்கறேன்" என்றாள். நான் கிளம்புவதற்குள்ளேயே கார்ப்பரேஷன், போலீஸ், ஆஸ்பத்திரி என்று மாற்றி, மாற்றிப் போன் செய்தாள். இனிமையான பெண் குரல் என்பதால் போலிருக்கிறது ஒவ்வொருவரும் பொறுமையாகக் கேட்டுவிட்டு, ஒரு புது நம்பரைத் தந்து முயற்சி செய்யுமாறு சொன்னார்கள்.

மூன்று மணிக்கு வீட்டிலிருந்து 'கால்' வந்தது. "என்னங்க, முப்பது காலுக்கும் மேல் வீணானதுதான் மிச்சம். ஒருத்தரும் பொறுப்பாப் பதில் சொல்ல மாட்டேங்கறாங்களே" என்றாள் மீனு சலிப்புடன். "பரவாயில்லை டார்லிங், நாம நம்மாலானதைச் செய்துவிட்டோம். வருத்தப்படாதே" என்று தட்டிக் கொடுத்துப் பேசினேன்.

மாலை கிளம்பும்போதே நேரமாகி விட்டது. ஒழுங்காகத் தெரு விளக்குக் கிடையாது. மண் மேட்டில் ஏறி இறங்கி...ஹெட்லைட் வெளிச்சத்தில் நான் கண்ட காட்சி... குலைநடுக்கம் என்பார்களே அப்படியொரு பீதி வயிற்றையே கலக்கியது.


பிச்சைக்காரன் பிணத்தின் கையைத் தன் இடுப்புக்கும் கைக்கும் நடுவில் இடுக்கிக் கொண்டு, தரதரவென்று நடு ரோட்டில் இழுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான். பிண கனம் என்று பழமொழியே உண்டே? கையிலோ, கால்களிலோ விரல்களே இல்லாத நிலையில் இந்த வியாதிப் பிணத்தை எப்படி இவ்வளவு தூரம் இழுத்து வந்தான்? ரோட்டுக் கல்லிலும் சேற்றிலும் இடித்துப் புரண்டு இத்தனை தூரம் பயணம் செய்த பிணம், மனிதப் பிணமாகவா இருக்கும்? முழு மூச்சுடன் இழுத்தால் அரை மணியில் மயானத்தை அடைந்து விடுவான் எப்படியும். நிறையப் பணம்தான் வசூலாச்சே... நெருப்பு வைக்க ஆளில்லை என்றாலும், வெட்டியானுக்குப் பத்து ரூபாய் தந்தால் பெரிய குழியாய் வெட்டித் தர மாட்டானா? மண்ணைப் போட்டு மூடிவிட்டால் ஆச்சு.


மீனுவிடம் சொன்னால் நிம்மதியாக மூச்சு விடுவாள். செத்த பிறகு எப்படிப் போனால் என்ன, சுடுகாட்டை அடைந்தால் சரி. இந்தக் கடவுள் இருக்கிறாரே, அவர் 'ரியலி க்ரேட்'. எப்படியோ எல்லாப் பிரச்னைகளுக்கும் ஒரு வழி கண்டுபிடித்து விடுகிறார்.!


பினாகா டூத்ப்ரஷ்
பாதுகாப்பான மழுக்கப்பட்ட
முனைகள் கொண்டது,
ஈறுகளுக்கு ஊறு செய்யாது
சாதாரண முனைகள்
ஈறுகளைச்
சேதப்படுத்து
கின்றன.
U BT-12/7 Tam
எல்லாப் பருவத்திற்கும்,
விருப்பத்திற்கும் ஏற்றபடி
பினாகா டூத் ப்ரஷ் கிடைக்கிறது
ஸீபா-காய்கி
பினாகா
இந்தியாவில் அனைத்திலும் அதிக விற்பனையுள்ள டூத் ப்ரஷ்.

கனவா-நிஜமா? 9


கதை : வாண்டுமாமா
சித்திரம்.செல்லம்




கோடைகாலக் கோலாகலங்களில் கலந்து கொள்ள வசந்த மாளிகைக்குப் போகாதீர்கள். மன்னரின் குடும்பத்துக்கு அங்கு அபாயம் காத்திருக்கிறது. உங்களையெல்லாம் கொல்லச் சதி செய்யப்பட்டுள்ளது.
கொல்லவா?... எங்களையா?... சதிகாரர் யார்?
தளபதி தந்தவக்ரர்....
பிரதம சேனாபதி தந்தவக்ரரா? சுத்த அபத்தம்...
மன்னருக்கு எதிராகப் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டிருக்கிறார். படை வீரர்களில் பெரும் பகுதியினரைத் தம் வஞ்சக வலையுள் சிக்க வைத்து...
இதற்கு மேல் நீலனின் வார்த்தைகளைக் கேட்க விரும்பவில்லை திவாங்கை மார்பன். அத்தனை நல்லெண்ணம் தளபதியிடம்.
இந்தப் பேச்சே இவன் ஒரு பைத்தியக்காரன் என்பதை உறுதியாக்குகிறது. நான் என்றும் வசந்தமாளிகையில் உல்லாசமாகப் பொழுது போக்கப் போவது கிடையாது.
இளவரசே... வசந்த மாளிகைப் பக்கம் போகாதீர்கள். உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.
இளவரசே! தளபதியார் தங்களுக்கு ஒரு தகவல் அனுப்பியுள்ளார்.
அவ்விடமிருந்து அப்படியென்ன அவசரத் தகவல்?
என்ன?... அதிசயமாக இருக்கின்றதே... இந்த ஆண்டு கோடைக் களியாட்டங்களில் கலந்துகொள்ள வசந்த மாளிகைக்குத் தன்னுடன் வரும்படி அழைப்பு விடுத்திருக்கிறார் அன்னார்... வசந்த மாளிகை...
அன்னாரின் அழைப்பைப் பார்க்கும் போது... நீலனைப் பைத்தியக்காரனென்று எண்ண முடியவில்லையே...ம்... உளவு வேலையில் வல்லவனான ராஜமல்லனிடம் நீலனின் எச்சரிக்கை பற்றிக் கூறி ஆலோசிப்போம். அவனுக்கு ஏதாவது தகவல் தெரிந்திருக்கக் கூடும்...
தொடரும்

நீங்கள் நிம்மதியாக உறங்க வேண்டுமென்பதற்காக நாங்கள் உறங்காத இரவுகள் பல.

ஏர்-பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்களின் முன்னோடிகளான சுந்தரம்-கிளேட்டனுக்கு பாதுகாப்பு என்பது ஒரு அர்த்தமற்ற உறுதிமொழி அல்ல. எங்கள் சாதனங்கள் முழுமையான பாதுகாப்பிற்கு உறுதியளிப்பதற்கேற்ப உருவாக்கப்பட்டவை.



ஆம், இன்று இந்நாடு முழுவதிலும் இலட்சக்கணக்கானவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களான ஆயிரக்கணக்கான பஸ்/லாரி ஓட்டுபவர்கள், பயணிகள் தங்களிடம் பத்திரமாகத் திரும்பி வந்து விடுவர் என அமைதியுடன் நம்பிக்கையோடு உறங்குகின்றனர். சுந்தரம்-கிளேட்டனில், மிகவும் தனித்தன்மை வாய்ந்த இத் துறையில் முன்னோடிகளான நாங்கள், இந்த நம்பிக்கையை அளிக்கின்றோம் (அதிலிருந்து சாலைப் பாதுகாப்பின் புதியதோர் முறை உருவாகிவிட்டது.)

இன்று, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ஹெவி-ட்யூடி வண்டியிலும் எங்களுடைய காற்றுத் தடை உபகரணங்கள் அசல் உறுப்புகளாகப் பொருத்தப்பட்டுள்ளன. இத்துடன் நாங்கள் இருந்துவிடமாட்டோம். உங்களது பாதுகாப்பு எங்களுக்கு மிகப் பெரியதொரு பொறுப்பு. (அதற்காக நாங்கள் பல இரவுகள் உறக்கமின்றி உழைக்கத் தயாராக உள்ளோம்).

உங்கள் பாதுகாப்பிற்கு எங்கள் உத்திரவாதம்

இன்றைய தொழில் நுணுக்க முன்னேற்றம், ஆராய்ச்சி, தரக்கட்டுப்பாடு, தரச்சிறப்புச் சோதனைகள் (உதாரணமாக ஒரு பிரேக்சேம்பர் டயாஃப்ரம் பல லட்சக்கணக்கான தடவைகளுக்குமேல் சோதிக்கப்படுகின்றது) — இது போன்ற தொடர்ச்சியான சில வழி முறைகள் மூலம் நாங்கள் பிரேக் சாதனத்தை மட்டும் அளிக்கவில்லை, உங்கள் முழுமையான பாதுகாப்பிற்கு உறுதியளிக்கும் ஒரு சிறந்த சாதனத்தையே அளிக்கின்றோம்.

நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றோம்— அதனைப் பாதுகாக்கவும்

CD-TVS அளிக்கும் முழுமையான காற்று மற்றும் காற்று-உதவி கொண்ட பிரேக் சாதனங்களின் உறுதியான பாதுகாப்பு எப்பொழுதும் உங்களுக்குக் கிடைப்பதற்கு உங்கள் சாதனத்தை முறையாகப் பராமரியுங்கள். மற்றும் எப்பொழுதும் அசல் CD-TVS உறுப்புகளையே வாங்கி உபயோகியுங்கள். இதனை அலட்சியம் செய்யவேண்டாம். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்கின்றோம்.

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்
பாடி, சென்னை 600 050

உங்கள் பாதுகாப்பு எங்கள் தொழில்

CD TVS

SAA SCL 2587



ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

பிராமண எதிர்ப்பு உணர்வுகள் அதிகரித்து வந்தன. காங்கிரஸ் அப்போது தெற்கே சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த பிராமணர்களால் வழி நடத்தப்பட்டு வந்தது. பிராமணரல்லாதாருக்கு ஆதரவு தந்த ஜஸ்டிஸ் கட்சி, 'பிராமணர் ஆதிக்கத்தை நீடிப்பதுதான் காங்கிரஸின் உள்நோக்கம்' என்று குற்றம் சாட்டியது. இக்கருத்துடன் நாசூக்காக ஒத்துப் போன அரசு, முடிந்த போதெல்லாம் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவு தரும் கொள்கையைக் கடைப்பிடித்தது.

சுயராஜ்யக் கட்சியினருடன் ஸி. ஆர். பெருமளவில் கருத்து மாறுபாடு கொண்டிருந்தார். ஆயினும் ஜாதிப் பிரச்னையைப் புகுத்தி அவர்களைப் பிறர் தாக்கியபோது அவர்களுக்கு ஒரு கேடயமாக ஏழை எளியோருக்கு விமோசனம் தரும் மதுவிலக்குக் கொள்கையை அளித்து மகிழ்ந்தார். மேலும் பொதுமக்களிடம், ''வாழ்வோ தாழ்வோ காங்கிரஸுடன் சேர்ந்திருந்து அனுபவிப்போம்'' என்றார். பிராமணரல்லாதாரிடம் தனித்தனி கோஷ்டிகளை உண்டாக்கும் எண்ணங்களை விட்டொழிக்குமாறு கேட்டுக் கொண்டார்.1

ஜாதிப் பிரச்னையில் ஸி. ஆரின் முற்போக்கான கொள்கை மகாத்மாவுடன் அவர் இணை சேர்வதற்கு முன்பாகவே நன்கு நிரூபிக்கப் பட்டிருந்தது. அது அவருக்குப் பிராமணரல்லாதாரின் மதிப்பையும் தீண்டாதாரின் மரியாதையையும் பெற்றுத் தந்திருந்தது. ஆசாரம் பார்த்தவர்கள் மட்டுமே ஸி. ஆரை வெறுத்தனர். ஆனால் இப்போதோ அவரது தோழர்களாகச் சில ஆண்டுகளாகவே விளங்கிய இருவர் — பிராமணரல்லாதவரிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்த ஈ. வெ ராமசாமி நாயக்கரும் வரதராஜுலு நாயுடுவும் — அவரை எதிர்த்தார்கள்.

இந்தக் கரிபூசும் முயற்சிகள் குறித்துத் தாம் கவலைப்படவில்லை என்று மகாதேவ தேசாய்க்கு ஸி. ஆர். எழுதினார். ஆயின் அவர் அபரிமிதமான ஏமாற்றத்துடன் வேதனையும் அடைந்திருப்பார் என்றே நம்பலாம். சுயராஜ்யக் கட்சிக்காரர்களுடன் ஸி. ஆர். உடன்படிக்கை செய்து கொண்ட பிறகு ஜஸ்டிஸ் கட்சி பத்திரிகையான ''ஜஸ்டிஸ்'' அவரையும் தாக்கியது. அதுவரை அவர் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒருவராகத்தான் இருந்து வந்தார்.2

''உங்களுடைய முக்கியமான பணி நீங்கள் ஸ்தாபித்துள்ள ஆசிரமத்தை அபிவிருத்தி செய்வதாகும். மற்றவையெல்லாம் இரண்டாம் பட்சம்தான்'' என்று மகாத்மா மார்ச் மாதத்தில் ஸி. ஆருக்கு எழுதினார்.3 இக்கடிதம் எழுதப்பட்ட சமயத்தில் ஆசிரமத்தைச் சுற்றிலுமிருந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்மணிகள் நூற்பதன் மூலம் குடும்ப வருவாயைச் சற்றே அதிகரித்துக் கொண்டிருந்தார்கள். அதிகப்படியாகக் கிடைத்த இந்த ஒரு சில நாணயங்கள் அவர்களுக்குப் பெரு மதிப்பு உள்ளனவாய் விளங்கின.

மார்ச் இறுதியில் பீகாருக்கும் ஆமதாபாத்துக்கும் போய்விட்டு ஆசிரமத்தின் பணிகள் பாதிப்புக்கு உள்ளாகாத வகையில் சீக்கிரமாகத் திரும்பி விடலாம் என்று ஸி. ஆர். கருதினார். பாட்னா தேசியக் கல்லூரி மாணவர்களிடையே ஒரு சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும் என்று ராஜேந்திர பிரசாத் அவரைக் கேட்டுக் கொண்டிருந்தார். 1920–21ல் திடீரென்று தோன்றிய தேசியக் கல்வி நிறுவனங்களுள் ஆமதாபாத், காசி, பாட்னா ஆகியவற்றில் இருந்தவைதாம் இன்னமும் இயங்கிக் கொண்டிருந்தன.

பாட்னாவில் ஸி. ஆர். சொன்னார்: ''அரசை எதிர்த்துப் போராடுவதற்குப் பதில் நெசவாளிகள் நூல் நூற்பவர்களுக்கு மத்தியில்

''இங்கு நீ வேலையில் சேர்ந்து இரண்டு நாள் தானே ஆச்சு அதற்குள் ராஜினாமா பண்ணுறியே! ஏன்?''

''இங்கு பணி புரிபவர்கள் எல்லாரிடமும் கை மாற்றுக் கடன் வாங்கியாச்சு!''



---

1. ஹிந்து, 27-1-26
2. ஸி. ஆர். மகாதேவ தேசாய்க்கு எழுதியது, 6-2-26, SN 10691, ராஜ்காட் சங்கிரஹாலயம்
3. காந்தி ஸி. ஆருக்கு எழுதியது, 18-3-26, 19366 ராஜ்காட் சங்கிரஹாலயம்.

ஒளிந்து கொண்டு என்னுடைய திறமைகளை நான் வீணடித்துக் கொண்டிருப்பதாக என் மீது குற்றம் சாட்டியுள்ளார்கள். ஆனால் என்னைப் போன்ற சிப்பாய்கள் ஓய்வு பெறுவ தில்லை. அரசை எதிர்த்து நடத்திய யுத்தத் தில் நாங்கள் ஒரு போர்க்களத்தில் தோற்று விட்டோம். காரணம், எங்கள் பீரங்கியில் வெடிமருந்து தீர்ந்து விட்டது. எங்கள் பீரங்கி என்பது கஷ்டங்களைத் தாங்குகிற சக்திதான்.

''இப்போது நாங்கள் பின்வாங்கி இருப் பது இத்தகைய பீரங்கிகளில் மேலும் பல வற்றை எதிர்காலப் போர்க்களத்துக்காகத் தயாரித்துக் கொள்வதற்காகத்தான்.'' இந்த விளக்கத்தைக் கொடுத்த பிறகு மாண வர்களிடம், அவர்களுடைய துணைவேந்தர்



மனைவி: எங்கப்பா ஒரு காந்திய வாதி!

கணவன்: அதுக்காக மாமனார் வீட்டுக்கு வந்த எனக்கு நிலக்கடலை யும் ஆட்டுப்பாலும்தானா டிபனாகத் தருவது...? உ. ராஜாஜி.

ராஜேந்திரப் பிரசாத்தின் குணநலன்களில் சிலவற்றையேனும் படித்தறியுமாறு வி. ஆர். வேண்டினார்.

ஆசிரமத்துக்குத் திரும்பும் வழியில் ஆமதா பாத்தில் பெரிய கூட்டம் ஒன்றில் பேசுகை யில் மறுபடியும் வி. ஆர். ராணுவப் பதங் களைப் பயன்படுத்தினார்: ''இந்தியப் பொது மக்களின் கைத்துப்பாக்கி இராட்டைத் தக் ளிதான்'' என்றார்.

மகாத்மாவுடன் அவர் பல விஷயங்கள் குறித்துத் தொடர்ந்து சுவாரஸ்யமாக வாதம் புரிந்தார். ஃபின்லாந்திலிருந்து தமக்கு வந்துள்ள ஓர் அழைப்புப் பற்றி மகாத்மா வி. ஆரின் அபிப்பிராயம் கேட் டார். இந்தச் சந்தர்ப்பத்தில் காந்தி மேல் நாடு செல்வதை விரும்பாத வி. ஆர்., மகாத் மாவைக் . கிண்டல் செய்தார்:

''ஐரோப்பாவில் உள்ள மாணவர்க ளுக்குத் தங்களைத் தாங்களே நன்கு கவ னித்துக் கொள்ளத் தெரியும். எப்படியாயினும் குறைந்த உடையணிந்து தோற்ற மளிப்பது எப்படி என்பதைக் கண்ணுக்கு மெய்யாக அவர்களுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை!''4

மஹாபலேசுவர் என்ற மலை — வாசஸ் தலத்தில் சந்திக்கலாம் என்று பம்பாய் கவர்னர் காந்திக்கு அழைப்பு விடுத்தபோது வி. ஆர்., அதனை, ''வைஸ்ராய் சார்பில் உளவறிவதற்கு நடக்கும் முயற்சியன்றி வேறில்லை'' என வர்ணித்தார்.5

இதற்கு அடுத்தாற்போல் வி. ஆர். மகாத்மாவுக்கு எழுதிய கடிதத்தில் கிண்டலும் வேடிக்கையும் இருக்கவில்லை. திருச் செங்கோடு பகுதியில் மறுபடியும் மழை பொய்த்து விட்டிருந்தது.

''தண்ணீர்ப் பஞ்சமும் பொதுவாக மக்கள் படும் அவதியும் பயங்கரமானதாக இருக் கிறது'' என்று வி. ஆர்., எழுதினார். ''இலங் கையிலும் மலேயாவிலும் உள்ள தோட்டங் களில் வேலை செய்யலாம் என்று மக்கள் இங்கி ருந்து ஓடிச் செல்கிறார்கள். இங்கு கடும் துயரில் ஆழ்ந்து கிடக்கும் மக்கள் அவ்வப் போது, இங்குள்ள எனது ஆசிரமம்தான் மழை பொய்த்ததற்குக் காரணம் என்று கூறு கிறார்கள்.''6


1926 இறுதிக்குள் தமிழ்நாட்டில் 30,000 பேர் நூல் நூற்றுச் சம்பாதித்துக்கொண்டிருந் தார்கள். தென் இந்தியா கதர் அணியத் தொடங்கி விட்டிருந்தது. ஆனால் வடக்கே மராத்தி பேசுகிற பகுதியில் இவ்வித நிலைமை இருக்கவில்லை. திலகரின் சீடர்கள் என்று கூறிக் கொண்டு அந்தப் பகுதியில் சுயராஜ்யக் கட்சிக்காரர்களும் காங்கிரஸ் தலைவர்களும் கதரைக் காந்தியின் செல்லக் கொள்கை என்று வர்ணித்து அதனிடம் அக்கறை காட்டாதிருந்தனர்.

இத்தகைய எதிர்ப்பு நிலவிய பிரதேசத்தில் வி. ஆர். புகுந்து சாதனை நிகழ்த்தினார். நாக்பூரில் திலகர் தேசியக் கல்லூரி மாணவர் களிடம், கிராமங்களில் வசிக்குமாறும் கதர் அணியுமாறும், ராட்டை சுற்றுமாறும் அவர் சவால் விட்டார்: ''இப்படிச் செய்தால் உங் களை எதிர்நோக்கியுள்ள வேலையில்லாத் திண் டாட்டம் மட்டுமின்றி ஏழை மக்களுடைய வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்கும்.''7 அரசு நடத்தி வந்த மாரிஸ் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் இக்கூட்டத் துக்கு வந்திருந்தனர். அவர்கள் வி. ஆரைத் தங்கள் கல்லூரிக்கு வந்து பேசுமாறு வற் புறுத்தினர். அவர்களுடைய முதல்வர் செஷ யர் தலைமை வகிக்க, வி. ஆர்., வறுமையில் உழன்ற கிராம மக்களைப் பற்றிப் பேசினார்.

(தொடரும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

4. வி. ஆர். காந்திக்கு எழுதியது 30-4-26, SN 11140 காந்தி சங்கிரஹாலயம்.
5. மேற்படி 20-5-26.
6. மேற்படி 7-6-26.
7. மகாதேவ தேசாய் டயரி பாகம் 8, பக்கம் 353



கல்கி ஓவியர் திரு. விரு அவர்களின் குமாரன் சிரஞ்சீவி T. V. முத்துகுமரனுக்கும் திரு. ஜகந்நாதன் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி லக்ஷ்மிக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. திரு. சதாசிவம் அவர்களும் திருமதி M. S. சுப்புலட்சுமி அவர்களும் திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். மற்றும் ஏராளமான நண்பர்களும், பிரமுகர்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.

வாழ்க மணமக்கள்.

கல்கி

சந்தா விவரம்

★

	ஓராண்டு	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 38	ரூ. 19
இலங்கை (இந்திய நாணயப்படி)	ரூ. 54	ரூ. 27
இதர வெளிநாடுகள்	ரூ. 90	ரூ. 45

மானேஜர்

கல்கி, சென்னை - 600 032

பகல் உணவு முடிந்து நாங்கள் ஹோட்டலுக்குத் திரும்புவதற்கும் துரைராஜ் தன் சினப் புகைப்படக் காரருடன் வருவதற்கும் சரியாக இருந்தது.

''அரசாங்க வெளியீடான உதயத்தின் அட்டை யில் உங்கள் படத்தைப் போட்டுக் கௌரவிக்க விரும்புகிறோம். அதற்கு உங்களைப் படம் எடுக்க வேண்டும். கே. எல். லின் முக்கிய இடங்களை ஒரு ரவுண்ட் அடித்து வரலாம் வாருங்கள்'' என்று சொல்லி 'உதயம்' பத்திரிகையின் இதழ்கள் சில வற்றைக் கையில் தந்தார்.

'உதயத்தின் அமைப்பு, வழுவழுப்பான படங்கள், அச்சின் நேர்த்தி இவைகளைக் கண்டு நான் அசந்து போனேன். நாட்டு மக்களின் முன்னேற்றத்துக் காக அரசாங்கம் எந்தெந்தப் புதுத் திட்டங்களைத் தீட்டுகிறது என்பதைப் பற்றியும், பல மட்ட மக்க ளின் வளர்ச்சி பற்றியும் ஒவ்வொரு இதழிலும் விரிவாக எழுதப்பட்டிருந்தது. கூடவே நல்ல தர முள்ள கதைகள், கவிதைகள், பேட்டிக் கட்டுரைகள்.

மனம் கவர்ந்த மலேஷியா – 3

சிவசங்கரி

முகம் கழுவி, சீர் செய்தபின் மீண்டும் கே. எல். ஐ. சுற்றக் கிளம்பினோம். பார்லிமெண்ட், லேக் கார்டன், நேஷனல் மான்யுமெண்ட், நேஷனல் மாஸ்க், புகைவண்டி நிலையம், பிரிக் ஃபீல்ட் சர்ச் என்று ஒவ்வொரு இடத்திலும் புகைப்பட நிபுணர் படங்களை எடுத்துத் தள்ளினார்.

லேக் கார்டன் அழகானதொரு பூங்கா. பச்சைப் புல்வெளிகள், ஏறிச் சரிந்த சின்னக் குன்றுகள், மரங்கள், மலர்ச் செடிகள் என நிறைந்திருந்த அந்த இடத்தில் புதிதாய்த் திருமணமான தம்பதி களைப் புகைப்படம் எடுப்பது அந்த ஊரின் வழக்க மாம். நாங்கள் போனபோதுகூட இரண்டு ஜதை களைக் கல்யாண உடையிலேயே பார்த்தோம்.

புத்தர் ஆலயம் ஒன்றிலும் புகைப்படம் எடுக்க விரும்பி ஒரு மடாலயத்துக்குப் போனோம்.

சயனித்திருக்கும் புத்தர் சிலை, தியானத்திலிருந்த புத்தர் சிலை எல்லாம் மிகப் பெரிய அளவில் இருந்தன. பிரார்த்தனை செலுத்திய மக்கள் சமர்ப் பித்திருந்த பூச்செண்டுகளும், அந்த இடத்தின் அமைதியும் மனதுக்கு நிம்மதியைத் தருவதாக இருந்தன.

வந்த வேலையை நாங்கள் முடிக்குமுன் பிக்ஷு ஒருவர் அருகில் வந்தார்.

துரைராஜ் என்னை அறிமுகம் செய்வித்து, நாங்கள் வந்த காரணத்தைச் சொன்னதும் அவர் ஆர்வத் துடன் என்னைப் பற்றிய விவரங்களைக் கேட்டார். அவரது சிநேக மனப்பான்மையைக் கண்ட நான் ''உங்களிடம் சில கேள்விகளை நான் கேட்கலாமா?'' என்றேன்.





✖ சயனித்த புத்தர் அருகில்
✖ யூனிவர்ஸிடி கூட்டம் முடிந்து வெளியில்

''பேட்டியா? எழுத்தாளர் அல்லவா? சரி... கேளுங்கள்'' என்றார்.

அந்த பிக்ஷு ஈழத்தைச் சேர்ந்த வராம். சுமார் பதினாறு வருஷங்களாக இந்த ஆலயத்தில் இருக்கிறாராம். அவர் பூர்வாசிரமப் பெயரைக் கேட்டேன். சொல்ல மறுத்து விட்டார்.

''ஒரு துறவியாக நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்ற நியதிகள் கட்டுப்பாடுகள் உண்டா?''

''நிறைய உண்டு. சுருக்கமாகக் கூற வேண்டுமென்றால் நாங்கள் ரொம்ப எளிமையான வாழ்க்கை வாழ வேண்டும். கிடைத்ததை உண்டு, தியானத்தில் நேரத்தைச் செலவழிக்க வேண்டும்.''

''எளிமை என்றால் என்ன? கட்டில், மெத்தை உண்டா? குளியல் அறை வசதிகள் உண்டா? வெளியில் போனால் வாகனம் ஏறலாமா?''

''அதெல்லாம் உண்டு.''

''சாப்பாடு எப்படி?''

''யார் எது கொடுத்தாலும் உண்போம்.''

''சைவ உணவுதானே?''

''இல்லை, இல்லை. அசைவமும் தான்!''

அவர் சிரித்தார்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''புத்தர் அஹிம்சையைப் போதித்திருக்கிறார் அல்லவா?''

''ஆமாம்,' ஆனால் அதற்கென்ன? நாங்கள் உயிர்க் கொலை ஏதும் செய்யவில்லையே!''

''உங்களுக்காக இன்னொருவர் கொல்வதை மட்டும் எப்படி அனுமதிக்கிறீர்கள்?''

''நாங்களா கொல்லச் சொல்கிறோம்? அவர்களாகவே கொன்று தங்கள் இஷ்டம் போல் எங்களுக்கு உணவு தருகிறார்கள். இதற்கு நாங்கள் எப்படிப் பொறுப்பாக முடியும்?''

மேற்கொண்டு எங்கள் பேச்சு தொடராத படி அவர் 'வேலை இருக்கிறது. நான் வரு



கிறேன்' என்று சிரித்துக் கொண்டே போய் விட்டார்.

போட்டோ செஷன் முடிந்து நாங்கள் ஹோட்டலை அடைந்தபோது இரவு மணி ஏழாகி விட்டது. உள்ளே நுழைந்தவர்களை ரிஸப்ஷனிலேயே எதிர்கொண்டு அழைத்தார் குமணன்.

''மலேஷியாவின் பிரபல ஆங்கிலத் தினசரியான 'தி ஸ்டாரி'லிருந்து உங்களை பேட்டி காண வந்து அரை மணியாய்க் காத்திருக்கிறார்கள். உங்களை எங்கு பிடிப்பது என்று தவித்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாய் வந்தீர்கள்.''

மேலே ஏழாவது மாடியில் இருந்த எங்கள் அறைக்குப் போனோம்.

ஒரு சீனப் பெண் நிருபர், ஓர் இந்திய ஆண் நிருபர், ஒரு போட்டோ கிராபர் காத்திருந்தனர்.

லீ சென் என்ற அந்த நிருபர் என்னிடம் பதினைந்து நிமிஷ பேட்டி என்று சொன்னது ஒரு மணி நேரத்துக்கு நீண்டு போனது.

அன்று இரவு துரைராஜ் வீட்டில் தடபுடலாய் விருந்து. அவர் வீட்டில் நான் மிகவும் விரும்பிச் சாப்பிட்டது ஆப்பத்தைத்தான். வார்த்து எடுத்த ஆப்பத்தைத் தேங்காய்ப் பாலில் ஊற வைத்துப் பரிமாறினது ஒரு தனி ருசியோடு இருந்தது.

மறுநாள் காலை பத்து மணிக்கு கே. எல். யூனிவர்சிடியில், கலந்துரையாடல். முதல் முறையாகச் சர்வ கலாசாலையில் பேச வேண்டும் என்ற நினைப்பு கொஞ்சம் உதைப்பாகவே இருந்தது. இந்திய சாஹித்திய அகாடமியின் பரிசைப் பெற்றிருக்கும் திரு இரா. தண்டாயுதம் கலாசாலை வாயிலில் காத்திருந்து எங்களைக் கூட்டம் நடக்கும் அறைக்கு அழைத்துச் சென்றார்.

கலாசாலையின் சூழ்நிலை மிகவும் ரம்யமானதாக இருக்கிறது. சுற்றிலும் பச்சைப் புல்

✖ மிளகு பறிக்கும் மங்கை

✖ தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. நாராயணனுடன்





வெளிகள், பூத்துக் குலுங்கும் மரங்கள், நவீன கட்டிடங்கள், சுத்தமான பராமரிப்பு எனக் கலாசாலை அழகாக இருந்ததை அதை அடைந்த உடனேயே உணர முடிந்தது.

இரா. தண்டாயுதம் கூட்டத்தைத் துவக்கிப் பேசினார்.

அடுத்து என் உரை. பின்னர் கலந்துரையாடல்.

நான் 'எப்படி என் கதைக்கான கருக்களைத் தேர்ந்தெடுக்கிறேன், எதற்காக எழுதுகிறேன், என் எழுத்தின் லட்சியம் என்ன, எழுத்துலகில் என் சுவையான அனுபவங்கள் என்ன — என்பதைப் பற்றியெல்லாம் நான் பேசுவேன் என்று அவர்கள் எதிர்பார்ப்பதாக இரா. தண்டாயுதம் துவக்க உரையில் கூறியது எனக்கு ரொம்ப சௌகரியமாய்ப் போயிற்று. என்ன பேசுவது என்ற மண்டை உடைப்பு இல்லை பாருங்கள் — அதனால்தான்.

அவர்கள் விருப்பப்படி பேச்சு முடிந்ததும் கலந்துரையாடல் துவங்கியது. கிட்டத்தட்ட இரண்டு மணி நேரங்களுக்கு நீடித்த அந்தக் கூட்டத்தில் நடந்த எல்லாக் கேள்வி பதில், பேச்சுக்களையும் இங்கு குறிப்பிட இடம் இல்லை என்பதால் ஒருசிலவற்றை மட்டும் மாதிரிக்கு எழுதுகிறேன்.

''தொடர்கதைக்கும் நாவலுக்கும் தரத்தில் வித்தியாசம் உண்டு அல்லவா? தொடர்கதை என்றால் அதற்கு வாராவாரம் சஸ்பென்ஸ் வைத்து எழுத வேண்டும். அதற்காகச் சில மலிவான உத்திகளைக் கையாள வேண்டும். இவைகளினால் கதையின் தரம் பாதிக்கப்படுவது நிஜம்தானே?'' —

திரு. பூபாலனின் இந்தக் கேள்விக்குப் பதில் கூறினேன்:

''சிந்தித்துப் பார்த்த வரைக்கும் உங்கள் குற்றச்சாட்டை நான் ஏற்க முடியாதவளாய் இருக்கிறேன். என்னையே உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். நான் ஒரு கதையை எழுதும்போது தொடர்கதைக்காக மலிவான உத்திகளைக் கையாண்டு எழுதுவது கிடையாது. தொடராக வந்த கதைகள் பின்னர் சென்னையின் புகழ்மிக்க வானதி பதிப்பகத்தாரால் புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. தரம் இல்லாத தொடரைப் புத்தகமாக வெளியிட எந்தப் பதிப்பாளரும் முன்வர மாட்டார். என் எழுத்துக்களைப் பார்க்கையில் தொடருக்கும், நாவலுக்கும், இலக்கியத் தரத்தில் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை'' — என்றேன் நான்.

''தமிழ்நாட்டில் 'ஆர்ட் மாகஸின், கமர்ஷியல் மாகஸின்' என்று இரண்டு வகை ஏன் உள்ளது?'' என்றார் ஒருவர்.

''நான் பத்திரிகைகளை அப்படித் தரம் பிரிப்பதில்லை. வியாபாரப் பத்திரிகை என்று நீங்கள் குறிப்பிடுவதிலும் தரமான விஷயங்கள் வெளியாவதுண்டு. இலக்கியப் பத்திரிகை என்பதிலும் — சிலசமயம் தரக்குறைவான சமாசாரங்கள் பிரசுரமாகி விடுவதுண்டு. மஞ்சள் கண்ணாடியை அணிந்து கொண்டு விட்டால் எல்லாம் மஞ்சளாய்த் தெரிந்து விடுமே என்ற பயத்தில், முன்னதாக மனசுக்குள் எந்தவிதக் கட்டுப்பாடும், தீர்மானமும் இல்லாமல் அனைத்துப் பத்திரிகைகளையும் அணுக வேண்டும் என்று நான் நம்புகிறேன். அடிப்படையில் என் மனசுக்குப் பிடித்த தரம் இருக்க வேண்டும், இதுதான் எனக்கு முக்கியம்.''

இப்படிப் பல கேள்வி பதில்களுக்குப் பிறகு நான் ஒரு கேள்வி போட்டேன்: ''கடந்த சில நாட்களாய் நான் சந்தித்த சில தமிழர்களுடன் பேசினதில், மலேஷியாவில் தமிழர்களின் எதிர்கால நிலை குறித்து மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது தெளிவானது. சிலர் 'பிரகாசமான எதிர்காலம் இருக்கும்' என்கிறார்கள். வேறு சிலரோ 'சீனரின் கடையில் பாத்திரம் கழுவும் உத்தியோகமும், ரோடு போடும் உத்தியோகமும்தான் தமிழனுக்கு மிஞ்சப் போகின்றன' என்கிறார்கள். இதைக் குறித்த உங்கள் கருத்தென்ன?''

''இருபது ஆண்டுகளுக்கு முன் பிரஜா உரிமை வழங்கப்பட்டபோது அதை ஒவ்வொரு சீனரும் உபயோகப்படுத்திக் கொண்டார். இந்நாட்டுக் குடிமக்களாக மாறிச் சம்பாதிக்கும் பணத்தை இங்கேயே முதலீடாகப் போட்டனர். உழைத்தனர். இன்றைக்கு நாட்டின் சொத்துக்களைக் கட்டி ஆள்கின்றனர். ஆனால் நாம்? கப்பல் கப்பலாகத் தமிழகத்துக்கு இங்கு சம்பாதிக்கும் பணத்தையும், பொருட்களையும் பிறந்த நாட்டை மறக்க இயலாதவர்களாக ஏற்றுமதி செய்தோம். இந்த மண்ணில் ஒட்டாமல் வாழ்ந்தோம். அதன் விளைவுதான் இன்றைய நிலை'' என்று நண்பர் ஒருவர் சொல்லி முடிப்பதற்குள் இன்னொருவர் ஆவேசத்தோடு அதை மறுத்தார். ''உங்களைப் போன்ற சிலர் வேணுமானால் பிறந்த நாடு, தாய்நாடு என்று தமிழகத்தோடு உறவாடுவதாகச் சொல்லுங்கள். நாங்களெல்லாம் அப்படி இல்லை. எங்கள் உயிர், உடல் எல்லாம் இங்குதான் தோன்றி, வளர்ந்து ஐக்கியமாகி இருக்கின்றன. இந்த மண்ணில் எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை. தமிழனின் எதிர்காலம் நன்றாகத்தான் இருக்கும்'' என்று சொல்ல, தொடர்ந்து பல நிமிஷங்களுக்கு

தகப்பன்: இண்டர்வியூவுக்கு போயி இருந்தியே! என்ன கேட்டாங்க?

மகன்: சேரில் உட்கார்ந்து கொண்டே தூங்க முடியுமா, குறட்டை விடாமல் தூங்க முடியுமான்னு கேட்டாங்க!

ஈரோடு மாரிமுத்து



அங்கு சூடான வாக்குவாதங்கள் நடைபெற்றன.

''நம் விவாதத்தை இன்னொரு நாள் வைத்துக் கொள்வோம், இன்று வேண்டாம்'' என்று திரு தண்டாயுதம் கூற, மேற்கொண்டு ஒருசில கேள்வி பதில்களோடு கூட்டத்தை முடித்தோம்.

''மலேஷியாவைப் பற்றின உங்கள் கருத்தைக் கூறுங்கள்!'' இது கடைசியாக என்னிடம் கேட்கப்பட்ட கேள்வி.

''வந்து நாலு நாட்கள் கூட ஆகவில்லை. இந்நிலையில் என் அபிப்பிராயத்தை எப்படிச் சொல்வது?'' என்ற நான் ''நீங்கள் கேட்பதற்காக என் மனதுக்குப்பட்ட என் கருத்தைக் கூறுகிறேன். இங்கு காணும் தமிழ் ஆர்வம், அதை வெறி என்று கூடச் சொல்லலாம், என்னைப் பிரமிக்க வைக்கிறது'' என்று கூறினேன்.

இரண்டு மணிக்கு ரேடியோ, மலேஷியாவில் பேச்சு ஒலிப்பதிவு இருந்ததால் அதோடு கூட்டத்தை முடித்துக்கொண்டு கிளம்பினோம்.

கார் வரைக்கும் வந்து எங்களை வழி அனுப்பிய திரு. தண்டாயுதம் ''உங்களிடம் எனக்கு இரண்டு விஷயங்கள் ரொம்பப் பிடித்தன. ஒன்று, எதற்கும் உங்களையே முன் உதாரணமாகச் சொல்வது. இதன் மூலம் உங்களைப் பற்றி நீங்கள் தெளிவாக இருக்கிறீர்கள் என்பது புரிகிறது. இரண்டு, அனாவசியமாகப் பிறரை உங்கள் பேச்சில் நீங்கள் இழுக்காதது. உங்களுக்குச் சம்பந்தம் இல்லாததைப் பற்றிப் பேச மறுப்பதனால் வீண் வம்பு, சண்டைகளைத் தவிர்க்கிறீர்கள்'' என்றார்.

திரு. தண்டாயுதத்தின் பாராட்டுக்கு நான் நன்றி தெரிவித்ததோடு ஆயுசு பரியந்தம் இதே கொள்கையை நான் கடைப்பிடிக்க வேண்டும் என்று மனசில் உறுதியும் கொண்டேன்.

ரேடியோ மலேஷியாவில் பணி புரியும் திரு. பைரோஜி நாராயணன் தமிழகத்தின் தீபம் பத்திரிகைக்குத் தொடர்ந்து கட்டுரைகள் எழுதும் நல்ல எழுத்தாளர்.

வனிதையர் சோலைக்காக ஒரு பேட்டி எடுத்தார் திரு. நாராயணன். பின்னர் நான் இதுவரை எழுதியுள்ள தொடர்கதைகள் ஒவ்வொன்றையும் எழுதத் தூண்டிய காரணம், கதையின் விளைவுகள் இவற்றைப் பற்றி விரிவாகப் பேசும்படி கேட்டுக் கொண்டார். அத்தனை தொடர்களைப் பற்றியும், பேசுவது சாத்தியமில்லாததால் எட்டு கதைகளைக் குறித்து, தலா ஐந்து நிமிஷங்கள் வரும்படி பேசினேன். 'சிவசங்கரியுடன் சில நிமிஷங்கள்' என்று எட்டு வாரங்களுக்கு வெள்ளி தோறும் நான் தாய் நாட்டுக்கு திரும்பின பிறகும் அவைகள் ஒலிபரப்பாகும் என்றார் திரு. நாராயணன். அகில உலகத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. பி.பி. நாராயணனை மதியம் சந்தித்து உரையாடினது ஓர் அனுபவம்.

ஹோட்டலுக்குத் திரும்பி வானம்பாடி பத்திரிகையின் வாசகர்கள் கேள்விகளுக்கு ஒருமணி நேரம் பதில் சொன்னேன்.

பொழுதோடு சாப்பிட்டுவிட்டுப் படுக்கலாம் என்று எண்ணிச் செயல்பட்டதைத் தடுக்கும் வகையில் போன் அடித்தது. முதல் நாள் 'தி ஸ்டாருக்காக'ப் பேட்டி எடுத்த சீனப்பெண் நிருபர் லீ சென் பேசினார்.



நண்பன்: அடிக்கடி என் கனவில் நர்ஸ் ஒருத்தி வருகிறாள். பயமாக இருக்கிறது.

மற்றவன்: டாக்டரைப் பார்ப்பது தானே?

அவன்: கனவில் டாக்டர் வரமாட்டேங்கிறாரே! எம். சாம்பமூர்த்தி.

பேட்டி அன்று மாலை இதழில் வெளியாகி விட்டதாம்.. நேரில் என்னைக் கண்டு பத்திரிகையைக் கொடுக்க அவருக்கு விருப்பமாம் 'என் சிநேகிதியிடம் உங்களைப் பற்றிச் சொன்னேன், அவளும் உங்களைப் பார்க்க ஆசைப்படுகிறாள், அழைத்து வரட்டுமா?'' என்றார் லீ சென்.

''வாருங்கள்'' என்றேன்.

லீ சென்னும், அவரின் சிநேகிதி ஃபென்னியும் வந்து, பேசிப் போகும்போது இரவு மணி பதினொன்று. அதற்குப் பிறகு குமணன், துரைராஜுடன் நாங்கள் கீழே சென்று உணவு உட்கொண்டோம்.

''நீங்கள் ரொம்ப அதிருஷ்டக்காரர் சிவசங்கரி. பல விஷயங்களில் நீங்கள் முதல் ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறீர்கள்'' என்றார் துரைராஜ் திடீரென்று.

நான் புரியாமல் விழித்தேன்.

''ஒரு பத்திரிகை எழுத்தாளரைச் சிறப்பு விருந்தினராய், எல்லாச் செலவுகளையும் மேற்கொண்டு அழைப்பது இதுதான் முதல் முறையாம்: டவுன் ஹாலில் ஒரு பத்திரிகையின் விழா நடப்பது இதுதான் முதன் முறையாம், ஸ்டார் பத்திரிகை ஒரு தமிழ்நாட்டு எழுத்தாளரைப் பேட்டி கண்டு மறுநாளே இரண்டு பத்தி பிரசுரிப்பது இதுதான் முதன் முறையாம், அரசாங்கப் பத்திரிகையான உதயத்தின் அட்டையில் வெளியார் படம் வருவது இதுதான் முதல் முறையாம், மலேஷியாவில் இதுவரை ஒரு எழுத்தாளருக்கும் போஸ்டர் அடித்து, ஒட்டியது கிடையாதாம். பினாங், சுங்கை பட்டாணி, போர்ட் கிள்ளான் முதலிய இடங்களில் போஸ்டர் ஒட்டி இருக்கிறார்களாம், ஆக இதுவும் முதல் முறையாம்...''

துரைராஜ் அடுக்கிக் கொண்டே போனார். இந்தப் பெருமைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணமான கடவுளின் கருணையையும், என்னை ஈன்று வளர்த்த அப்பா, அம்மாவையும் அந்தக் கணம் நான் மனசார வணங்கினேன்.

(தொடரும்)

கவனமாய்ப்
பார்த்துக் கொள்ள
அம்மா நீங்கள்
இருப்பதால்...





ஓடி விளையாடும்
பாப்பாவுக்கு
விழுவதும்
எழுவதும் விளையாட்டு!

அதனால் கவலை வேண்டாம். அவன் தன்னைக் காயப்படுத்திக் கொள்ளாமல் மட்டும் கவனித்துக் கொள்ளுங்கள். சோதித்து அறியும் அவனது முயற்சியைத் தடுக்காதீர்கள். அவனுக்கு ஆர்வம் அதிகம். தன்னைச் சுற்றி உணர்ந்து அறியும் துடிப்பு அது. தனது வலிமையையும், திறமையையும் பற்றிக் கற்றுணரும் முயற்சி அது.

மேலும் ஒரு பாடத்தைக் கற்க அவனுக்கு உதவுங்கள் இப்போது. திடமான உணவினைக் கடித்துத் தின்னும் வகையிலான பாடமே அது!

தின்பதற்குக் கொடுங்கள் ஒன்று—முழு நலமானதும், சுவைமிக்கதும், ஊட்டமளிப்பதும் ஆன ஒன்று...

உங்கள் கவனத்தை ஒத்த அன்பான கவனத்தோடு செய்தது ஒன்று.


அவனுக்குக் கொடுங்கள் ஒரு பார்லே க்ளுகோ பிஸ்கட்.

எங்கள் ஆலைக்கு வாருங்கள், பாருங்கள், பார்லே க்ளுகோ பிறப்பதை! 'முழுநலமானது' என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளுங்கள். எங்கள் ஆலை நவீனமான தொரு மருத்துவமனை போன்றது; அங்கு, எல்லாம் தாமே இயங்குவன; மிகவும் சுத்தமானவை; கைபடா தூய்மையோடு பிஸ்கட்டுகள் உங்களுக்குக் கிடைக்கின்றன.

பால், சர்க்கரை, க்ளுகோஸ் மற்றும் சன்னமாக அரைத்த கோதுமை முதலிய குழந்தைக்கு உகந்த ஊட்டங்கள் செறிந்த பார்லே க்ளுகோ பிஸ்கட் உங்கள் குழந்தைக்கு ஆதர்சமானது.

தவிரவும், சுவைமிக்கது இது; கரகரப்பானது; செரிப்பதற்கு எளியது—மென்று தின்று ரசித்து மகிழ்வான் உங்கள் குழந்தை.

உங்களின் அன்புக் கவனம் உங்கள் குழந்தையிடம்—எங்களுக்கும் அதே கவனம் பார்லே க்ளுகோ தயாரிப்பதில்.



பார்லே க்ளுகோ பிஸ்கட்டுகள்.

உலகத் தேர்வில் 5 முறை வெற்றி உங்கள் வியாபாரியிடம் வண்ணமய 'பாப்பா' படமுள்ள உறையைப் பார்த்து வாங்குங்கள்.

everest/859/PP/tm

எவ்வளவோ நல்ல படங்களை எடுத்திருக்கும் ஸ்ரீதர் தமக்குப் பிடித்த படமாக எதைச் சொல்வார்?

''நான் தயாரித்தவற்றுள் சிறந்த படம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்' சமீபகாலத்தில் எனக்குப் பிடித்த படம் ''இளமை ஊஞ்சலாடுகிறது''. எனக்கு ஏன் இந்தப் படம் பிடித்தது என்பதற்கான காரணத்தை முதலில் கூறிவிடுகிறேன். ஒரு படம் பலபேருடைய கூட்டு முயற்சி. டைரக்டர் தான் அதன் தலைவர் என்றாலும் எல்லோரும் ஒன்றாக ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் முயற்சி வெற்றி பெறும். இளமை ஊஞ்சலாடுகிறது படத்தைப் பொறுத்த வரையில் எல்லாக் கைகளுமே சிறப்பாகச் செயல்பட்டிருக்கின்றன.

''மும்முனைக் காதல் உங்கள் படத்தில் எப்பொழுதுமே இருக்கிறதே அது ஏன்?''

''மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் அப்படித்தான் தோன்றும். ஆனால் அது உண்மை அல்ல, காதலிக்க நேரமில்லை, அலைகள், ஆகிய படங்களில் மும்முனைக் காதல் எங்கே?''

''காதல் இல்லாமல் படமே எடுக்க முடியாதா? காதலுக்குத்தான் முக்கியத்துவம் தரப்பட வேண்டுமா?''

''நாட்டில் பல பிரச்னைகள் இருக்கின்றன. வரவுசெலவு பிரச்னை, உணவுப்பிரச்னை, கல்விப் பிரச்னை போன்றவை. எல்லாமே படமெடுக்க முடியாத அளவுக்கு ட்ரை ஸப்ஜெக்ட்ஸ். ஆனால் காதல் பிரச்னை காலத்தால் அழிக்க முடியாதது. காவியங்கள் எல்லாமே காதலின் அடிப்படையில் உருவா


"இளமை" சோதனைக்குள்ளாகிறது!



ஸ்ரீதர் பேட்டி



'இளமை ஊஞ்சலாடுகிறது' படத்தில் கமலஹாசன், ஸ்ரீபிரியா' ரஜனிகாந்த், ஜெயசித்ரா.





னவைதானே? காதலை அறவே விட்டுவிட்டு யாராலும் படமெடுக்க முடியாது. அப்படி எடுத்தால் அது டாகுமெண்டரி படமாகத்தான் இருக்கும்.''

''உங்களிடம் உதவியாளர்களாக இருந்தவர்களும், நீங்கள் அறிமுகப்படுத்திய புது முகங்களும் இன்று புகழேணியில் உயரே இருக்கிறார்கள். அப்படி இருக்க இந்தப் படத்தில் ஏன் புது முகங்கள் இல்லை?''

''ஸ்ரீதர் என்றால் புது முகங்களைத்தான் போடுவார் என்றல்ல. அப்படிப் போட வேண்டுமென்ற நிர்ப்பந்தமுமில்லை! கமலஹாசன், ரஜினி காந்த் ஆகியோர் நடித்த படங்களை நான் பார்த்தேன். அவர்கள் நடிப்பு என்னைக் கவர்ந்தது. இந்த இளம் கலைஞர்களை வைத்து ஒரு படம் பண்ண வேண்டுமென்று விரும்பினேன். ஒரு புது முகத்தைப் படத்தில் நடிக்க வைக்க வேண்டுமென்றால் எவ்வளவு கஷ்டம் என்று எல்லோருக்கும் தெரியும். ஒவ்வொரு நிலையிலும் அந்தப் புதுமுகத்துக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பயிற்சி அளிக்க வேண்டும். இதற்கான பொறுமை அன்று என்னிடம் இல்லை. அன்றைய என் மனநிலை அப்படி இருந்தது. அது மட்டுமல்லாமல் இந்தப் படத்தின் திரைக்கதை, வசனம் ஆகிய எல்லாமே முழுவதும் தயாராக என்னிடம் இருந்தன. படத்தைச் சீக்கிரம் முடித்து விடவேண்டுமென்ற நிலை வேறு. இவை எல்லாமே ஒன்றாக இணைந்ததால் தான் புது முகங்களுக்கு இந்தப் படத்தில் வழி இல்லாமல் போய்விட்டது. ஆனால் தயாராகி வரும் 'சக்தி'ப் படத்தில் மீனு என்ற புது முகத்தை அறிமுகப்படுத்துகிறேன்.''

''ஒரு கதை முழுமை பெற உங்களுக்கு எவ்வளவு காலம் பிடிக்கும்?''

''ஒரே நாளில் கரு கிடைத்து முழுமையான வடிவம் பெற்று விடுவதுமுண்டு. ஒரு வருடம் இழுத்தடிப்பதுமுண்டு. ஆனால் கற்பனை உருவாகி முழுமை பெற்ற பிறகுதான் அதை நான் படமாக எடுக்கிறேன்.''

''தான் உயிருக்குயிராகக் காதலிக்கும் பெண்ணைக் காண அவள் ஊருக்கு வருகிறான் கதாநாயகன். அங்கே ஓரிரவில் அவளது விதவைத் தோழியிடம் தன்னை இழந்து விடுகிறான். இந்தக் காட்சிக்குப் பலத்த எதிர்ப்பு இருந்ததாமே?''

''உண்மைதான். 'இப்படி ஒருவன் நடந்து கொள்வானா?' என்று பலர் கேட்டனர். என்னுடைய கதாநாயகன் சபல புத்தியுள்ளவன். இப்படி நடந்து கொள்வானு என்று நான் கதையையே அமைத்திருக்கிறேன். ஆக இப்படி நடந்து கொள்வானு என்ற கேள்விக்கு அங்கு இடமே இல்லை.''

''ரஜினிகாந்த் மிகவும் வேகமாக, இந்தப் படத்தில் பேசியிருப்பதால் பலருக்கு வசனமே புரியவில்லை என்று கூறப்பட்டதே?''

''ரஜினி வேகமாகத்தான் இந்தப் படத்தில் பேசினார்.

முதன் முறையாக அந்தப் படத்தில் நான் அவருடன் இணைந்து வேலை செய்ததால் எனக்கு அது பெரியதாகத் தெரியவில்லை. அவர் சாதாரணமாக எப்பவுமே அப்படித் தான் பேசுவார் போலும் என்று நான் நினைத்து விட்டேன்.''

''கமலஹாசன் பெங்களூரில் தம் காதலி யின் தோழியைத் தேடி அலைகிறார். அந்தச் சமயத்தில் ரஜினிகாந்துக்கு இங்கு திரு மணம் நடந்து விட்டதுபோல் ஒரு காட்சி வருகிறது. இது பலருக்குப் புரியவில்லை யாமே?''

''இது டெக்னிகல் தவறு அல்ல. கமல ஹாசன், ரஜினிகாந்த்துக்குத் திருமணம் நடந்து விட்டது என்று நினைப்பதாகத்தான் அந்தக் காட்சி இருக்கிறது.''

''படத்தின் க்ளைமாக்ஸ் கட்டம். ஒரு குறிப்பிட்ட காட்சியில் பின்னணி இசை முதற் காட்சிக்கும், அடுத்த காட்சிக்கும் சம்பந்தம் இல்லாமல் தடுமாறிப் பின்னர் சேராகிறதே அது ஏன்?''


''நீங்கள் குறிப்பிடும் முதல் காட்சி ரீலின் கடைசியில் வருகிறது. அதற்கு அடுத்து வருவது புது ரீலின் ஆரம்பக் காட்சி, ரீல் மாற்றம் ஏற்படும்பொழுது எப்பொழுதுமே குதிக்கும் ஓசை, இணையாத தன்மை ஆகியவை ஏற்படுவதுண்டு. என்னதான் சரியாக இசை யமைத்தாலும் படத்தை ஓட்டும் ஆபரேடர் குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்காமல் முன்போ, அல்லது தள்ளியோ ஆரம்பித் தால் இப்படி இசை வேறு பட்டுத் தெரிவ துண்டு.''

''கடைசியாக ஒரு கேள்வி? நீங்கள் படத்தை எடுத்து வெளியிட்ட பிறகு இன் னும் சிறப்பாக எடுத்திருக்கலாமே என்று உங்களுக்குத் தோன்றியதுண்டா?''

''இடையவே இடையாது. எடுத்துக் கொண்ட Subjectல் நான் தப்பு பண்ணி யிருக்கலாம். ஆனால் எடுக்கப்படும் முறையில் நான் தப்பு செய்ததே இல்லை. எடுப்பதற்கு முன்பு யோசிப்பேன். எடுத்தபிறகு எதிர் காலத்தைப் பற்றித்தான் சிந்திப்பேன்.''

பேட்டி: சலன்

கொஞ்ச நேரம்!



நிலையிலா உலகின் நியதி
    நின்றிடா(து) உருளும் - அதனுள்
அலைகடல் வயிறு கிறி
    அவதரித்(து) எழுந்து வந்து
விலையிலா ஒளியை நல்கி
    விடைபெறும் அழகு கதிரோன்
மலைமுக(டு) அதனில் வீழ
    மயங்கினேன் கொஞ்ச நேரம்!

துறவறம் பூண்டு பகலோன்
    துயருடன் மேற்கில் வீழ,
இரவெனும் கரிய போர்வை
    இதமுடன் உலகை மூட,
உறவினுக்(கு) ஏங்கி அல்லி
    மைமையாம் காதல் நிலவின்
வரவினைப் பார்த்து நிற்க,
    வருந்தினேன் கொஞ்ச நேரம்!

வழுவிலா வடிவு தாங்கி
    வானிலே பவனி வரவே
முழுநிலா முடிவு செய்ய,
    முகிலுடை விலகி மெள்ள
நழுவிட, நகைத்து, காதல்
    நாயகி அல்லி யாளுந்
தழுவிடும் அழகு கண்டேன்,
    தனிமையில் கொஞ்ச நேரம்!

வெண்ணிலா - அல்லிக் காதல்
    வளரவே, பொழியும் பனியில்
என்னவள் நினைவும் ஏறு
    எழுந்ததென் நெஞ்சின் ஓரம்!
வெண்ணிலாப் போல நாளும்
    வஞ்சிஎன் அழகு ராணி,
கண்மணி அருகு நாடி
    களித்திடச் சிறந்த நேரம்!

நா. வீ. பா. கட்டபொம்மன்.

எல்.ஐ.சி. வழங்கும் "கேப்"

உங்களுடைய குழந்தை முன்னுக்கு வர அரிய வாய்ப்பு



குழந்தைகளுக்கான **புதிய** ஆன்டிசிபேடட் பாலிசி

உங்கள் அருமைக் குழந்தைக்காகவே, எல்.ஐ.சி., இலாபத்துடன் கூடிய ஒரு புதிய பாலிசியை அறிமுகப் படுத்துகிறது. குழந்தைகளுக்கான ''ஆன்டிசிபேடட்'' பாலிசி—ஆங்கிலச் சுருக்கம் ''கேப்'' 18 (அ) 21 வயதை உங்கள் குழந்தை எட்டும்போது, குறிப்பிட்ட ஒரு முழுத் தொகையை வாழ்க்கையைத் துவக்கிட அளிக்கிறது. அதன் பிறகு ஆயுள் பாதுகாப்பு, பாலிசி முதிர்வடையும் காலம் வரை, தொடர்கிறது. இதற்கான பிரிமியம் தொகையோ, மிகவும் குறைவு.

உதாரணமாக, 39 வருடத்திற்கு ரூ. 15,000/-க்கு, ஓராண்டு நிறைந்த உங்கள் குழந்தையின் பேரில் நீங்கள் எடுக்கும் பாலிசிக்கு, பிரிமியமாக ரூ. 31/- (ஆண்டிற்கு ரூ. 367.20) செலுத்த வேண்டும். உங்கள் குழந்தை 18 வயதினை எட்டும் போது, கணிசமான முழுத் தொகை ரூ. 3,121.20 ஐ வாழ்க்கையின் துவக்கத்தில் பெறுகிறான். முழு ஆயுள் பாதுகாப்பு அதன் பிறகு தொடர்கிறது. அவனது 40 வயதில் ரூ. 15,000/- மற்றும் போனசும் பெறுகிறான். (போனஸ் ரூ. 6,600/- தற்போதைய விகிதத்தில்) ஆக மொத்தம் ரூ. 21,600/- கிடைக்கின்றது.

18 வயதிற்குப் பின் மரணம் ஏற்படின்—அது எப்போது நிகழ்ந்தாலும்—முழுக்காப்புத் தொகையும் போனசும் கிடைக்கும். 18 வயதிற்கு முன் மரணம் ஏற்படின், அதுவரை கட்டிய எல்லா பிரிமியங்களும் திருப்பித் தரப்படும். நீங்கள் எல்.ஐ.சி.க்கு செலுத்துவது ரூ. 367.20 × 39 = ரூ. 14,320.80 (இதன் பேரில் வரிச் சலுகைப்பயனும் கிடைக்கும்). ஆனால், திரும்பப் பெறுவதோ—ரூ. 3,120.20, 18 வயதிலும்; ரூ. 21,600/- (அல்லது) அதிகமாக, 40 வயதிலும் கிடைக்கின்றது. 14 வயதிற்குட்பட்ட உங்கள் குழந்தையை இப்போதே இன்ஷ்யூர் செய்வதன் மூலமாக, மிகுந்த பலன்களை அடையுங்கள்.

மேலும் முழு விவரங்களுக்கு, ''மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரப்பகுதி, மத்திய அலுவலகம், லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா, ''யோகக்ஷேமா'' ஜீவன் பீமா மார்க், பம்பாய்-400 021'' என்ற முகவரிக்கு எழுதுங்கள்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸிற்கு ஈடு இணை எதுவுமேயில்லை.

மினி மர்மத் தொடர்கதை

நரிக்கொம்பு

'கிருஷ்ணவேணி'

9

'ரமேஷை மணந்து கொண்ட உங்களுக்கு முன்பே அவனைத் தெரியுமா, பரிச்சயமுண்டா?' என்று ஹரி கேட்டதும், அநீதா சில விநாடிகள் மௌனமாக இருந்தாள். பிறகு ''முன்பின் பார்த்ததுகூட இல்லை' என்பது பார்வை உள்ளவர்கள் சொல்லக் கூடியது. நான் சொன்னால் அது பொருத்தமாக இருக்காதுதான். ஆனால் அவருக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்ட சில நாட்களுக்கெல்லாமே எங்கள் திருமணம் நடந்துவிட்டது. அவரே இதை என்னிடம் வியப்போடு கூறி இருக்கிறார். 'அநீதா உனக்கும் எனக்கும் ஏற்பட்ட இந்தப் பந்தம் போன ஜென்மாவிலேயே ஏற்பட்டதாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் உன்னைப் பார்த்ததும் — உன்னை மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்கிற அளவுக்கு ஒரு மையல் உன்னிடம் எனக்கு ஏற்பட்டதே அது ஏன்?' என்று வினா எழுப்பி என்னை வெட்கப்படவைத்திருக்கிறார்.''

''அவன் குணத்துக்கு இந்தச் செயல் ஆச்சரிய மானதுதான். எந்த விஷயத்திலும் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வர மாட்டான் ரமேஷ். அதேபோல எதிலும் சட்டென்று ஒரு ஈடுபாடும் காட்டமாட்டான். ரொம்பவும் அழுத்தமானவன் என்று எங்களால் கருதப்பட்ட அவன் உங்கள் விஷயத்தில் இப்படித் திடீரென்று முடிவெடுத்தது எங்களுக்கெல்லாம் அவன் திருமணம் இன்னமுமே புரியாத புதிர்தான்'' என்றான் ஹரி.

''புதிரானவர், என் வாழ்வில் மின்னலாகத் தோன்றினார். அவர் தந்த புதுமையான வாழ்க்கை அனுபவத்திலே புளகித்துப் போனேன். அவரைப் புரிந்து கொள்ளுவதற்குள் புதிராகவே போய்விட்டார்...'' கரகரத்த குரலில் கூறினாள் அநீதா.

'அவன் போட்டுச் சென்ற புதிரை விடுவிக்கத்தான் போகிறேன் அநீதா, கவலைப் படாதே!' என்று தன் மனதுக்குள் கூறிக் கொண்டவன் ''உன் சித்தப்பாவை எங்கே காணவே இல்லையே?'' என்று கேட்டான்.

''நேற்று இரவு இங்கு என்னுடன் உணவருந்த வருவதாகக் கூறினார். ஆனால் வரவில்லை. வரவர என் சித்தப்பாவுக்கு இந்த போர்டு மீட்டிங்குகள் அதிகமாகி விட்டன'' என்றாள்.

'உன் சித்தப்பா மர்மத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதுவும் விரைவிலேயே' என்று தனக்குள் ஹரி கூறிக் கொண்டபோது லோனா இருவரையும் சாப்பிட அழைத்தாள்.

ஹோட்டல் புளூ ஸ்டாரில் வழக்கமாக அமரும் மேஜையடியில் அமர்ந்திருந்தார்கள் ஹரியும் நந்தினியும் — சர்வரின் வரவை எதிர்பார்த்தபடி. அவள் மோதிர மணிந்த விரல் மேஜை விரிப்பில் ஏதோ கோலமிட்டுக் கொண்டிருந்தது.

''என்னைச் சந்திக்க விரும்பினீர்களே, ஏதாவது விசேஷமுண்டா ஹரி'' என்று கேட்டாள் மௌனத்தின் கனத்தைத் தாங்காதவளாக.

''விசேஷமிருந்தால்தான் நாம் சந்திக்க வேண்டுமா என்ன? நீ தான் என்னைக் காண வருவதையே நிறுத்திக் கொண்டு விட்டாய். உன்னைப் போல அப்படி வைராக்கியமாக என்னால் இருக்கமுடியவில்லை'' என்றான் ஹரி.

துருதுருக்கும் கருநீலவிழிகள் பளபளக்க ஹரியை ஆராய்வது போலப் பார்த்தாள் நந்தினி. அவள் ஆராய்ச்சிப் பார்வையைக் கண்டு முறுவலித்தான் ஹரி. அவளும் புன்னகைத்தாள்.

''இந்த எழுத்தாளர்களே ஆபத்தானவர்கள் புரிந்து கொள்ள முடியாதவர்களும் கூட'' என்றான் ஹரி.

''எதனால் அப்படிக் கூறுகிறீர்கள்?''

''இத்தனை நெருங்கிப் பழகியும் உயிருக்குயிராக இருந்தும் ரமேஷ் புரியாதவனாகத்தானே போய் விட்டான். நீயும் அந்த வர்க்கம் தானே — பத்திரிகைக்காரர்கள் எழுத்தாளர்கள் வர்க்கம்.''

''எழுத்தாளர்களிடம் ஏன் உங்களுக்கு இவ்வளவு வெறுப்பு? அது சரி, ரமேஷின் எழுத்துக்களில் உங்களுக்கு ஈடுபாடு உண்டா? அவர் ஆராய்ச்சிக் கட்டுரைகளை விமரிசனங்களைப் படித்திருக்கிறீர்களா?''

''படித்திருக்கிறேன் என்று பொய் சொல்ல விருப்பமில்லை நந்தினி எனக்கு. அதுசரி, அவனுக்குப் புகழ் சேர்த்தவை எந்த மாதிரியான எழுத்துக்கள். குறிப்பாக ஏதாவது இருக்க வேண்டுமே''

''மிஸ்டர் ஹரி, ஏதுமே தெரியாத அப்பாவிபோல நடிக்காதீர்கள். அதுவும் என்னிடம். நீங்களும் ரமேஷும் எப்படிப் பழகினவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் நான் அவருடைய காதலியாக இருந்தவள்.''

''நான் நடிக்கவில்லை.... எனக்குப் புரியாத சில விஷயங்களைப் பற்றிக் கேட்டேன். அவ்வளவுதான். அது தவறா?''

ஒருவிநாடி மௌனமாக ஹரியையே துளைப்பதுபோலப் பார்த்தவள் கூறினாள்:

''உங்க டெலிபோன் நம்பர் என்ன சார்?''

''டெலிபோன் டைரக்டரியில் இருக்கு சார்.''

''உங்க அட்ரஸ்?''

''அதுவும் டைரக்டரியிலேயே இருக்கு.''

''உங்க பேர் சார்?''

''யார் சார் நீங்க. அட்ரஸ் போடற வங்க பேர் போடாமலா போறுவாங்க? அதுவும் அதிலேயே இருக்கு.''

—சாமி



''ரமேஷ் ஆராய்ச்சி மேற்கொண்டு வெளிநாடு சென்றதற்கும் அவனது மரணத்துக்கும் ஏதோ தொடர்பிருக்கவேண்டும் என்று நினைக்கிறீர்கள் — நான் நினைப்பது போலவே! ரயிலிலிருந்து தவறி விழுந்ததினால் மரணம் சம்பவிக்கவில்லை என்று கருதுகிறீர்கள் அப்படித்தானே ஹரி?''

''உன் அபிப்பிராயங்களை என் மீது திணித்து அதற்குச் சாதகமாக என்னிடமிருந்து ஒப்புதலைப் பெற முயற்சிக்காதே நந்தினி. நீ கூறியது போலெல்லாம் நான் ஏதும் சந்தேகப்படவில்லை. அந்த ரீதியில் நான் உன்னிடம் கேட்கவுமில்லை.'' என்று கூறிய ஹரியின் மனதுக்குள் வேறு விதமான எண்ணங்கள் ஓடின — 'உன்னிடம் இப்போது இதைப் பற்றியெல்லாம் கூறப்போவதில்லை நந்தினி. நீ ரொம்பப் படபடப்புக்காரி. என் சந்தேகங்களை உன்னிடம் தெரிவித்தால் அபாயங்களை வலிய வரவழைத்துக் கொண்டதாகிவிடும்.''

''கடைசியாக ரமேஷ் எழுதிக் கொண்டிருந்த புத்தகத்தைப் பற்றியாவது தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டாள் நந்தினி.

''தெரியாது—''

''புராதனக் கல்வெட்டுக்கள், நாணயங்கள், ஆபரணங்கள் இவற்றில் ரமேஷுக்கு எப்போதுமே ஒரு ஈடுபாடு உண்டு. போன வருஷம் வேடிக்கையாக ஒரு விஷயம் எழுதி இருந்தார். நரிக் கொம்பைப் பற்றி.

''நரிக்கொம்பா?''

''ஆமாம். நாகரத்தினம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே?''

''நல்ல பாம்பின் தலையில் அபூர்வமாகத் தோன்றக் கூடிய ஓர் விலைமதிப்பற்ற கல் என்று புராணக் கதைகளில் வருவதைப் படித்திருக்கிறேன். 'அப்படியொரு கல் கிடையாது வெறும் நம்பிக்கைதான்' என்றும் கூறக் கேட்டிருக்கிறேன்'' என்றான் ஹரி.

''ரமேஷுக்கு இம்மாதிரியான நம்பிக்கைகளில் ஒரு பிடிப்பு — ஈடுபாடு — உண்டு. பழங்கால மக்களின் நம்பிக்கைகளுக்கு மதிப்பளித்து 'ஏன் அப்படி இருந்திருக்கக் கூடாது' என்று வினா எழுப்பி அதைக் காரண காரியங்களோடு உறுதிப்படுத்தும் ரமேஷின் எழுத்துக்களிலே ஓர் அழுத்தம் உண்டு.

''வழக்கமாக அவர் தன் பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் ''சிந்தனைச் சிதறல்கள்'' என்ற தலைப்பில் பல்வேறு விஷயங்களைப் பற்றித் தன் கருத்துக்களைக் கூறி வந்தார். அதில் ஒன்றுதான் இந்த நரிக்கொம்பு விஷயம்.''

''திடீரென்று ஒருவனுக்கு அதிர்ஷ்டம் வந்தால் இன்று அவன் நரி முகத்தில் விழித்திருக்கிறான் என்று கூறுவார்களில்லையா? நல்லதைத் தரக்கூடிய சக்தி நரிக்கு உண்டு என்பது தொன்று தொட்டே நம்பப்படும் ஒரு விஷயம். நரியின் உருவத்தைப் பார்த்தாலே அதிர்ஷ்டம் வரும் போது அந்த நரியின் கொம்பே ஒருவனிடம் இருக்குமானால்? இப்படியாகத் தன் சிந்தனைச் சிதறல்களில் சில விஷயங்களை எழுதிக்கொண்டு போனார் ரமேஷ் — இடத்தை நிரப்புவதற்கான அக்கப்போர் என்றுதான் நான்கூட முதலில் நினைத்தேன். ஆனால் நெடுங்காலம் வாழும் பாம்பின் தலையில் எப்படி ரத்தினம் தோன்றுமோ அப்படியே கிழட்டு நரியின் தலையில் கொம்பு அபூர்வமாகத் தோன்றும். அத்தகைய கொம்பு யாரிடமிருக்கிறதோ அவர்கள் இவ்வுலகையே ஆட்டிப் படைக்கும் வல்லமை பெற்றவர்களாக விளங்குவார்கள். எதையும் சாதிக்கும் திறனை அந்த நரிக்கொம்பு அவர்களுக்கு அளிக்கும் —'' என்று ஆதாரபூர்வமாகவும் இதை அவர் விளக்க முற்பட்ட போது ஆர்வம் கூடியது. புராதனக் கோயில் சிற்பங்களில் ஒற்றைக் கொம்போடு கூடிய நரியின் தலை செதுக்கப்பட்டிருப்பதை ஆதாரமாக வெளியிட்டார்.'' (தொடரும்)



பட விமரிசனம்

தேவைகள்

சில நேரங்களில் சில படங்கள் — நாம் எதிர்பார்த்ததற்கும் மேலாகச் சிறப்பாக அமைந்து விடுவதுண்டு. சில நேரங்களில் சில நடிகர்களும் — அவர்களைப் பற்றி நாம் உருவாக்கிக் கொண்டிருக்கும் 'இமேஜை' உடைத்தெறிந்து அபாரமாக நடித்துவிடுவதுமுண்டு. இந்த இரண்டு அதிசயமும் 'தேவைக'ளில் நிகழ்ந்திருக்கிறது. கதையில் வலியுறுத்தும் விஷயங்கள் நம் எல்லோருக்குமே தெரிந்த சமாசாரமானாலும் இன்றைய வாழ்க்கைக்குத் தேவையாக இருப்பதால் தேவைகள் கதையின் சம்பவங்கள் ரசிகர்களை 'அப்ளாஸ்' செய்ய வைக்கின்றன. கருத்தான வசனங்கள், நறுக்குத் தெறித்தாற்போலவும் இதயத்தில் பதியும்படியாகவும் அமைந்துள்ளன. படம் கறுப்பு வெளுப்பிலிருப்பதும் கூட கதாநாயகனின் குறிக்கோளான 'பட்ஜெட் போட்டு வாழும்' தத்துவப்படி எடுக்கப்பட்டிருக்குமோ என்று எண்ண வேண்டி இருக்கிறது. அதனால் தரம் குறைந்துவிடவில்லை.

அடக்கமாக, அளவாக, ஆர்ப்பாட்டமின்றி அவ்வளவு கச்சிதமாக நடித்திருக்கிறார் பட்ஜெட் போட்டு வாழ்ந்து உயரும் கிருஷ்ண மூர்த்தியாக ஜெய்கணேஷ். பாராட்டுப் பெறத் தகுதியுடையவராகிறார். அவருக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் நடித்து நல்ல பெயரைத் தட்டிக் கொண்டு போகிறார் சுமித்ராவும் இந்தப் படத்தில்.

தங்கவேலுவின் ஹாஸ்யம் என்றால் அது தரமுள்ளது என்று சொல்ல வேண்டுமா என்ன?

நிறையப் புது முகங்களை அறிமுகப்படுத்தி இருந்தாலும் அதனால் படம் பாதிக்கப்படவில்லை. எல்லாருமே பாத்திரமறிந்து பாடுபட்டுச் செய்திருக்கிறார்கள். வில்லன் பாசறையிலிருந்து விலகிப்போனதினால் ஸ்ரீகாந்தின் நடிப்பை ரசிக்க முடிகிறது — கொஞ்சமானாலும்.

நாடக மேடையில் பிரபலமான கதையைப் படமாக்கி இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. காட்சி அமைப்பு, வசனங்களில் நாடக மேடை வாடை வீசினாலும் சுதாரித்துக் கொண்டு விடுகிறது திரைப்படம்!

பாடல்கள் போரடிக்கவில்லை. ஒலி ஒளிப் பதிவுகளும் தேவைகளுக்குக் கைகொடுக்கின்றன.

'வீட்டுக்குள் இருக்கும்வரை அவள் பெண். அவளே படி இறங்கி ரோட்டுக்கு வந்து விட்டாளானால் அவள் பண்' — நெறி தவறிப் போகும் பெண்ணுக்கு உதாரணம் காட்டிப் பேசப்படும் வசனம் இது. இப்படித் தரமான வசனங்களைத் தேவைக்கு ஏற்றாற் போலத் தந்திருக்கிறார் வசனகர்த்தா. கதை வசனம் டைரக்ஷன் ஆகிய மூன்று பொறுப்புக்களையும் ஏற்றுத் திறம்படச் செய்திருக்கும் ரவிசங்கருக்கு நல்ல எதிர்காலமிருக்கிறது.

திரு எம்.ஆர். ராதா இப்போது பல படங்களில் தோன்ற ஆரம்பித்திருக்கிறார். மகிழ்ச்சி. ஆனால் அவரது கொள்கைகளை அவர் நடிக்கும் படங்களில் புகுத்துவதற்காகச் சந்தர்ப்ப சூழலுக்குப் பொருந்தாதபடி வசனங்களைப் புகுத்தி அவரைப் பேச அனுமதிப்பது விரும்பத் தக்கதல்ல. அவர் கொள்கைகளை ஏற்காதவர்களுக்கு வேதனையாக இருக்குமென்பதை உணர வேண்டும்.

— கௌசிகன்



புதுக்காதலி: ஏன்னு? உங்களுக்கு டென்னிஸ் ரொம்பப் பிடித்தமான விளையாட்டு என்பது எதனாலே என்கிறது எனக்குப் புரிஞ்சு போச்சு!

புதுக்காதலன்: அது ஜெண்டில்மன் விளையாட்டு!

புதுக்காதலி: லேடீஸ்ும் அழகா ஆடுவாளாக்கும்! ஒவ்வொரு கேமிலும் 15-Love 30-Love 40-Loveன்னு ஒரே 'லவ்' மயமாயிருக்கே! அதனாலே உங்களுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு! அப்படித் தானே?

புதுக்காதலன்: பார்த்தாயா அதிசயத்தை? நன்னு ஆடினு பாயிண்ட்: தப்பா ஆடினுல் லவ்!

• • •

அப்பாராவ் ஸ்டேடியம்.

''சசிமேனன் ஜெம்போ ஜெட் மாதிரிப் பறந்து பாய்ந்து அடித்து நொறுக்குகிருரே!''

''அவர் ஏர் இந்தியா அதிகாரி; அவரது மனைவி ஏர் ஹோஸ்ட்டஸ்! சசிமேனன் வருஷம் முழுக்க ஜம்போ ஜெட் மாதிரி பறந்து பறந்து மாட்ச் ஆடறது தான் அவருக்குப் பழக்கம்! அது அதிசயமில்லே!''

''அதோ பாம்பு மாதிரி வளைந்து எந்தப் பந்தையும் எதிர்ப்பக்கம் தள்ளுகிருரே, அவர் யாரு?''

''ராஸ் கேஸ்! 'பாம்பு' என்றே அவருக்குச் செல்லப்பெயர்! ஆஸ்திரேலியக் கோஷ்டியில் குள்ளமான ஆசாமி! கேஸ் தள்ளும் அருமையான 'ஷாட்'களுக்கு 'மாஸ் அப்பீல்' கிடைச்சுடுத்து!''

''ராஸ் கேஸுக்குத் தம் தந்தையின் பண்ணையிலே கடுமையா இரவு பகல் பாராம உழைச்சுப் பால் கறந்து, பழக்கப்பட்ட உரமேறிய கைகள்! டென்னிஸ் ஆட்டத்திலும் அவர் நன்னு ஸ்கோரைக் கறந்து எடுத்துடுவாரு!''

''ஜெம்போ ஜெட் படுத்துப் போச்சு! ராஸ் கேஸ் வெற்றி பெற்றுவிட்டாரு. கிருஷ்ணன் 'குடை' பிடித்த 'சசிமேனன்' அம்பேல் ஆயிட்டாரே!''

''கவலைப் படாதீங்க! விஜய் அமிர்தராஜ் அலெக்ஸாண்டரை ஒரு கை பார்த்துவிடுவாரு!''

''ஸார்! உங்க வாக்கு பொய்த்துப்போச்சு. முதல்நாள் ஆஸ்திரேலியாவுக்கு 2 வெற்றி! இந்தியாவுக்கு இரு தோல்வி!''

''நாளைக்கு இரட்டையர் ஆட்டத்திலே விஜய் ஆனந்த் சகோதரர்கள் ஜமாய்த்துவிடுவார்கள், பாருங்களேன்!''

''இன்று போய் நாளைவா என்பது ராமராஜ்யத்திலே! டென்னிஸ் ஆட்டத்திலே அப்படி நடக்குமா?''

''பொறுத்திருங்கள், காலம் மாறும்!''

• • •

மறுநாள். தந்தையும் மகனும் சேர்ந்து காரை விட்டு இறங்குகிருர்கள். (டென்னிஸ் மைதானத்தில் அல்ல!) அவர்கள் இருவரும் கிருஷ்ணனும் ரமேஷும்தான்!

''ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்களைப் பற்றி நீங்க குறைவாக எடை போடப் படாது! நம்ம ஆட்டக்காரர்களைப் பற்றியும் குறைவாக எண்ணுதீர்கள்!'' என்ருர் கிருஷ்ணன். டென்னிஸில் பண்புக்குப் பேர் போனவராயிற்றே!

''ரமேஷுக்கு டேவிஸ் கோப்பையில் சான்ஸ் கிடைக்கலே!'' என்று இழுத்தேன்.

''கவலைப் படாதீர்கள். ரமேஷ் விம்பிள்டன் போட்டியில் கலந்து கொள்ளப் போகிருன். அப்படியே அமெரிக்கப் போட்டிகளிலும் பங்கேற்பான்!''

''வருஷத்தில் இப்படி ரமேஷ் ஊர் சுற்றிக் கொண்டிருந்தால் அவனது படிப்பு?''

''ரமேஷ் விவேகானந்தா கல்லூரியில் பி.ஏ (பொருளாதாரம்) படிக்கிருன். வருஷத்தில் 11 மாதங்களுக்கு வெளிநாடுகள் சென்று ஆடுவதற்கு அவனது கல்லூரி பெருந்தன்மையுடன் அனுமதி வழங்கியிருக்கிறது! சென்னையில் தங்கியிருக்கையில் அவன் மாலையில் டென்னிஸ் பிராக்டீஸ் பண்ணிவிட்டு, ஆறுமணிக்குக் கல்லூரி சென்று, அங்கே தனியாக அமர்ந்து பரீட்சை எழுதி விட்டு வருகிருன்!'' என்ருர் கிருஷ்ணன்.

''டென்னிஸும் படிப்பும் ஒன்றுக்கொன்று சேர்ந்து அமையறது - அபூர்வம்!''




✕ நளினா ஆட்டத்தில் விஜய் அமிர்தராஜ்!

அமிர்தராஜ் தந்த ஆனந்தம்







2. தனியர் ஆட்டத்தில் ராஸ் கேஸ்!
3. தனியர் ஆட்டத்தில் சிமோனன்
4. விழுந்து புரண்டு பந்தைத் தள்ள முயலும் ராஸ் கேஸ்!

''பழைய தலைமுறையினனான நான் அன்று சொன்னேன், டென்னிஸ் என் படிப்புக்குக் குறுக்கே நிற்கிறதென்று! இளைய தலைமுறை ரமேஷ் சொல்கிறான், படிப்பு அவன் டென்னிஸுக்குக் குறுக்கே நிற்கிறதே என்று! மாடர்ன் ஜெனரேஷன் சிந்தனை அப்படி!''

● ● ●

இரட்டையர் ஆட்டத்துக்குச் 'சூடு' பிடிக்க விஜய் அமிர்தராஜ் கைவிரல்கள் பயிற்சிகள் செய்து கொண்டிருந்தார்!

''விஜய்! நீங்க இப்போ யோகாசனப் பயிற்சி தினம் செய்து வருவதாகக் கேள்விப் பட்டேன். உண்மைதானா?''

''என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்! நான் 'டிரிம்' ஆக இருப்பதே யோகாசனப் பயிற்சியினாலேதான். தினம் மாட்ச் இல்லாத நாளில் முக்கால் மணிநேரம் பத்துப் பன்னிரண்டு வகை ஆசனங்களைச் செய்கிறேன்! மாட்சுகள் உள்ள நாளில் அரைமணி நேரமே யோகாசனத்துக்கு ஒதுக்க முடிகிறது!'' என்றார் விஜய் அமிர்தராஜ்.

● ● ●

இரண்டாம் நாள் விஜய், ஆனந்த் சகோதரர்கள், மாஸ்டர், கேஸை இரட்டையர் ஆட்டத்தில் தோல்வியடைய வைத்தனர். மாஸ்டர், கேஸ் 'டபிள் பால்ட்' சர்விஸ்கள் பல போட்டு இந்திய வெற்றிக்கு உதவிய 'பெருந்தன்மை'யைப் பாராட்டத்தான் வேணும்! டபிள் பால்ட் 'சர்விஸ்' வாழ்க!

அண்ணன் ஆனந்த் தவறு இழைக்கும் போது பந்தால் தம் தலையில் அடித்துக் கொண்டார்! தம்பி விஜயைக் கோபித்துக் கொண்டார்! பந்தை மைதானத்துக்கு வெளியே அடித்துக் கோபத்தைத் தணித்துக் கொண்டார்! அவர் 'Temperament' அப்படி!

அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல முதல்வர் எம். ஜி. ஆர். ஸ்டேடியம் ஸ்டாண்டிலிருந்து குதித்து (ஸ்டண்ட் அல்ல!) இரு சகோதரர்களையும் கட்டிப் பிடித்துத் தழுவிப் பாராட்டினார்! அமிர்தராஜ் சகோதரர்கள் தந்த ஆனந்தத்துக்கு 'எண்ணிக்கை' இல்லை!

● ● ●

''கேஸுக்கு முழுப் பெயர் ராங் கேஸா? ராஸ் கேஸா?''

''எதற்குக் கேட்கிறீர்கள்?''

''விஜய் ஆட்டம் ராஸ் கேஸை ராங் கேஸாக மாற்றிடுத்து!''

● ● ●

''இந்தியாவை முற்றுகையிட்ட அலெக்ஸாண்டர் படம் எங்கே?''

''இந்திய முற்றுகையில் வாகை சூடி, நியூஸிலாந்து முற்றுகைக்குப் பறந்து விட்டாரே! இப்பொழுது ஆஸ்திரேலியர் உள்ளங்களில் அவர் குடியேறி விட்டார்!''

—குண்டுமணி

படங்கள்: என். பாலாஜி



நேருஜி விருது பெற்ற குருஜி

ஏ. ஆர். ஆர்

புது தில்லியில் சகல நவீன வசதிகளும் நிறைந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றின் எட்டாவது மாடியில் எண்பத்தி ஆறும் எண்ணுள்ள அறையில் ஜப்பானிய நாட்டு முதுபெரும் பண்டிதரும் குருமஹராஜ் என வணங்கப்படுபவருமான 94 வயதுள்ள பெரியவரைச் சந்திக்கிறோம். குருஜிக்கு 1978-ம் ஆண்டின் நேரு விருது வழங்கப்பட விருந்த நேரமது. தாம் தங்கியிருந்த ஹோட்டல் அறையை அந்தப் பெரியவர் ஒரு 'மினி' பௌத்த மடாலயம் போல் தோற்றமளிக்கச் செய்திருந்தார்! பௌத்த சந்நியாசியான தம்முடைய அன்னையின் உருவப் படத்தையும், பௌத்த ஆலயச் சின்னங்களையும், எங்கு சென்றாலும் எடுத்துச் செல்வது அவர் வழக்கமாம்! காவிக் கொடிகள் வேறு.

பெரியவர் பேசத் தொடங்கினார்:

''50 ஆண்டுகளுக்கு முன்பு முதன் முறையாகப் பாரதம் வந்திருக்கிறேன். புத்தபிரானின் போதனைகளை நெஞ்சில் சுமந்து, பாரதிய மண்ணில் சுற்றுலா மேற்கொண்டபோது, நான் பெற்ற அனுபவங்கள் மகத்தானவை.

''1933-ல் வார்தா ஆசிரமத்தில் காந்திஜியைச் சந்தித்தேன். எனக்கு இந்திய, ஐரோப்பிய மொழிகளில் எதுவுமே பேசவோ, எழுதவோ வராது. எனவே எங்களுக்கிடையே வெளிப்படையான பேச்சு வார்த்தைகளை நிகழ்த்திக் கொள்ள முடியவில்லை. என்றாலும், உள்ளுணர்வுகள் இருவரையும் பிணைத்தன. சர்க்காவில் காந்திஜி நூல் நூற்பதைப் பார்த்துக்கொண்டு அவர் முன்பு மௌனமாக அமர்ந்திருந்தபோது, யோக மார்க்கமும், ஞான மார்க்கமும் கர்ம மார்க்கத்திலிருந்தே தோன்றுகின்றன என்கிற மஹாவாக்கியத்தின் பொருளைக் கற்றேன்!

''உலகுக்கு காந்திஜியின் போதனைகளைப் போல் உதவக்கூடிய உருப்படியான, உன்னதத் தத்துவங்கள் வேறு எதுவுமில்லை. மேற்கத்திய நாடுகளின் ஆர்ப்பாட்ட, ஆடம்பர முறைகளே, உலகைக் கெடுபிடி யுத்தங்களுக்கு உள்ளாக்கும் 'அபாயகரமான' சாதனங்களாக விளங்குகின்றன. இந்தியா, ஒருபோதும் இத்தகைய வாழ்க்கை நெறிகளுக்குத் தன்னைப் பழக்கப் படுத்திப் பலியாகிவிடக் கூடாது.

'பௌத்தமதம், அதன் உன்னதக் கோட்பாடுகளினால் பிரசித்தம் பெற்றதாயிற்றே; அதனால் உலகில் ஒருமைப்பாட்டையும், அமைதியையும் நிலவச் செய்ய இயலாதா?' என்கிற கேள்விக்கு பூஜ்யர் பூஜீ. (Venerable Nichidatsu Fujii) அளிக்கும் பதில்: ''பாரதீயப் பண்பாட்டையும், சமய தத்துவங்களையும் உலகம் ஒருமனதாகப் பின்பற்றும் காலம் வெகு தொலைவில் இல்லை. காரணம், அவையே அனைத்துலக நாடுகளுக்கும் ஏற்ற, இசைவான அறநெறிகளாகும்.''

பௌத்தம் பிறந்தது பாரத மண்ணில். ஆனால் அந்த மதம் இங்கு வேரூன்ற முடியாமல் போனதற்கும் இதே பதிலைத்தான் சொல்லுகிறார் பெரியவர் பூஜீ. பூஜ்யர் பூஜீ, நேரு விருது மூலம் கிடைக்கும் லட்ச ரூபாயை, தில்லியிலுள்ள காந்தி சமாதி (ராஜ்காட்) அருகில், சமாதான ஆலய மொன்றை (Peace Pagoda) நிர்மாணிப்பதற்காக வழங்கிவிட முடிவு செய்து விட்டார். ஜப்பானிய-பாரத கலாசார நட்புறவு சங்கத்தின் தலைவராகவும் திகழ்கிறார் பூஜ்யர் பூஜீ.

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Guindy, Madras-600032. Editor: K. Rajendran


RUBY DUST
மேலும் பல கோப்பைகள்
சிறந்த ஸ்ட்ராங்கான டீ
என் குடும்பத்திற்கு
மேலும் பல
கோப்பைகள் சிறந்த
ஸ்ட்ராங்கான டீ
கிடைக்கின்றன--
ரூபிக்கு நன்றி.
RUBY DUST
லிப்டன்
ரூபி
டஸ்ட்
LRDC/CAS-1/78 TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு

